T. 2104

T. 2104

உ

சிவ சிவ

திருச்சிற்றம்பலம்

மெய்ஞ்ஞானத் திருமுறை

[முதற் பகுதி]

★

மன்மத ஆண்டு விஜயதசமி வெளியீடு

26—10—1955

★

ஸ்ரீ காசிமடம் :—: திருப்பனந்தாள்

உ

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடுகள்

		ரூ.	அ.
1	விநாயகர் திருமுறை	0	1
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் குறிப்புரையுடன்	6	0
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்... ...	3	0
4	திருஞானசம்பந்தர் தேவாரம்	2	8
5	திருநாவுக்கரசர் தேவாரம்	1	0
6	சுந்தரர் தேவாரம்	1	0
7	திருவாசகம்	0	6
8	திருக்கோவையார்—பேராசிரியர் உரை ...	2	0
9	ஒன்பதாம் திருமுறை—திருவிசைப்பா திருப்பல்லாண்டு	0	9
10	திருமந்திரம்—செய்யுள்	1	8
11	பதினோராந் திருமுறை	1	4
12	அம்மையார்—அற்புதத் திருவந்தாதி ...	0	4
13	திருக்கைலாய ஞானவுலா	0	8
14	பெரியபுராணம்—செய்யுள்	2	8
15	பெரியபுராணம்—வசனம்	2	0
16	அகத்தியர் தேவாரத் திரட்டு—குறிப்புரை ...	0	6
17	திருவிளையாடற்புராணம்—செய்யுள்	3	0
18	திருவிளையாடற்புராணம்—வசனம்	2	4
19	தாயுமான சுவாமிகள் பாடல்	1	4
20	கந்தபுராணச் சுருக்கம்—செய்யுள்	1	12
21	கந்தபுராணம்—முதல் மூன்று காண்டங்கள் ஆராய்ச்சிக் குறிப்புடன்	2	12
22	ஷை யுத்த காண்டம், தேவ காண்டம் ...	1	12
23	ஷை தக்ஷ காண்டம் குறிப்புரை	1	8
24	கந்தபுராணம்—வசனம்	2	8
25	கந்தர் அலங்காரம் குறிப்புரை	0	4
26	கந்தர் அனுபூதி ஷை	0	2
27	கந்தர் கலிவெண்பா—ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	0	6

|

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து இலவச வெளியீடு

உ

சிவ சிவ

திருச்சிற்றம்பலம்

மெய்ஞ்ஞானத் திருமுறை

[முதற் பகுதி]

★

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ

காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்

அவர்களுடைய திருவுளப்பாங்கின்படி

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் இளவரசு

ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

அவர்களால் தொகுத்து வெளியிடப்பெற்றது

★

மன்மத ஆண்டு விஜயதசமி நன்னுள்

உரிமைப் பதிவு] : : [அக்டோபர் 1955

சிவ சிவ

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி

அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

நிறுவிய தருமங்கள்

எண்	தரும விவரம்			மூலதனம் ரூபாய்
1.	திருமுறை வளர்ச்சிக்காக	24	தருமங்கள்	3,29,000
2.	கல்வி அபிவிருத்திக்காக	43	ஷை	5,53,700
3.	சைவசித்தாந்தம் பரப்ப	7	ஷை	1,56,000
4.	அன்னதானம் செய்ய	76	ஷை	17,74,500
5.	வைத்தியம் செய்ய	5	ஷை	1,22,500
6.	பொது தருமங்கள் — ஸ்நான கட்டம், அகதி நன்கொடை, தண்ணீர்ப் பந்தல், ஒளிவளர் விளக்குகள், பசுப் பரிசு, கல்லெழுத்து முதலியன	41	ஷை	2,94,745
	ஆகத் தருமங்கள்	196-க்கு		32,30,445

வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க ; அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க ; குக்குடம் வாழ்க ; செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க ; யானைதன் அணங்கு வாழ்க ;
மாறிலா வள்ளி வாழ்க ; வாழ்கசீர் அடியார் எல்லாம்.

—கந்தபுராணம்.

உ

செந்திலாண்டவன் துணை

முன்னுரை

அம்மையப்ப னுய்உயிருக்(கு) ஆதார மாய்நிறைந்த
செம்மைசிவன் தாள்என் சிரம்.

—சித்தாந்த தரிசனம்.

உலகிலுள்ள உயிர்கள் எல்லாம் இன்பத்தையே நாடுகின்றன. இன்பம் உலக இன்பம், கடவுள் இன்பம் என இருவகைத்து; உலக இன்பம் நிலையில்லாதது; என்றும் நிலையுள்ளது கடவுள் இன்பமாகிய வீட்டின்பமே ஆகும். உலக இன்பங்களுள் தலை சிறந்தது, தம்முள் ஒத்த அன்பினராய தலைவன், தலைவி உடனுறைவதால் உளதாகிய இன்பமேயாகும். அவ்வின்பம் காரணமாகத் திகழும் ஒழுக்க முறைகளே **அகப்பொருள்** எனப்பெறும்.

தெய்வ இன்பம் பெற விழையும் அடியவர்கள் தம்மை நாயகியாகவும், இறைவனை நாயகனுகவும் பாவித்து நாயகி நாயக பாவனையில் வழிபடுதல் மரபாகும். இதனைக் "கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம்" எனப் பாடாண் திணையுள் கூறப்பெறும் துறையாலும், சைவசமயாசாரியர்கள் இறைவனை வழுத்திய தேவாரப் பாக்களில் ஆங்காங்கே அகப்பொருள்துறை அமையப் பாடி இருத்தலாலும் நன்கு அறியலாம்.

இவ்வாறு இறைவனை அடைய மெய்ஞ்ஞானமாகிய தெய்வ இன்பத்தை பெறுவான் வேண்டித் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடியருளிய தேவாரத் திருமுறைகளில் அகப்பொருட்டுறை அமைதி தோன்றிய திருப்பாடல்களைமட்டும் தொகுத்து, "**மெய்ஞ்ஞானத் திருமுறை**" என்ற பெயருடன், எங்கள் மாபெருந்

தலைவர், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் அதிபர் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்** அவர்களின் திருவுளப் பாங்கின்படி **ஸ்ரீ காசிமடத்தின் மன்மத ஆண்டு விஜயதசமி விழா மலராக** அந் நன்னாளில் வெளிவருகின்றது.

இவ்வெளியீடு, முதல் ஏழு திருமுறைகளில் அகப்பொருள் துறை அமைதி தோன்றும் 31 பதிகங்களில் உள்ள பல பாடல்களைக் கொண்டுள்ளது. பாக்களின் பொருளை எளிதில் கண்டு உணருமாறு சிறு குறிப்பும், அகப்பொருட்டுறை அமைதியும் ஆங்காங்கே தரப்பெற்றுள்ளன. **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள்** தமிழ் நலங்கருதியும், சைவசமய வளர்ச்சிபற்றியும், பிற பொதுநலப்பணிக்கும் அவ்வப்போது அருள்புரிந்த பேரறக்கட்டளைகளின் தொகுப்பும் முன்னர் சேர்க்கப் பெற்றுள்ளது.

இவ்வெளியீடு நன்கு அமையுமாறு உறுதுணை புரிந்த திருச்சிராப்பள்ளி **வித்துவான் திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்** அவர்கட்கும் ஏனைய அன்பர்கட்கும் செந்திலாண்டவன் திருவருள் நின்று நிலவுவதாக!

இச்சீரிய மெய்ஞ்ஞானத் திருமுறைத் தொகுப்புப் பணியினை அடியேற்கு அருளிய **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள்** அவர்களின் திவ்ய திருவடிக் கமலங்கள் என்றும் அடியவன் சிரத்திற்கு அணியென அமைவனவாக. அவர்கள் திருவடி பல்லாண்டு பல்லாண்டு வாழ்க என வாழ்த்தி வழிபடுகின்றேன்.

இங்ஙனம்,

மகாலிங்கத் தம்பிரான்

இளவரசு.

ஸ்ரீ காசிமடம்,
திருப்பனந்தாள்,
26—10—'55.

உ
சிவ சிவ
செந்திலாண்டவன் துணை
திருச்சிற்றம்பலம்

மெய்ஞ்ஞானத் திருமுறை
[முதற் பகுதி]

கணபதி துதி

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

—சம்பந்தர் தேவாரம்.

திருஞானசம்பந்த சுவாமிகள்
தேவாரம்
1. திருப்பிரமபுரம் *

பண் - நட்டபாடை *[1-ஆம் திருமுறை]*

திருச்சிற்றம்பலம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசிஎன் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 1

---

* இத் திருப்பதிகம் தலைவன்பால் உள்ளத்தை இழந்த தலைவி வருந்தும் நிலையில் அமைந்துள்ளது; இது நிறையழிதல் என்ற துறையாகும்.

திருஞானசம்பந்த சுவாமிகள், தமக்கு ஞானப்பால் ஊட்டி ஆட்கொண்டருளிய தோணியப்பரைத் தம் தந்தையாருக்குச் சுட்டிக்காட்டி ஓதியருளியது இப்பதிகமாகும்.

1. தோடு - காதணி. விடை - இடபம். சுடலை - சுடுகாடு. பொடி - திருவெண்ணீறு. என் உள்ளம் - என்னுடைய மன உறுதிப்பாட்டை;

முற்றலாமையிள நாகமோடேன முளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகல னுப்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்ட லுடை யார்பெரியார்கழல் கையால்தொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 2

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண் மதிசூடி
ஏர்பரந்தவின வெள்வளைசோரஎன் னுள்ளங்கவர்கள்வன்
ஊர்பரந்தவுல கின்முதலாகிய ஓரூரிதுவென்னப்
பேர்பரந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 3

விண்மகிழ்ந்தமதி லெய்ததுமன்றி விளங்குதலையோட்டில்
உண்மகிழ்ந்தபலி தேரியவந்தென துள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தஅர வம்மலர்க்கொன்றை மலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 4

ஒருமைபெண்மையுடை யன்சடையன்விடை யூரும்மிவனென்ன
அருமையாகவுரை செய்யவமர்ந்தென துள்ளங்கவர்கள்வன்

ஏடு - இதழ். மலரான் - பிரமன். முனைநாள் - முற்காலத்தில். பீடு - பெருமை. பிரமாபுரம் - பிரமன் பூசித்த தலம்; சீகாழி. பெம்மான் - பெருமான். இவன் - இவன் ஆகும்.

2. முற்றல் ஆமை - வயது முதிர்ந்த ஆமை; இங்கு அதன் ஓட்டினைக் குறிக்கும். ஏனம் - பன்றி. வற்றல் ஓடு - தசை வற்றிய மண்டை ஓடு. கலன் - பாத்திரம். கற்றல் - இறைவன் புகழையே கற்றல். பெற்றம் - இடபம்.

3. நீர் - கங்கை, நிமிர் - நீண்ட. புன் - புல்லிய. ஏர் - அழகு. வெள்வளை - வெள்ளிய சங்கு வளையல்கள். சோர - (விரகமிக்கு உடல் இளைத்து) நெகிழ. ஊர்பரந்த - ஊர்கள் நிறைந்த. பேர் - பெரும்புகழ்.

4. விண் மகிழ்ந்த - ஆகாயத்தில் பறத்தலைப் பொருந்திய. மதில் - மதிலையுடைய திரிபுரம்; பொன், வெள்ளி, இரும்பாலாகிய கோட்டைகள். எய்ததும்-அழித்ததும். மண்-மண்புற்றை (இடமாக). பெண் - உமாதேவியார். பலிதேர வந்தவன் என் உள்ளங் கவர்ந்தார் என்றது மலமகற்றித் தமதாக்கிக்கொண்டார் என்பதைக் குறிப்பித்தவாறும்.

5. ஒருமை - ஒருபாகத்தில். பெண்மை - உமாதேவியை. சடையன்-பெண்மையுருவில் பின்னிய சடையும், ஆணுருவில் அமைந்த சடையும் உடையவன். உரைசெய்ய - தோழியர் தலைவன் இயல்பைக்

கருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததோர் காலம்மிதுவென்னப்
பெருமைபெற்றபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 5

மறைகலந்தவொலி பாடலோடாடல ராகிமழுவேந்தி
இறைகலந்தவின வெள்வளைசோரஎன் னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடி யார்பொழில்நீடுயர் சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 6

சடைமுயங்குபுன லன்னனலன்னெரி வீசிச்சதிர்வெய்த
உடைமுயங்குமர வோடுழிதந்தென துள்ளங்கவர்கள்வன்
கடல்முயங்குகழி சூழ்குளிர்கானலம் பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 7

வியரிலங்குவரை யுந்தியதோள்களை வீரம்விளைவித்த
உயரிலங்கையரை யன்வலிசெற்றென துள்ளங்கவர்கள்வன்
துயரிலங்கும்முல கிற்பலஊழிகள் தோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 8

தாணுதல்செய்திறை காணியமாலொடு தண்டாமரையானும்
நீணுதல்செய்தொழி யந்நிமிர்ந்தானென துள்ளங்கவர்கள்வன்

கூற. அமர்ந்து - உரையின் வாயிலாக உள்ளத்தில் அமர்ந்து. கருமை - பெருமை. ஓர் காலம் - சர்வ சங்கார காலம்.

6. ஒலி கலந்த மறை - ஒலி வடிவாகிய வேதம். மழு - தீப்பிழம்பு; ஆயுதமுமாம். இறை - மணிக்கட்டு. கறை - இருள். கடி - மணம். பொழில் - நந்தவனம். கதிர் - நிலவொளி.

7. சடை முயங்கு - சடையில் கலந்திருக்கும். அனலன் - திருக்கரத்தில் அனலை உடையவன். சதிர்வு - பெருமை. உடை - ஆடை. உழிதந்து - திரிந்து. கழி - உப்பங்கழி. கானல் - கடற்கரைச்சோலை. பொன் அம் - மிக அழகிய.

8. வியர் - வியர்வை. வரை உந்திய - கயிலைமலையை எடுத்த. இலங்கை அரையன் - இராவணன். செற்று - அழித்து. துயர் - பிறவித் துன்பம். உலகு - கருமபூமி. பல ஊழி - பிரம கற்பம் முதலிய கற்பங்கள். பெயர் - புகழ்.

9. தாள் நுதல்செய்து - திருவடியையும் திருமுடியையும் காணும் பொருட்டுக் குறி வைத்து. இறை - இறைவனை. நீணுதல் - திருமால் பன்றியாய் நீளுதலும் பிரமன் அன்னமாய் ஆகாயத்தில் நீளுதலுமாகிய செயல்கள். வாள் நுதல் - ஒளிபொருந்தியநெற்றி. பேணுதல் - காத்தல்.

வாணுதல்செய்மக ளீர்முதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 9

புத்தரோடுபொறி யில்சமணும்புறங் கூறநெறிநில்லா
ஒத்தசொல்லவுல கம்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறு கவ்வுரிபோர்த்ததோர் மாயம்மிதுவென்னப்
பித்தர்போலும்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 10

திருச்சிற்றம்பலம்

---

2. திருப்பாச்சிலாச்சிராமம் *

பண் - தக்கராகம் [1-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

துணிவளர்திங்கள் துளங்கிவிளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர்கொள்கையர் பாரிடஞ்சூழ
வாரிடமும் பலிதேர்வர்

---

10. பொறியில் - உண்மை உணர்வு இல்லாத. சமண் - சமண சமயத்தவர். புறங் கூற - மறைவான இடத்தில் குறை கூற. நெறி - சிவநெறி. ஒத்த சொல்ல - ஒரே கருத்தைக்கூற. மத்தயானை - கயமுகாசுரன். உரி - தோல். மாயம் இது - இது வியப்பு.

* இத் திருப்பதிகம் தலைவன்பால் அன்பு கொண்ட தலைவியின் துயரங்கண்டு செவிலி இரங்கிக் கூறியதாகும். இது நற்றாயிரங்கல் என்ற துறையுமாம்.

கொல்லிமழவன் பெண்ணின் முயலகநோயைத் தீர்க்க ஓதியருளியது இப்பதிகமாகும்.

1. துணி - கீறு. பணி - பாம்பு. கொள் - கொள்ளுகின்ற. கையர் - திருக்கரங்களையுடையவர். பாரிடம் - பூதம். ஆரிடமும் - எல்லாரிடமும். கோலம் எலாம் செய்து - உடல் அழகு முதலியன எலாம் செய்து. பாச்சிலாச்சிரமம் - இது தற்போது திருவாசி என வழங்குகிறது; திருச்சிராப்பள்ளியை அடுத்துள்ளது. பாச்சில் - பாசி. ஆச்சிரமம் - கோயில். மணிகண்டர் - இத்தலத்து இறைவர் பெயர். மங்கை - இப்பெண்: இவள் கொல்லிமழவன் பெண். இவர் மாண்பு - இவர் தன்மை.

அணிவளர்கோல மெலாஞ்செய்துபாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர்கண்டரோ! **மங்கையைவாட**
மயல்செய்வதோ? இவர்மாண்பே. 1

கலைபுனைமா னுரி தோ லுடை யாடை
கனல்சுட ராலிவர்கண்கள்
தலையணிசென்னியர் தாரணிமார்பர்
தம்மடிகள் ளிவரென்ன
அலைபுனல்பூம்பொழில் சூழ்ந்தமர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
இலைபுனைவேலரோ! **ஏழையைவாட**
இடர்செய்வதோ? இவரீடே. 2

வெஞ்சுடராடுவர் துஞ்சிருள்மாலை
வேண்டுவர்பூண்பது வெண்ணூல்
நஞ்சடைகண்டர் நெஞ்சிடமாக
நண்ணுவர் நம்மைநயந்து
மஞ்சடைமாளிகை சூழ்தருபாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
செஞ்சுடர்வண்ணரோ! **பைந்தொடிவாடச்**
சிதைசெய்வதோ? இவர்சீரே. 3

கனமலர்க்கொன்றை அலங்கலிலங்கக்
கனல்தரு தூமதிக்கண்ணி
புனமலர்மாலை யணிந்தழகாய
புனிதர்கொ லாமிவரென்ன

---

2. கலை - மேலாடை. கனல் - அக்கினி. சுடர் - சூரிய சந்திரர். கண்கள் - முக்கண்கள். தலை - வெண்டலை. இலை புனை - இலைவடிவாகச் செய்யப்பெற்ற. ஏழை - பெண். இவர் ஈடு - இவரது உயர்வு.

3. வெஞ்சுடர் - தீ. துஞ்சு இருள் - அண்டங்களெல்லாம் அழியும் காலமாகிய இருள். இருள் ஆடுவர் என்க. நெஞ்சிடமாக - மனத்தில். நம்மை நயந்து நண்ணுவர் என்க. மஞ்சு - மேகம். பைந்தொடி - பெண். சிதை செய்வது - வருத்துவது. இவர் சீர் - இவரது புகழ்.

4. கனமலர்க்கொன்றை - கார்காலத்து மலரும் கொன்றைப்பூ. (கனம் - மேகம்). அலங்கல் - மாலை. தூமதி - தூய ஒருகலையினை

வனமலிவண்பொழில் சூழ்தருபாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
மனமலிமைந்தரோ! மங்கையைவாட
மயல்செய்வதோ? இவர்மாண்பே. 4

மாந்தர்தம்பால்நறு நெய்மகிழ்ந்தாடி
வளர்சடை மேற்புனல்வைத்து
மோந்தைமுழாக்குழல் தாளமொர்வீணை
முதிரவோர்வாய் மூரிபாடி
ஆந்தைவிழிச்சிறு பூதத்தர்பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
சாந்தணிமார்பரோ! தையலைவாடச்
சதுர்செய்வதோ? இவர் சார்வே. 5

நீறுமெய்பூசி நிறைசடைதாழ
நெற்றிக்கண் ணாலுற்றுநோக்கி
ஆறதுசூடி யாடரவாட்டி
யைவிரற் கோவணவாடை
பாறருமேனியர் பூதத்தர்பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
ஏறதுவேறியர் ஏழையைவாட
இடர்செய்வதோ? இவரீடே. 6

யுடைய மதி. புநிதர் - பரிசுத்தர். வளம் - அழகு. மனமலி - எண்ணத்துள் நிறைந்த. மைந்தரோ - வலிமையையுடையவரோ. மயல் - மயக்கம். மாண்பு - மாட்சிமை.

5. மாந்தர் - இங்கு அடியார்கள். ஆடி - மூழ்கி. புனல் - கங்கை. மோந்தை - மொந்தை என்பதன் நீட்டல் விகாரம். மொந்தை - ஒரு வாத்தியம். முழா - குடமுழா. முதிர - ஒலிக்க. வாய்மூரி - இசை வகை. ஆந்தை விழி - ஆந்தை போன்ற கண்களையுடைய. சாந்து - சந்தனம். சதுர் - துடித்தல். சார்பு - தகுதி.

6. நீறு - திருவெண்ணீறு. ஆறு - கங்கை. ஐவிரல் கோவணம் - ஐந்துவிரற்கடை அளவுள்ள கோவணம். (நால்விரற்கோவணம் என்பதும் ஒரு மரபு). பால்தரு மேனியர் - பால் போன்ற திருமேனியுடையவர்: இது விபூதி பூசியதால் தோன்றும் வடிவு.

பொங்கிளநாகமொ ரேகவடத்தோ
டாமைவெண் ணூல்புனைகொன்றை
கொங்கிளமாலை புனைந்தழகாய
குழகர்கொ லாமிவரென்ன
அங்கிளமங்கையோர் பங்கினர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
சங்கொளிவண்ணரோ! தாழ்குழல்வாடச்
சதிர்செய்வதோ? இவர்சார்வே. 7

ஏவலத்தால்விச யற்கருள்செய்து
இராவண னையீடழித்து
மூவரிலும்முத லாய்நடுவாய
மூர்த்தியை யன்றிமொழியாள்
யாவர்களும்பர வும்மெழிற்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
தேவர்கள்தேவரோ! சேயிழைவாடச்
சிதைசெய்வதோ? இவர்சார்வே. 8

மேலதுநான்முக னெய்தியதில்லை
கீழது சேவடிதன்னை
நீலதுவண்ண னு மெய்தியதில்லை
யெனவிவர் நின்றதுமல்லால்

---

7. பொங்கு - சீறுகின்ற. ஏகவடம் - ஒற்றைச் சரம்; ஒற்றை ஆடையுமாம். வெண்ணூல் - வெள்ளிய பூணூல். குழகர் - இளமையுடையவர். இளமங்கை - உமாதேவியார். சங்கொளி - சங்கின் வெள்ளொளி. சதிர் - சாமர்த்தியம். சார்வு - தகுதி.

8. ஏ - அம்பு. வலத்தால் - வலிமையால். விசயற்கு - அருச்சுனனுக்கு. ஈடு - வலிமை. மூவர் - பிரம, விஷ்ணு, உருத்திரர் என்னும் மூவர். மூர்த்தி - தலைவன். மூர்த்தியன்றி மொழியாள் - இறைவன் புகழினையே பேசுவாள். பரவும் - துதிக்கும். சேயிழை - பெண். சிதை - துன்பம். சேர்வு - சார்பு.

9. மேலது - திருமுடியை. எய்தியது இல்லை - அடையவில்லை. கீழது - பாதாளம்வரை சென்ற. நீலது வண்ணன் - திருமால். நின்றது - மயங்கி நின்றது. ஆல் - ஆலமரம். பாலது வண்ணர் - வெள்ளிய அழகர். பழி - பழிச்சொல் உண்டாக.

ஆலதுமாமதி தோய்பொழிற்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
பாலதுவண்ணரோ! பைந்தொடிவாடப்
பழிசெய்வதோ? இவர்பண்பே. 9

நாணொடுகூடிய சாயினரேனும்
நகுவ ரவரிருபோதும்
ஊணொடுகூடிய வுட்குநகையால்
உரைகள் அவை கொளவேண்டா
ஆணொடுபெண்வடி வாயினர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
பூணெடுமார்பரோ! பூங்கொடிவாடப்
புனைசெய்வதோ? இவர்பொற்பே. 10

திருச்சிற்றம்பலம்

---

3. திருப்பாற்றுறை*

பண் - பழந்தக்கராகம் [1-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

காரார் கொன்றை கலந்த முடியினர்
சீரார் சிந்தை செலச்செய்தார்
பாரார் நாளும் பரவிய பாற்றுறை
ஆரார் ஆதி முதல்வரே. 1

---

10. நாணொடு கூடிய - வெட்கத்துடன் கூடிய. சாயினர் - இழந்தவர்கள். நகுவர் - பரிகசிக்கத்தக்கவர். இருபோது - இருவேளை. ஊண் - உணவு. உட்கும் - அஞ்சத்தக்க. ஆணொடு பெண்வடிவாயினர் - பெண்ணொருபாதியான பெருமான்; அர்த்தநாரீசுவரர். பூங்கொடி - பெண். புனை - கட்டு; துன்பம். பொற்பு - அழகு.

*இத்திருப்பதிகம் தலைவி, தன் உள்ளத்தில் தலைவன் உருவன்றி வேறு ஒன்றும் தோன்றாத நிலையில் கூடியும், பிரிந்தும் அனுபவிக்கும் இன்ப நிலைகள் தோன்றத் தோழிக்குக் கூறியதாகப் பாடப்பெற்றுள்ளது.

1. கார் ஆர் - கார் காலத்தில் மலரும். சிந்தை செலச்செய்தார் - மனத்தைத்தம்மிடமே செல்லச்செய்தார். பாரார் - உலகத்தவர்

நல்லா ரும்மவர் தீய ரெனப்படும்
சொல்லார் நன்மலர் சூடினார்
பல்லார் வெண்டலைச் செல்வரெம் பாற்றுறை
எல்லா ருந்தொழு மீசரே. 2

விண்ணார் திங்கள் விளங்கு நுதலினர்
எண்ணார் வந்தெ னெழில்கொண்டார்
பண்ணார் வண்டினம் பாடல்செய் பாற்றுறை
உண்ணா ணாளு முறைவரே. 3

பூவுந் திங்கள் புனைந்த முடியினர்
ஏவின் அல்லார் எயிலெய்தார்
பாவந் தீர்புனல் மல்கிய பாற்றுறை
ஓவென் சிந்தை யொருவரே. 4

மாகந் தோய்மதி சூடி மகிழ்ந்தென
தாகம் பொன்னிற மாக்கினார்

பரவிய - துதிக்கின்ற. ஆர் ஆர் - ஆத்திமாலை அணிந்தவர். ஆதி முதல்வர் - திருமூலநாதர்; இத்தலத்து இறைவர் பெயர். பாற்றுறை - இது மார்க்கண்டேயர் சிவபூசைக்குப் பால் பெறாது வேண்டப் பால் பெருகிய காரணத்தால் வந்த பெயர். பால் + துறை = பாற்றுறை.

2. நல்லாரும் அவர் - இவர் நல்லவரும் ஆவர். சொல்லார் நன் மலர் - எனது சொல்லாகிய நிறைந்த நல்ல மலர்களை. பல்லார் - பற்கள் பொருந்திய. எல்லாரும் - பக்குவம் உடையவர் பக்குவமில்லாதவர் ஆகிய எல்லோரும். ஈசர் - தலைவர்.

3. விண் ஆர் - வானில் உலாவுகின்ற. நுதலினர் - நெற்றியினர். எண்ணார் வந்து - ஆராயாமல் வந்து. என் எழில் கொண்டார் - என் அழகு எல்லாவற்றையும் கைக்கொண்டார்; இஃது உறுப்பு நலனழிதல் என்ற துறை ஆகும். பண் - இசை. பாற்றுறை உள் நாள் நாளும் உறைவர் என்க. நாள் நாளும் - எக் காலத்தும்.

4. பூ - கொன்றை, ஆத்தி முதலிய பூக்கள். ஏவின் - அம்பால். அல்லார்-பகைவர்; திரிபுரர். பாவம் தீர் புனல் - பாவத்தைப் போக்கும் காவிரி நீர். பாற்றுறை ஓ-திருப்பாற்றுறையில் இருக்கும் இறைவரோ?

5. மாகம் - ஆகாயம். எனது ஆகம் - என்னுடைய மார்பு. பொன்னிறம் ஆக்கினார் - பசலையுண்டாகுமாறு செய்தார். இது பசலை பாய்தல்; இது பிரிவாற்றாமையால் உண்டாவது. நயவர் - நலமுடையவர்.

பாகம் பெண்ணு முடையவர் பாற்றுறை
நாகம் பூண்ட நயவரே. 5

போது பொன்றிகழ் கொன்றை புனைமுடி
நாதர் வந்தென் நலங்கொண்டார்
பாதந் தொண்டர் பரவிய பாற்றுறை
வேத மோதும் விகிர்தரே. 6

வாடல் வெண்டலை சூடினர் மால்விடை
கோடல் செய்த குறிப்பினர்
பாடல் வண்டினம் பண்செயும் பாற்றுறை
ஆடல் நாக மசைத்தாரே. 7

வெவ்வ மேனிய ராய்வெள்ளை நீற்றினர்
எவ்வஞ் செய்தெ னெழில்கொண்டார்
பவ்வ நஞ்சடை கண்டரெம் பாற்றுறை
மவ்வல் சூடிய மைந்தரே. 8

வெந்த நீற்றினர் வேலினர் நூலினர்
வந்தெ னன்னலம் வௌவினர்
பைந்தண் மாதவி சூழ்தரு பாற்றுறை
மைந்தர் தாமோர் மணாளரே. 10

திருச்சிற்றம்பலம்

---

6. போது - புட்பம். நலம் கொண்டார் - அழகைக் கைக்கொண்டார்; உறுப்பு நலனழிதல். தொண்டர் - சிவனடியார். விகிர்தர் - மேலானவர்.

7. வாடல் - உலர்ந்த. மால் விடை - பெரிய இடபம்; திருமாலாகிய இடபமும். கோடல் - கொள்ளுதல், குறிப்பினர் - குறிப்பினையுடையவர். இது தலைவனின் பிரிவு கருதியது. பண் - இசை. ஆடல் - ஆடும். அசைத்தார் - அணிந்தார்.

8. வெவ்வமேனியர்–வெம்மையுடன் கூடிய திருமேனியர்; அக்கினி வடிவினர். எவ்வம் - விரகநோய். எழில் - உடல் அழகு. பவ்வம் நஞ்சு - கடல்விடம். மவ்வல் - முல்லை. மைந்தர் – வலிமையுடையவர்.

10. நூலினர் - பூணூலுடையவர். என் நலம் - என் அழகு. மாதவி - குருக்கத்தி. ஓர் மணாளர் என்றது மலைமகளையும் அலைமகளையும் முன்னரே மணந்திருந்தவர் என்பதைக் குறிப்பதுடன் இப்பொழுது என்னை மணந்த ஒப்பற்ற மணவாளர் என்பதாம்.

4. திருத்தோணிபுரம்*

பண் – பழந்தக்கராகம் [1-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

வண்டரங்கப் புனற்கமல மதுமாந்திப் பெடையினொடும்
ஒண்டரங்க இசைபாடும் அளியரசே! ஒளிமதியத்
துண்டரங்கப் பூண்மார்பர் திருத்தோணி புரத்துறையும்
பண்டரங்கர்க் கென்னிலைமை பரிந்தொருகாற் பகராயே. 1

எறிசுறவங் கழிக்கானல் இளங்குருகே! என்பயலை
அறிவுறு தொழிவதுவும் அருவினையேன் பயனன்றே
செறிசிறார் பதமோதுந் திருத்தோணி புரத்துறையும்
வெறிநிறார் மலர்க்கண்ணி வேதியர்க்கு விளம்பாயே. 2

பண்பழனக் கோட்டகத்து வாட்டமிலாச் செஞ்சூட்டுக்
கண்பகத்தின் வாரணமே! கடுவினையேன் உறுபயலை

---

* இத் திருப்பதிகம் தலைவன் பிரிவுக்கு ஆற்றாது வருந்துகின்ற தலைவி, தனது ஆற்றாமையைத் தலைவன்பால் அறிவித்து அவன் தண்ணளியைப் பெற்றுவருமாறு வண்டு, நாரை, சேவற்கோழி, புறா, அன்னம், அன்றிற்பறவை, குயில், பூவை, கிளி ஆகிய இவற்றைத் தூதாக அனுப்பக் கருதி அவற்றை வேண்டுவதாக அமைந்துள்ளது.

1. வண் தரங்கம் - வளம் பொருந்திய அலை. மது - தேன். பெடை - பெட்டை. அளி அரசே - ஆண் வண்டே. அங்கப்பூண் - எலும்பாகிய ஆபரணம். பண்டரங்கர் - பண்டரங்கக்கூத்தாடுபவர். இது சிவபெருமான் திரிபுரத்தை அழித்தபோது ஆடிய கூத்து; பதினொரு வகைக்கூத்தினுள் ஒன்று. என் நிலைமை - என்னுடைய பிரிவுத்துன்பத்தை. பரிந்து - விரும்பி. ஒருகால் - ஒருதரம். பகராயே - கூறுதற்கு வாய்ப்புக் கிடைக்குமே. தோணிபுரம் - சீகாழி.

2. எறி - மரக்கலங்கள் முதலியவற்றைத் தூக்கி எறிகின்ற. சுறவம் - சுறாமீன். கழி கானல் – உப்பங்கழியை அடுத்த கடற்கரைச் சோலை. குருகு - நாரை. பயலை - தலைவனைப்பிரிந்த மகளிர்க்கு உண்டாகும் ஒருவித நோய்; பசலைநோய். அறிவுறாது - அறிவிக்காது. செறிசிறார் - நிறைந்த அந்தணச்சிறுவர்கள். பதம் - வேதத்தின் பதங்கள் (சொற்கள்); பதமந்திரமுமாம். வெறி-வாசனையும். நிறார்-(நிற + ஆர்) - நிறமும் பொருந்திய. வேதியர்க்கு-வேதமருளிய இறைவர்க்கு; தலைவர்க்கு.

3. பண் - பண்பட்ட. பழனம் - வயல். கோடு - கரை. சூட்டு - உச்சிக்கொண்டை. கண்பு அகத்தின் - சம்பங்கோரையின் நடுவில்.

செண்பகஞ்சேர் பொழில்புடைசூழ் திருத்தோணி புரத்துறையும்
பண்பனுக்கென் பரிசுரைத்தாற் பழியாமோ ? மொழியாயே. 3

காண்டகைய செங்கீரலோண் கழிநாராய் ! காதலாற்
பூண்டகைய முலைமெலிந்து பொன்பயந்தா ளென்றுவளர்
சேண்டகைய மணிமாடத் திருத்தோணி புரத்துறையும்
ஆண்டகையாற் கின்றேசென் றடியறிய உணர்த்தாயே. 4

பாராரே யெனையொருகால் தொழுகின்றேன் பாங்கமைந்த
காராருஞ் செழுநிறத்துப் பவளக்காற் கபோதகங்காள் !
தேராரு நெடுவீதித் திருத்தோணி புரத்துறையும்
நீராருஞ் சடையாருக் கென்நிலைமை நிகழ்த்தீரே. 5

சேற்றெழுந்த மலர்க்கமலச் செஞ்சாலிக் கதிர்வீச
வீற்றிருந்த அன்னங்காள் ! விண்ணோடு மண்மறைகள்
தோற்றுவித்த திருத்தோணி புரத்தீசன் துளங்காத
கூற்றுதைத்த திருவடியே கூடுமா கூறீரே. 6

வாரணமே - கோழியே ! உறு - பொருந்திய. செண்பகம் - சண்பக மலர். பண்பன் - தலைவர்க்கு. பரிசு - (என்) தன்மை. பழியாமோ - உனக்குப் பழி வந்துவிடுமோ ? வாராது. மொழியாயே - மொழிந்து வருவாய்.

4. காண்தகைய - அழகுமிகுந்த. கழி நாராய் - உப்பங்கழியில் வசிக்கும் நாரையே ! பூண் தகைய - ஆபரணங்களால் அழகு பெற்ற. பொன் பயந்தாள் - அழகிய தேமலைப் பெற்றாள். சேண் - ஆகாயம். ஆண்டகையாற்கு - தலைவர்க்கு. இன்றே - இப்பொழுதே. அடி - (என் எளிமையின்) காரணம். அறிய - உணர.

5. எனை ஒருகால் பாராரே - யான் அழைத்த வண்டு, குருகு, கோழி முதலியவை என்னை ஒரு முறையும் திரும்பிப்பாராரே. பாங்கு - பக்கத்தில். கார் - கருமை. கபோதகம் - மாடப்புறா. தேராரும் - தேரோடும். என் நிலைமை - என்னுடைய பிரிவுத் துன்ப நிலைமையை. நிகழ்த்தீர் - அறிவிப்பீர்களாக.

6. செஞ்சாலி - செந்நெல். செஞ்சாலிக் கதிர்வீச மலர்க் கமலம் வீற்றிருந்த அன்னங்காள் என்க. விண்ணோடு மண் - விண்ணும் மண்ணும். துளங்காத - நடுங்காத. கூற்று - இயமன். கூடுமா - கூடுமாறு. கூறீர் - சொல்வீராக.

முன்றில்வாய் மடற்பெண்ணைக் குரம்பைவாழ் முயங்குசிறை
அன்றில்காள்! பிரிவுறுநோய் அறியாதீர் மிகவல்லீர்
தென்றலார் புகுந்துலவுந் திருத்தோணி புரத்துறையுங்
கொன்றைவார் சடையார்க்கென் கூர்பயலை கூறீரே. 7

பாலுறு மலர்ச்சூதப் பல்லவங்க ளவைகோதி
ஏனோர்க்கும் இனிதாக மொழியுமெழில் இளங்குயிலே!
தேனரும் பொழில்புடைசூழ் திருத்தோணி புரத்தமரர்
கோனுரை யென்னிடத்தே வரவொருகாற் கூவாயே. 8

நற்பதங்கள் மிகஅறிவாய் நானுன்னை வேண்டுகின்றேன்
பொற்பமைந்த வாயலகிற் பூவைநல்லாய்! போற்றுகின்றேன்
சொற்பதஞ்சேர் மறையாளர் திருத்தோணி புரத்துறையும்
விற்பொலிதோள் விகிர்தனுக்கென் மெய்ப்பயலை விளம்பாயே. 9

சிறையாரு மடக்கிளியே! இங்கேவா தேனொடுபால்
முறையாலே உணத்தருவன் மொய்பவளத் தொடுதரளந்
துறையாருங் கடற்றோணி புரத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாம மெனக்கொருகாற் பேசாயே. 10

திருச்சிற்றம்பலம்

---

7. முன்றில்வாய் - முன்னிடத்தில். மடற்பெண்ணை - மட்டைகளோடு கூடிய பனை. குரம்பை - கூடு. முயங்கு - தழுவுகின்ற. தென்றலார் - தென்றல் காற்று. கூர் பயலை - மிக்க பசலை நோய்.

8. பால் நாறும் - பால் மணம் வீசும். சூதம் - மாமரம். பல்லவங்கள் - தளிர்கள். அமரர்கோனுரை - தேவர்கள் தலைவரை. வர - வரும்படி. ஒருகால் - ஒருமுறை. கூவாய் - கூவக்கடவாய்.

9. நற்பதங்கள் - நல்ல சந்தர்ப்பத்தை. பொற்பு - அழகு. பூவை நல்லாய் - நாகணவாய்ப் பறவைகளே! சொற்பதம் - சொல்லப்படும் பதம். வில் - ஒளி. பொலி - விளங்குகின்ற. மெய்ப்பயலை - உடலில் தோன்றிய பசலை நோயை.

10. சிறையாரும்-அழகிய சிறைகள் பொருந்திய. மடம்-இளமை. தேனொடுபால் - தேனும் பாலும். உண - உண்ணுதற்கு. தருவன் - அளிப்பேன். மொய் - நிறைந்த. தரளம் - முத்து. இளம்பிறையாளன்- இளம்பிறையணிந்த இறைவன்: தலைவன். ஒருகால் எனக்கு - ஒருதரம் எனக்கு. பேசாய் - சொல்வாய். அதனால் என் துன்பம் போகும்.

5. திருப்பிரமபுரம் *

பல்பெயர்ப்பத்து

பண் - தக்கேசி [1-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

எரியார்மழுவொன் றேந்தியங்கை யிடுதலையேகலனா
வரியார்வளையார் ஐயம்வவ்வாய் மாநலம்வவ்வுதியே
சரியாநாவின் வேதகீதன் தாமரைநான்முகத்தன்
பெரியான்பிரமன் பேணியாண்ட பிரமபுரத்தானே. 1

பெயலார்சடைக்கோர் திங்கள்சூடிப் பெய்பலிக்கென் றயலே
கயலார்தடங்கண் அம்சொல்நல்லார் கண்டுயில்வவ்வுதியே
இயலானடாவி இன்பமெய்தி இந்திரனாள்மண்மேல்
வியலார்முரச மோங்குசெம்மை வேணுபுரத்தானே. 2

நகலார்தலையும் வெண்பிறையு நளிர்சடைமாட்டயலே
பகலாப்பலிதேர்ந் தையம்வவ்வாய் பாய்கலைவவ்வுதியே

---

* இத்திருப்பதிகம், தலைவன் மையலில் ஈடுபட்டு நிறை முதலியன அழிந்த தலைவியின் நிலைகண்டு வருந்தித் தோழி கூறிய கூற்றாக அமைந்துள்ளது.

சிவபெருமான் தாருகவன இருடிபத்தினிகளிடம் ஐயம் ஏற்கச் சென்றதைக் குறிப்பிடுவது இப்பதிகமாகும்.

1. எரியார் - எரிதலைப் பொருந்திய. கலன் - பாத்திரம். வரியார் - கோடுகளுடன் கூடிய. வளையார் - வளையலையுடைய முனிபத்தினியர். ஐயம் - பிச்சை. மா நலம் - மிக்க உடல் அழகை. வவ்வுதியே - வாங்குகின்றீரே! (ஏன்?) சரியா நாவின் முதல் பிரமன் என்பது வரை நான்முகனைக் குறிக்கும் தொடர். பிரமன் வழிபட்டதால் பிரமபுரம் எனப் பெயர் வந்தது.

2. பெயல் - கங்கை. கயல் - கயல்மீன். கண் துயில் - விரகநோயால் கண் துயில்வதை. இயலான் நடாவி - முறைப்படி நடத்தி. ஆள் - (வந்து) ஆண்ட. வியல் - அகலம். இந்திரன் மூங்கிலாய் மறைந்திருந்தமையின் வேணுபுரம் எனப் பெயர் வந்தது.

3. நகல் - சிரித்தல். பகலாப்பலி - பகற்காலத்திய பலி. பாய் கலை - பரந்த ஆடை. அயல் இன்மையால் - (அடைக்கலம்) வேறு இன்மையால். புகல் - அடைக்கலம். தேவர்களால் அடைக்கலம் புகப்பெற்றதால் புகலி எனப் பெயர்பெற்றது.

அகலாதுறையு மாநிலத்தில் அயலின்மையாலமரர்
புகலான்மலிந்த பூம்புகலி மேவியபுண்ணியனே. 3

சங்கோடிலங்கத் தோடுபெய்து காதிலொர்தாழ் குழையன்
அங்கோல்வளையார் ஐயம்வவ்வா யால்நலம்வவ்வுதியே
செங்கோனடாவிப் பல்லுயிர்க்குஞ் செய்வினைமெய்தெரிய
வெங்கோத்தருமன் மேவியாண்ட வெங்குருமேயவனே. 4

தணிநீர்மதியஞ் சூடிநீடு தாங்கியதாழ்சடையன்
பிணிநீர்மடவார் ஐயம்வவ்வாய் பெய்கலைவவ்வுதியே
அணிநீருலக மாகியெங்கும் ஆழ்கடலாலழுங்கத்
துணிநீர்பணியத் தான்மிதந்த தோணிபுரத்தானே. 5

கவர்பூம்புனலும் தண்மதியுங் கமழ்சடைமாட்டயலே
அவர்பூம்பலியோ டையம்வவ்வா யால்நலம்வவ்வுதியே
அவர்பூணரையர்க் காதியாயவடன் மன்னனுள்மண்மேல்
தவர்பூம்பதிக ளெங்குமெங்குந் தங்குதராயவனே. 6

முலையாழ்கெழுவ மொந்தைகொட்ட முன்கடைமாட்டயலே
நிலையாப் பலிதேர்ந் தையம்வவ்வாய் நீநலம்வவ்வுதியே
தலையாய்க்கிடந்திவ் வையமெல்லாந் தன்னதொராணைநடாய்ச்
சிலையான்மலிந்த சீர்ச்சிலம்பன் சிரபுரமேயவனே. 7

---

4. சங்கோடு இலங்க - சங்க குண்டலத்தோடு விளங்க. அம் கோல் வளையார் - அழகு திரண்ட வளையல்களையுடைய பெண்கள். வவ்வாய்- ஏற்காய். ஆல் - ஆசை. நடாவி - நடத்தி, செய்வினை மெய்-உண்மையோடு கூடிய ஆட்சியினை, தருமனின் ஆட்சி உண்மையை அறிய வந்ததால் வெங்குரு எனப் பெயர் வந்தது.

5. தணிநீர் - கீழ்ப்படிந்த தன்மையையுடைய. பிணி நீர் - காம நோய் வாய்ப்பட்ட. பெய்கலை - உடுத்த ஆடையை. துணி நீர் பணிய - துணிவு கொண்டு எழுந்த கடல்நீர் கீழ்ப்படிய. சீகாழி தோணியாக மிதந்தால் தோணிபுரம் எனப் பெயர் வந்தது.

6. பூண் அரையர்க்கு ஆதியாய அடல் மன்னன் - அரசர்களுக்கெல்லாம் முதன்மையாகிய வலிமிக்க திருமால். திருமால் பூசித்தமையால் பூந்தராய் எனப் பெயர் வந்தது.

7. முலையாழ் கெழுவ - முல்லை நிலத்து யாழ் ஒலி பொருந்திய நிலையாப்பலி - நிலையில்லாத பலி. தலையாம் - தலையேவடிவாய். நடாய்-

எருதேகொணர்கென் றேறியங்கை யிடுதலையேகலனாக்
கருதேர்மடவார் ஐயம்வவ்வாய் கண்டுயில்வவ்வுதியே
ஒருதேர்கடாவி ஆரமருள் ஒருபதுதேர்தொலையப்
பொருதேர்வலவன் மேவியாண்ட புறவமர்புண்ணியனே. 8

துவர்சேர்கலிங்கப் போர்வையாருந் தூய்மையிலாச்சமணுங்
கவர்செய்துழலக் கண்டவண்ணங் காரிகைவார்குழலார்
அவர்பூம்பலியோ டையம்வவ்வா யால்நலம்வவ்வுதியே
தவர்செய்நெடுவேற் சண்டனாளச் சண்பையமர்ந்தவனே. 9

நிழலான்மலிந்த கொன்றைசூடி நீறுமெய்பூசிநல்ல
குழலார்மடவார் ஐயம்வவ்வாய் கோல்வளைவவ்வுதியே
அழலாயுலகங் கவ்வைதீர ஐந்தலைநீண்முடிய
கழனாகரையன் காவலாகக் காழியமர்ந்தவனே. 10

கட்டார்துழாயன் தாமரையான் என்றிவர்காண்பரிய
சிட்டார்பலிதேர்ந் தையம்வவ்வாய் செய்கலைவவ்வுதியே

நடத்தி. சிலம்பன் - சிலம்பன் என்னும் அசுரன்; இவன் இராகு என்ற பெயர் தாங்கி வழிபட்டதால் சிரபுரம் எனப் பெயர் வந்தது.

8. எருது - இடபம். கரு தேர் மடவார் - கருவைத்தேரும் பெண்கள்; காமினிகள். கருது ஏர் - கருதப்பட்ட அழகு பொருந்திய. பொருதேர்வலவன் - இங்குச் சிபிச்சக்கரவர்த்தி; இவன் பூசித்து வழிபட்டமையால் புறவம் எனப் பெயர் வந்தது.

9. துவர்சேர் கலிங்கம் - காவி ஆடை. போர்வையார் - இங்குப் புத்தர்கள். சமண் – சமணர்கள். கவர் செய்து - மனந்திரிந்து. காரிகை - அழகு. தவர் செய் - துளைக்கின்ற. சண்டன் ஆள - சண்டனை (இயமனை) அடக்கி ஆள. மார்க்கண்டேயர் சண்டனை அடக்கப் பூசித்தமையால் சண்பை எனப் பெயர் பெற்றது. சண்பை வேறு காரணம் கூறுதலும் உண்டு.

10. கோல்வளை - திரட்சியான அழகிய வளையல்கள். அழலாய் - அக்கினியாய். கவ்வை - துன்பம். ஐந்தலை நீள் முடிய கழல் நாக அரையன் - காளிதன் என்னும் பாம்பு. காளிதன் என்னும் பாம்பு பூசித்தமையால் காழி எனப் பெயர் பெற்றது.

11. கட்டு ஆர் - கட்டுதல் பொருந்திய. துழாயன் - துழாய்மாலை அணிந்த திருமால். தாமரையான் - பிரமன். இட்டார் - ஒழுங்கினையுடைய பெண்கள். செய்கலை - அழகிய ஆடை. நட்டாறு என்பது

நட்டார்நடுவே நந்தனுள நல்வினையாலுயர்ந்த
கொட்டாறுடுத்த தண்வயல்சூழ் கோச்சையமர்ந்தவனே. 11

திருச்சிற்றம்பலம்

---

6. திருக்கானூர் *

பண் - தக்கேசி [1-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

வானூர்சோதி மன்னுசென்னி வன்னிபுனங்கொன்றைத்
தேனூர்போது தானூர்கங்கை திங்களொடுசூடி
மானேர்நோக்கி கண்டங்குவப்ப மாலையாடுவார்
கானூர்மேய கண்ணூர்நெற்றி ஆனூர்செல்வரே. 1

நீந்தலாகா வெள்ளமூழ்கு நீள்சடைதன்மேலோர்
ஏய்ந்தகோணற் பிறையோடரவு கொன்றையெழிலாரப்

நட்டார் என ஆயிற்று. நந்தன் - பிரமதேவனின் குமாரனுன பராசர முனிவன். ஆள - மச்சகந்தியைப் பெண்டாள (அதனுலாகிய பழி போக). நல்வினையால் - நல்ல சிவபூசையால். கொட்டு ஆறு உடுத்த - நல்ல வாசனை பொருந்திய. பராசரமுனிவன் கெட்ட நாற்றத்தையும், பழியையும் போக்கப் பூசித்தமையால் கொச்சை (கொச்சைவயம்) எனப் பெயர் வந்தது.

* இத் திருப்பதிகம் வழிநாட் புணர்ச்சிக்கண் பிரிந்த தலைமகன் காலம் நீட்டிக்கத் தலைவி ஆற்ருது வருந்தும் நிலையில் அமைந்துள்ள தாகும். இதில் அறத்தொடு நிற்றல். நிறையழிதல் முதலிய துறை களும் அமைந்து நிற்றலை அறிக.

1. வான் ஆர் - வானிலுள்ள. சோதி - சூரிய சந்திரர். வன்னி - வன்னிப்பத்திரம். புனம் - முல்லைநிலம். மானேர் நோக்கு - உமா தேவியார்; பெண்ணுமாம். அங்கு - ஊழி முடிவு; அவ்விடத்தே. மாலை - சங்காரம்; மயக்கம். கண்ணூர் நெற்றி - நெற்றிக்கண்ணர். ஆன்ஊர் - இடபத்தை ஊர்ந்த.

2. வெள்ளம் - கங்கை. ஏய்ந்த - பொருந்திய. எழில்ஆர - அழகு டன் பொருந்த. போந்த - தன் வாயினின்றும் வந்த. இன்பம் பயந்த மைந்தர் அவர்-தன்னை முன் கூடிமகிழ்ந்த தலைவர் அவர்; இதுது இன்பம் தந்த தலைவனை எண்ணி வருந்தும் நிலை ஆகும். விம்மு - மலர்கின்ற.

பேரந்தமென்சொல் இன்பம்பயந்த மைந்தரவர்போலாம்
காந்தள்விம்மு கானூர்மேய சாந்தநீற்றுரே. 2

சிறையார்வண்டுந் தேனும்விம்மு செய்யமலர்க்கொன்றை
மறையார்பாடல் ஆடலோடு மால்விடைமேல்வருவார்
இறையார்வந்தெ னில்புகுந்தென் னெழில்நலமுங்கொண்டார்
கறையார்சோலைக் கானூர்மேய பிறையார்சடையாரே. 3

விண்ணார் திங்கட் கண்ணிவெள்ளை மாலையதுசூடித்
தண்ணாரக்கோ டாமைபூண்டு தழைபுன்சடைதாழ
எண்ணாவந்தெ னில்புகுந்தங் கெவ்வநோய்செய்தான்
கண்ணார்சோலைக் கானூர்மேய விண்ணோர்பெருமானே. 4

தார்கொள்கொன்றைக் கண்ணியோடுந் தண்மதியஞ்சூடி
சீர்கொள்பாடல் ஆடலோடு சேடராய்வந்து
ஊர்கடோறும் ஐயமேற்றென் னுள்வெந்நோய்செய்தார்
கார்கொள்சோலைக் கானூர்மேய கறைக்கண்டத்தாரே. 5

முளிவெள்ளெலும்பு நீறுநூலு மூழ்குமார்பராய்
எளிவந்தார்போல் ஐயமென்றெ னில்லேபுகுந்துள்ளத்
தெளிவுநாணுங் கொண்டகள்வர் தேறலார்பூவில்
களிவண்டியாழ்செய் கானூர்மேய ஒளிவெண்பிறையாரே. 6

---

3. சிறை - சிறகு. தேன் - தேன்வண்டு. மறையார் பாடல்-வேதப் பாடல். மால்விடை - பெரிய இடபம்; திருமாலாகிய இடபம். இறையார் - சிவன்; தலைவன். எழில் நலமும் - எழிலும் நலமும்; உம்மைத் தொகை. கறையார் - இருள் சூழ்ந்த. இது தலைவி அறத்தொடு நிற்றலை அறிவிக்கும்.

4. விண் - ஆகாயம். கண்ணி - தலைமாலை. தண் - குளிர்ச்சி. அக்கு- எலும்புமாலை. ஆமை - ஆமையோடு. எண்ணாவந்து - (யான் அறியாமையால்) எண்ணிருக்கத் தலைவனும் வலிய வந்து. எவ்வநோய் - விரக நோய். கண்ஆர் - இடம் அகன்ற.

5. சீர் - சிறப்பு. சேடர் - சிறந்தவர். என் உள் நோய் - என்மனத்திற்குப் பெருநோய். கார் கொள் - மேகம் தவழ்கின்ற. கறைக்கண்டத்தார் - நீல கண்டத்தர்.

6. முளிவெள் - மிகக் காய்ந்த. எளிவந்தார் போல் - இரங்கத் தக்கவர்போல. உள்ளத் தெளிவு நாணும் கொண்ட கள்வர் - எனது நிறையையும் நாணத்தையும் கைக்கொண்ட கள்வர். தேறல் - தேன். வெண்பிறையார் - வெள்ளிய சந்திரனை அணிந்தவர்.

மூவாவண்ணர் முளைவெண்பிறையர் முறுவல்செய்திங்கே
பூவார்கொன்றை புனைந்துவந்தார் பொக்கம்பலபேசிப்
போவார்போல மால்செய்துள்ளம் புக்கபுரிநூலர்
தேவார்சோலைக் கானூர்மேய தேவதேவரே. 7

தமிழின்நீர்மை பேசித்தாளம் வீணைபண்ணிநல்ல
முழவமொந்தை மல்குபாடல் செய்கையிடமோவார்
குமிழின்மேனி தந்துகோல நீர்மையதுகொண்டார்
கமழுஞ்சோலைக் கானூர்மேய பவளவண்ணரே. 8

அந்தமாதி அயனுமாலும் ஆர்க்குமறிவரியான்
சிந்தையுள்ளு நாவின்மேலுஞ் சென்னியுமன்னினான்
வந்தென்னுள்ளம் புகுந்துமாலை காலையாடுவான்
கந்தமல்கு கானூர்மேய எந்தைபெம்மானே. 9

ஆமையரவோ டேனவெண்கொம் பக்குமாலைபூண்
டாமோர்கள்வர் வெள்ளர்போல உள்வெந்நோய்செய்தார்
ஓமவேத நான்முகனுங் கோணாகணையானும்
சேமமாய செல்வர்கானூர் மேயசேடரே. 10

திருச்சிற்றம்பலம்

---

7. மூவாவண்ணர் - மூப்படையாத அழகையுடையவர். முறுவல் - இங்குக் காமக்குறிப்புத் தோன்றும் சிரிப்பு. பொக்கம் - பொய். மால் - மயக்கம். தேவு ஆர் - தெய்வத்தன்மை பொருந்திய. தேன்வார் எனப் பிரித்து தேன் ஒழுகும் எனக்கொள்ளலுமாம்.

8. தமிழின் நீர்மை - இனிமை. குமிழின் - குமிழம்பூவின் பொன்னிறம் பொருந்திய. கோலநீர்மையது - அழகின் தன்மையை. பவளவண்ணர் - செம்மேனியர்.

9. அந்தம் ஆதி - அடியும், முடியும். ஆர்க்கும் - எவர்க்கும். மன்னினான் - திகழ்கின்றான். மாலை காலை ஆடுவான் - மாலையிலும் காலையிலும் உலாவுகின்றான். கந்தம் - வாசனை.

10. ஏனம் - பன்றி. வெள்ளர்போல - வெள்ளையுள்ளம் படைத்தவர் போல. ஓமம் - ஆகுதி. கோள் நாகணையான் - திருமால். சேமம் - பாதுகாப்பு. சேடர் - தலைவர். கானூர் - இது திருக்காட்டுப்பள்ளிக்கு அருகில் கொள்ளிடத்தின் தென்கரையில் மணலால் புதையுண்டிருந்து அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட தலம்; புதைகிரி எனவும் வழங்கப் பெறுகிறது.

Government Oriental Manuscripts Library,

7. திருஇலம்பையங்கோட்டூர் *

பண் - குறிஞ்சி [1-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

மலையினார்பருப்பதந் துருத்திமாற்பேறு
மாசிலாச்சீர்மறைக் காடுநெய்த்தானம்
நிலையினானெனதுரை தனதுரையாக
நீறணிந்தேறுகந் தேறியநிமலன்
கலையினார்மடப்பிணை துணையொடுந்துயிலக்
கானலம்பெடைபுல்கிக் கணமயிலாலும்
இலையினார்பைம்பொழில் இலம்பையங்கோட்டூர்
இருக்கையாப்பேணியென் னெழில்கொள்வதியல்பே. 1

திருமலர்க்கொன்றையான் நின்றியூர்மேயான்
தேவர்கள்தலைமகன் திருக்கழிப்பாலை
நிருமலனெனதுரை தனதுரையாக
நீறணிந்தேறுகந் தேறியநிமலன்
கருமலர்க்கமழ்சுனை நீண்மலர்க்குவளை
கதிர்முலையிளையவர் மதிமுகத்துலவும்
இருமலர்த்தண்பொய்கை இலம்பையங்கோட்டூர்
இருக்கையாப்பேணியென் னெழில்கொள்வதியல்பே. 2

---

* இத் திருப்பதிகம் பிரிவினால் வருந்தும் தலைவியின் கூற்றாக அமைந்துள்ளது. இலம்பையங்கோட்டூர் - இஃது அரம்பை முதலியோர் வழிபட்ட தலம்; அரம்பையங்கோட்டூர் என்பது மருவி இலம்பையங் கோட்டூர் என வழங்கப்படுகிறது.

1. மலையினார் பருப்பதம் - சீபருப்பதம் (ஸ்ரீசைலம்). துருத்தி - திருத்துருத்தி; பூந்துருத்தி. நிலையினான் - என்றும் நிலைபெற்றவன்; இறைவன். கலையின் ஆர் மடப்பிணை - கலைமானோடு கூடிய இளைய பெண்மான். துணையொடும் - தன் துணையாகிய ஆண் மானொடு. கானல் - சோலை. கணமயில் - கூட்டமாகிய மயில். ஆலும் - ஆடும். என் எழில் கொள்வது - என் அழகுகளையெல்லாம் கைக்கொள்வது. எனதுரை தனதுரை - இத்தொடர் பதிவாக்கு என்பதைக் குறிக்கும்.

2. திருமலர் - தெய்வத்தன்மை பொருந்திய மலர்; கொன்றை மற்றைய மலர்கட்கு இல்லாத பிரணவ வடிவம் உடையது. நிருமலன் - பரிசுத்தன்; இறைவன். கருமலர் - கருநெய்தல். இளையவர் - இளம் பெண்கள்.

பாலனும்விருத்தனும் பசுபதிதானும்
பண்டுவெங்கூற்றுதைத் தடியவர்க்கருளும்
காலனுமெனதுரை தனதுரையாகக்
கனலெரியங்கையி லேந்தியகடவுள்
நீலமாமலர்ச்சுனை வண்டுபண்செய்ய
நீர்மலர்க்குவளைகள் தாதுவிண்டோங்கும்
ஏலநாறும்பொழில் **இலம்பையங்கோட்டூர்**
இருக்கையாப்பேணியென் னெழில்கொள்வதியல்பே. 3

உளங்கொள்வாருச்சியார் கச்சியேகம்பன்
ஒற்றியூருறையுமண் ணுமலையண்ணல்
விளம்புவானெனதுரை தனதுரையாக
வெள்ளநீர்விரிசடைத் தாங்கியவிமலன்
குளம்புறக்கலைதுள மலைகளுஞ்சிலம்பக்
கொழுங்கொடியெழுந்தெங்குங் கூவிளங்கொள்ள
இளம்பிறைதவழ்பொழில் **இலம்பையங்கோட்டூர்**
இருக்கையாப்பேணியென் னெழில்கொள்வதியல்பே. 4

தேனுமாயமுதமாய்த் தெய்வமுந்தானாய்த்
தீயொடுநீருடன் வாயுவாந்தெரியில்
வானுமாமெனதுரை தனதுரையாக
வரியராவரைக்கசைத் துழிதருமைந்தன்

---

3. பாலனும் விருத்தனும் - இது விருத்த-குமார பாலரான திருவிளையாடலைக் குறிப்பதுமாம். அடியவர் - இங்கு மார்க்கண்டேயர். சுனை - மலையிலுள்ள நீர்நிலை. ஏல நாறும் - ஏலம் முதலிய பொருள்கள் மணம் கமழும்; வண்டுபாடுதல், குவளை மலர்தல், ஏலம் நாறுதல் முதலியன தலைவியின் பிரிவாற்றுமைக்குரிய சாதனங்கள் ஆகும்.

4. உளங் கொள்வார் - தியானம் செய்பவர்களின். உச்சியார் - துவாத சாந்தத் தலத்தில் இருப்பவர். கலைகுளம்பு உறத் துள - கலைமான் குளம்பு பதியத் துள்ள. சிலம்ப - எதிர் ஒலி செய்ய. கூவிளம் கொள்ள - வில்வ மரத்தின்மேல் படிய.

5. தேனுமாய் அமுதமாய் - தேன் முதலிய இனிய பொருளாய். தீயொடு...வானுமாம் - பூமி யொழிந்த நாற்பூதங்கள். வரி - கீறு. அரா - பாம்பு. கான மான் - காட்டுமான். ஊகம் - பெண்குரங்கு. கடுவன் -

கானமான்வெருவுறக் கருவிரலூகங்
கடுவனேடுகளுமூர் கற்கடுஞ்சாரல்
ஏனமானுழிதரும் **இலம்பையங்கோட்டூர்**
இருக்கையாப்பேணியென் னெழில்கொள்வதியல்பே. 5

மனமுலாமடியவர்க் கருள்புரிகின்ற
வகையலாற்பலிதிரிந் துண்பிலான்மற்றோர்
தனமிலானெனதுரை தனதுரையாகத்
தாழ்சடையிளமதி தாங்கிய தலைவன்
புனமெலாமருவிக ளிருவிசேர்முத்தம்
பொன்னொடுமணிகொழித் தீண்டிவந்தெங்கும்
இனமெலாமடைகரை **இலம்பையங்கோட்டூர்**
இருக்கையாப்பேணியென் னெழில்கொள்வதியல்பே. 6

நீருளான்தீயுளான் அந்தரத்துள்ளான்
நினைப்பவர்மனத்துளான் நித்தமாஏத்தும்
ஊருளானெனதுரை தனதுரையாக
ஒற்றைவெள்ளேறுகந் தேறியவொருவன்
பாருளார்பாடலோ டாடலறாத
பண்முரன் றஞ்சிறை வண்டினம்பாடும்
ஏருளார்பைம்பொழில் **இலம்பையங்கோட்டூர்**
இருக்கையாப்பேணியென் னெழில்கொள்வதியல்பே. 7

ஊகம் - குரங்கு. உகளும் - துள்ளும். ஏனம் - பன்றி. ஆன் - பசு. உழிதரும் - திரியும்.

6. மனம் உலாம் அடியவர்க்கு - மனத்தின் கண் இறைவனை உலாவச்செய்கின்ற அன்பர்களுக்கு. பலி திரிந்து உண்பிலான் - பிச்சையேற்றுத் தான் உண்ணாதவன். மற்றோர் தனம் இலான் - வேறு செல்வமில்லாதவன். இருவி - தினைகொய்தாள்கள். இனம் எலாம் - எவ்விடங்களிலும்.

7. நீர், தீ, வான், நினைப்பவர் மனம், ஊர் இவை இறைவன் வசிக்கும் இடங்கள் ஆகும். நித்தமா ஏத்தும் - நாடோறும் வழிபாடு செய்யும். வெள்ளேறு - வெள்ளிய இடபம். பாருளார் - மண்ணவர். பாடலோடாடல் - பாட்டும் ஆடலும். ஏர் - அழகு. ஏறு உகந்தேறிய ஒருவன் என் எழில் கொள்வது இயல்பாம் எனக்கொள்க.

வேருலாமாழ்மடல் வருதிரையிலங்கை
வேந்தனதடக்கைக ளடர்த்தவ னுலகில்
ஆருலாமெனதுரை தனதுரையாக
ஆகமோரரவணிந் துழிதருமண்ணல்
வாருலாநல்லன மாக்களுஞ்சார
வாரணமுழிதரு மல்லலங்கானல்
ஏருலாம்பொழிலணி இலம்பையங்கோட்டூர்
இருக்கையாப்பேணியென் னெழில்கொள்வதியல்பே. 8

கிளர்மழைதாங்கினன் நான்முகமுடையோன்
கீழடிமேன்முடி தேர்ந்தளக்கில்லா
உளமழையெனதுரை தனதுரையாக
ஒள்ளழலங்கையி லேந்தியவொருவன்
வளமழையெனக்கழை வளர்துளிசோர
மாசுணமுழிதரு மணியணிமாலை
இளமழைதவழ்பொழில் இலம்பையங்கோட்டூர்
இருக்கையாப்பேணியென் னெழில்கொள்வதியல்பே. 9

உரிஞ்சனகூறைகள் உடம்பினராகி
உழிதருசமணருஞ் சாக்கியப்பேய்கள்
பெருஞ்செல்வனெனதுரை தனதுரையாகப்
பெய்பலிக்கென்றுழல் பெரியவர்பெருமான்

---

8. வேர் உலாம் - பூமியின் அடிவரை உலாவுகின்ற. வேந்தன - இராவணனுடைய. (வேந்தன் + அ.) ஆருலாம் - நிறைதல் மலிந்த. ஆகம் - மார்பு. வாரணம் - யானை. மல்லல் - வளம். நல்லனமாக்கள் - நல்ல விலங்குகள்.

9. கிளர்மழை தாங்கினன் - இந்திரன் ஏவலால் பெய்யப்பெற்ற மழையைக் கோவர்த்தனகிரியைக் குடையாகத் தூக்கித் தடுத்த கண்ணன்; திருமால். உளம் அழை - மனத்தால் அழைக்கின்ற. உள மழை - உள்ளத்தினின்று மழைபோல் பொங்கி வருகின்ற எனினுமாம். கழை - மூங்கில். மாசுணம் - மலைப்பாம்பு. உழிதரும் - திரிகின்ற. இள மழை - இள மேகம்.

10. உரிஞ்சன கூறைகள் - ஆடைகள் இல்லாத. உழிதரு- திரிகின்ற. பெருஞ்செல்வன் - மோட்சச் செல்வத்தையுடைய பெருமான். கருஞ் சுனை - பெரிய சுனையில் மலரும் நீலமலர்கள். பொன் அடைவேங்கை - பொன்போன்ற பூக்களையுடைய வேங்கை. தேன் இனம்-தேன் வண்டின் கூட்டங்கள். இருஞ்சுனை - பெரிய நீர்ச்சுனை.

கருஞ்சுனைமுல்லைநன் பொன்னடைவேங்கை
களிமுகவண்டொடு தேனினமுரலும்
இருஞ்சுனைமல்கிய **இலம்பையங்கோட்டூர்**
இருக்கையாப்பேணியென் னெழில்கொள்வதியல்பே. 10

திருச்சிற்றம்பலம்

8. திருமருகல் *

பண் - இந்தளம் [2-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

சடையா யெனுமால் ; சரண்நீ யெனுமால் ;
விடையா யெனுமால் ; வெருவா விழுமால் ;
மடையார் குவளை மலரும் **மருகல்**
உடையாய் ! தகுமோ இவளுள் மெலிவே. 1

சிந்தா யெனுமால் ; சிவனே யெனுமால் ;
முந்தா யெனுமால் ; முதல்வா எனுமால் ;
கொந்தார் குவளை குலவும் **மருகல்**
எந்தாய் ! தகுமோ இவளே சறவே. 2

அறையார் கழலும் மழல்வா யரவும்
பிறையார் சடையும் முடையாய் பெரிய

---

* இத் திருப்பதிகம் தலைவன் பிரிவிற்கு ஆற்றாது வருந்தும் தலைவியைக்கண்டு இரங்கித் தோழி தலைமகன்பால் கூறிய கூற்றாக அமைந்துள்ளது.

இப் பதிகம், பாம்பு கடித்து இறந்த வணிகனை எழுப்புதற்கு அருளியதாகும்.

1. சடையா - சடையையுடையவனே. எனும் - என்று சொல்வாள். ஆல் - அசை. சரண்நீ - அடைக்கலம் நீதான். வெருவா - வெருவி ; பயந்து. மடை - நீர் மடை. மருகல் - இது தலத்தின்பெயர் ; ஒருவகை வாழைமரத்தால் பெற்ற பெயர்.

2. சிந்தாய் - மனத்திலிருப்பவனே. முந்தாய் - பழமையானவனே. கொந்து - பூங்கொத்து. எந்தாய் - என் தலைவனே. ஏசறவு - வருத்தமுறல்.

3. அறை - ஒலி. அழல் வாய் - (நஞ்சின்) வெப்பம் பொருந்திய வாய். மறையார் - வேதங்களை யுணர்ந்தவர்கள் வாழ்கின்ற. இறை - கையிறை. வளை கொண்டு - வளையலை நெகிழக் கொண்டு.

மறையார் மருகல் மகிழ்வாய் இவளை
இறையார் வளைகொண் டெழில்வவ் வினையே. 3

ஒலிநீர் சடையிற் கரந்தா யுலகம்
பலிநீ திரிவாய் பழியில் புகழாய் !
மலிநீர் மருகல் மகிழ்வாய் ! இவளை
மெலிநீர் மையளாக் கவும்வேண் டினையே. 4

துணிநீ லவண்ணம் முகில்தோன் றியன்ன
மணிநீ லகண்டம் முடையாய் ! மருகல்
கணிநீ லவண்டார் குழலாள் இவள்தன்
அணிநீ லவொண்கண் ணயர்வாக் கினையே. 5

பலரும் பரவப் படுவாய் சடைமேல்
மலரும் பிறையொன் றுடையாய் ! மருகல்
புலரும் தனையுந் துயிலாள் புடைபோந்
தலரும் படுமோ அடியாள் இவளே. 6

வழுவாள் பெருமான் கழல்வாழ் கவெனா
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவா ளுடையாய் ! மருகற் பெருமான்
தொழுவாள் இவளைத் துயராக் கினையே. 7

இலங்கைக் கிறைவன் விலங்கல் லெடுப்பத்
துலங்கவ் விரலூன் றலுந்தோன் றலனாய்

---

4. ஒலி நீர் - முழங்கும் கங்கை, கரந்தாய் - மறைத்தாய், பழியில்- பழிப்பில்லாத, மெலிநீர்மையளாக்கவும் - மெலிவுற்ற தன்மையளாக்கவும், வேண்டினையே - விரும்பினையே.

5. துணி - தெளிந்த, நீலவண்ணம் - நீலநிறம், தோன்றியன்ன - தோன்றியதுபோல, மணி - அழகிய, கணி - கருதுகின்ற, நீலவண்டு - கருவண்டு, கண் அயர்வு - கண் சோர்வு, ஆக்கினையே - செய்தாயே.

6. பரவ - துதிக்க, மலரும் - விளங்கும், புலரும் தனையும் - விடியும் வரையும், துயிலாள் - தூங்காள், புடை - பக்கங்களில், அலர் - பழிச்சொல், அடியாள் - அடிமையுடைவள்.

7. வழுவாள் - அடிமைத் திறத்தினின்றும் தவறாதவள், எனா - என்று; இரவும் பகலும் நினைவாள் என்க, இவளை - இவளுக்கு.

8. இறைவன் - அரசன்; இராவணன், விலங்கல் - கயிலைமலை; துலங்கு - விளங்கிய, தோன்றலனாய்-இன்னது செய்வது என்று தோன்

வலங்கொள் மதில்சூழ் மருகற் பெருமான்
அலங்கல் லிவளை யலராக் கினையே. 8

எரியார் சடையும் மடியும் மிருவர்
தெரியா ததொர்தீத் திரளா யவனே
மரியார் பிரியா மருகற் பெருமான்
அரியா ளிவளை யயர்வாக் கினையே. 9

அறிவில் சமணும் மலர்சாக் கியரும்
நெறியல் லனசெய் தனர்நின் றுழல்வார்
மறியேந் துகையாய் மருகற் பெருமான்
நெறியார் குழலி நிறைநீக் கினையே. 10

திருச்சிற்றம்பலம்

---

9. திருவானைக்கா *

பண் - இந்தளம் [2-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

மழையார் மிடறு! மழுவா ளுடையாய்!
உழையார் கரவா! உமையாள் கணவா!

ருதவனாய். வலங்கொள் - வலம் வந்து பணிந்து வேண்டிய. அலங்கல் இவளை - மாலை அணிந்த இவளுக்கு அருளாமல்.

9. எரி ஆர் - நெருப்புப்போல் சிவந்த. சடையும் மடியும் - இங்கு முடியும் அடியும். இருவர் - பிரம விஷ்ணுக்கள். மரியார் - சிவன் முத்தர். பிரியா - என்றும் நீங்காத. அரியாள் - அருமையானவள். அயர்வு - மனச்சோர்வு.

10. அறிவு இல் - மெய்ப்பொருளின் உணர்வு இல்லாத. அலர் - பலராகப் பெருகி நின்ற. நெறியல்லன - சைவநெறி யல்லாத பிறநெறிகள். உழல்வார் - திரிகின்றவர். மறி - மான் கன்று. நெறியார்-நெறிந்து அடர்ந்திருக்கின்ற. நிறை - கற்பு.

* இத் திருப்பதிகம் பிரிவால் வருந்தும் தலைவியின் நிலைகண்டு வருந்தித் தோழி தலைவன்பால் கூறிய கூற்றாக அமைந்துளது.

1. மழை ஆர் மிடறு - மேகம்போலக் கருநிறமுள்ள கண்டனே; நீலகண்டனே. உழை - மான். விழவு - திருவிழாக்கள். வெண்நாவல் - வெண்நாவல் மரம்: ஜம்புகேசுவரம். எனும் - என்று அழைப்பாள். ஆயிழையாள் அவள் - அந்தப் பெண்.

விழவா ரும்வெண்ணி வலின்மே வியஎம்
அழகா! எனுமா யிழையாள் அவளே. 1

கொலையார் கரியின் னுரிமூ டியனே!
மலையார் சிலையா வளைவித் தவனே!
விலையா லெனையா ளும்வெண்ணி வலுளாய்!
நிலையா அருளா யெனுநே ரிழையே. 2

காலா லுயிர்கா லனைவீ டுசெய்தாய்!
பாலோ டுநெய்யா டியபால் வணனே!
வேலா டுகையா யெம்வெண்ணி வலுளாய்!
ஆலார் நிழலாய்! எனுமா யிழையே. 3

சுறவக் கொடிகொண் டவனீ றதுவாய்
உறநெற் றிவிழித் தவெழுத் தமனே!
விறன்மிக் ககரிக் கருள்செய் தவனே!
அறமிக் கதுவென் னுமெனு யிழையே. 4

செங்கட் பெயர்கொண் டவன்செம் பியர்கோன்
அங்கட் கருணை பெரிதா யவனே!
வெங்கண் விடையா யெம்வெண்ணி வலுளாய்!
அங்கத் தயர்வா யினளா யிழையே. 5

---

2. கரி - யானை. உரி - தோல். மலை - மேருமலை. சிலை - வில். விலையால் - விலைக்குப் பெறும். நிலையா - நிலையாக. நேரிழை - பெண்.

3. காலனை - இயமனை. உயிர் வீடு செய்தாய் - உயிரைப் போக்கியவனே. பால்வணனே - பால்போன்ற நிறமுள்ளவனே. ஆல் ஆர் நிழலாய் - கல்லாலமர நிழலில் எழுந்தருளியவனே.

4. சுறவக்கொடி கொண்டவன் - மீனக் கொடியையுடைய மன்மதன். நீறது வாய் உற - வெந்து சாம்பலாய் விழ. விறல் - வலிமை. கரிக்கு - யானைக்கு. என்னும் - என்று சொல்வாள். என் ஆயிழையே - எனது தலைவி.

5. செங்கட்பெயர் கொண்டவன் - கோச்செங்கட்சோழன் என்னும் பெயர் கொண்டவன். செம்பியர்கோன் - சோழன். அம்கண் கருணை - அழகிய கிருபா நோக்கம். அங்கத்து அயர்வு - உடலின் சோர்வு; விரகதாபத்தால் நேர்ந்த சோர்வு.

குன்றே யமர்வாய்! கொலையார் புலியின்
தன்றோ லுடையாய்! சடையாய்! பிறையாய்!
வென்றாய் புரமூன் றைவெண் ணவலுளே
நின்றா யருளா யெனுநே ரிழையே. 6. 7

மலையன் றெடுத்தவ் வரக்கன் முடிதோள்
தொலையவ் விரலூன் றியதூ மழுவா!
விலையா லெனையா ளும்வெண் ணவலுளாய்!
அலசா மனல்கா யெனுமா யிழையே. 8

திருவார் தருநா ரணனுன் முகனும்
மருவா வெருவா வழலாய் நிமிர்ந்தாய்!
விரையா ரும்வெண் ணவலுள்மே வியவெம்
அரவா! எனுமா யிழையா ளவளே. 9

புத்தர் பலரோ டமண்பொய்த் தவர்கள்
ஓத்தவ் வுரைசொல் லிவையோ ரகிலார்
மெய்த்தே வர்வணங் கும்வெண் ணவலுளாய்!
அத்தா! அருளா யெனுமா யிழையே. 10

திருச்சிற்றம்பலம்

---

7. குன்றே அமர்வாய் - மலையினைக் கோயிலாகக் கொண்டு அமர்பவனே. புரம் மூன்றை வென்றாய் - திரிபுரத்தை அழித்தவனே. அருளாய் - அருள்புரிவாய்.

8. அரக்கன் - இராவணன். தொலைய - நொறுங்க. வகர மெய் விரித்தல் விகாரம். தூ - தூய்மையான வலிமையுடைய. அலசாமல் - அலைக்காமல்; வருத்தாமல். நல்காய் - வந்து இன்பம் நல்குவாய். எனும் - என்று கூறுவாள்.

9. திரு ஆர் தரு - இலக்குமியைப் பெற்ற. மருவா - மருவி: கூடி எதிர்த்து. வெருவா - அச்சத்துடன் நிற்க. விரை - வாசனை. அரவா - நாகாபரணனே: அரனே! வா எனினுமாம்.

10. அமண் - சமணர். பொய்த்தவர் - பொய்த் தவத்தை உடையவர்கள். ஒத்த உரை - ஒரே மாதிரியாகக் கூறும் வார்த்தை. (வகர மெய் விரித்தல்.) ஓரகிலார் - உணரமாட்டார். மெய்த்தேவர் - உண்மையுடன் வழிபடும் தேவர்கள். அத்தா - தலைவனே.

10. திருவாரூர் *

பண் - கௌசிகம் [3-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

அந்த மாயுல காதியு மாயினான்
வெந்த வெண்பொடிப் பூசிய வேதியன்
சிந்தை யேபுகுந் தான்திரு வாரூரெம்
எந்தை தான்எனை ஏன்றுகொ ளுங்கொலோ. 1

கருத்த னேகரு தார்புர மூன்றெய்த
ஒருத்த னேயுமை யாளொடு கூறனே
திருத்த னேதிரு வாரூரெந் தீவண்ணா!
அருத்த! என்னெனை அஞ்சலென் னாததே. 2

மறையன் மாமுனி வன்மரு வார்புரம்
இறையின் மாத்திரை யில்லெரி யூட்டினான்
சிறைவண் டார்பொழில் சூழ்திரு வாரூரெம்
இறைவன் தான்எனை ஏன்றுகொ ளுங்கொலோ. 3

---

* இத் திருப்பதிகம் தலைவனைப் பிரிந்துள்ள தலைவி, தனக்கு இனித் தலைவன் தண்ணளி செய்ய மாட்டானோ என வருந்திக் கூறும் முறையில் அமைந்துள்ளது.

திருஞானசம்பந்தர் திருவாரூர் நகர்ப்புறத்துச் செல்லுங்கால் எதிர்கொண்டுவந்த அடியார் கூட்டத்தைக்கண்டு வணங்கியபோது ஓதியருளியது இப்பதிகம்.

1. அந்த மாயுல காதியு மாயினான் - உவகையாக அழித்தலும் ஆக்கலும் செய்பவன். அந்தம் - முடிவு. ஆதி - முதல். வேதியன் - வேதத்தை அருளியவன்; ஏன்று கொளுங்கொலோ - ஏற்று அருள்புரிவாரா?

2. கருத்தன் - கருதியவர் மனத்தில் இருப்பவன்; தலைவன். கருதார் - பகைவர். அருத்த - மெய்ப்பொருளானவனே. என் - என்ன. அஞ்சல் - பயப்படாதே. என்னாதது - என்று கூறுமலிருப்பது.

3. மா முனிவன் - யாவற்றிலும் விருப்பற்றவன். மருவார் - பகைவர். இறையின் மாத்திரையில் - கண்ணிமைக்குங் கால அளவில். எரி ஊட்டினான் - எரிந்து அழியும்படி செய்தவன்.

பல்லி லோடுகை யேந்திப் பலிதிரிந்
தெல்லி வந்திடு காட்டெரி யாடுவான்
செல்வ மல்கிய தென்திரு வாரூரான்
அல்லல் தீர்த்தெனை அஞ்சலெ னுங்கொலோ. 4

குருந்த மேறிக் கொடிவிடு மாதவி
விரிந்த லர்ந்த விரைகமழ் தேன்கொன்றை
திருந்து மாடங்கள் சூழ்திரு வாரூரான்
வருந்தும் போ(து)எனை வாடலெ னுங்கொலோ. 5

வார்கொள் மென்முலை யாளொரு பாகமா
ஊர்க ளாரிடு பிச்சைகொ ளுத்தமன்
சீர்கொள் மாடங்கள் சூழ்திரு வாரூரான்
ஆர்க ணாஎனை அஞ்சலெ னாததே. 6

வளைக்கை மங்கைநல் லாளையோர் பாகமாத்
துளைக்கை யானை துடர்படப் போர்த்தவன்
திளைக்குந் தண்புனல் சூழ்திரு வாரூரான்
இளைக்கும் போதெனை ஏன்றுகொ ளுங்கொலோ. 7

இலங்கை மன்னன் இருபது தோளிறக்
கலங்கக் கால்விர லாற்கடைக் கண்டவன்
வலங்கொள் மாமதில் சூழ்திரு வாரூரான்
அலங்கல் தந்தெனை அஞ்சலெ னுங்கொலோ. 8

---

4. பல் இல் ஓடு - பற்கள் உதிர்ந்த மண்டையோடு. எல்லி - இரவு; சங்கார காலத்திருள். அல்லல் - துன்பம்.

5. குருந்தம் - ஒரு வகை மரம். மாதவி - குருக்கத்தி. வருந்தும் போது - பிரிவுத் துன்பத்தால் வருந்தும்போது. வாடல் - வாட்டமடையாதே.

6. வார் - கச்சு. ஊர்களார் - ஊரிலுள்ளவர்கள். உத்தமன்-மேலானவன். ஆர் கணா - உற்றவிடத்துதவி புரிபவனே.

7. யானை - இங்குக் கயமுகாசுரன். இளைக்கும்போது - மனம் இளைத்து வருந்தும்போது.

8. இற - ஒடிய. கடை - முடிவு. அலங்கல் தருதல் - இது தலைவன் பிரிதலால் வாடிய தலைவியைத் தேற்றுதற்குப் புரியும் செயல் ஆகும்; ஆதரவு புரிதலுமாம்,

நெடிய மாலும் பிரமனு நேர்கிலாப்
படிய வன்பனி மாமதிச் சென்னியான்
செடிகள் நீக்கிய தென்திரு வாரூரெம்
அடிகள் தானென்னை அஞ்சலெ னுங்கொலோ. 9

மாசு மெய்யினர் வண்துவ ராடைகொள்
காசை போர்க்குங் கலதிகள் சொற்கொளேல்
தேச மல்கிய தென்திரு வாரூரெம்
ஈசன் தானென்னை ஏன்றுகொ ளுங்கொலோ. 10

திருச்சிற்றம்பலம்

---

11. திருத்தோணிபுரம் *

பண் - பழம்பஞ்சுரம் [3-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

கரும்பமர் வில்லியைக் காய்ந்து
காதற் காரிகை மாட்டருளி
அரும்பமர் கொங்கை யோர்பால்
மகிழ்ந்த அற்புதஞ் செப்பரிதால்;
பெரும்பகலே வந்தென் பெண்மை
கொண்டு பேர்த்தவர் சேர்ந்தஇடம்
சுரும்பமர் சோலைகள் சூழ்ந்த
செம்மைத் தோணி புரந்தானே. 1

---

9. நேர்கிலாப்படியவன் - அறிய இயலாதஉருவன். பனி - குளிர்ச்சி. செடிகள் - குற்றங்கள்.

10. மாசு - குற்றம். வண் - வளமான. துவராடை - செவ்விய காவித்துணி. காசை-செவ்வாடைப் போர்வை. கலதிகள் - கீழ்த்தன்மையுள்ளவர்கள்; மூதேவிகள். தேசம் - ஊர்கள்.

* இத் திருப்பதிகம் பிரிவின்கண் தலைவனை நினைந்து தலைவி வருந்தித் தலைவன் இருப்பிடத்தைத் தோழிபால் அறிவிப்பதாக அமைந்துள்ளது; இஃது அறத்தொடு நிற்றல் என்ற துறையுமாம்.

1. கரும்பமர் வில்லி - கரும்பு வில்லையுடைய மன்மதன். காதற்காரிகை - உமாதேவியார். அரும்பு அமர் - அரும்பு போன்ற- செப்பு அரிது - சொல்வதற்கு அரியது. ஆல் - அசை. பெண்மை கொண்டு - பெண் தன்மையைக் கொண்டு. போத்தவர் - சென்றவர். சுரும்பு - வண்டு. தோணிபுரம் - சீகாழி.

கொங்கியல் பூங்குழற் கொவ்வைச்
செவ்வாய்க் கோமள மாதுமையாள்
பங்கிய லுந்திரு மேனி
யெங்கும் பால்வெள்ளை நீறணிந்து
சங்கியல் வெள்வளை சோர
வந்தென் சாயல்கொண் டார்தமதூர்
துங்கியன் மாளிகை சூழ்ந்த
செம்மைத் தோணி புரந்தானே. 2

மத்தக் களிற்றுரி போர்க்கக்
கண்டு மாதுமை பேதுறலுஞ்
சித்தந் தெளியநின் றாடி
யேறூர் தீவண்ணர் சில்பலிக்கென்
றொத்தபடி வந்தென் னுள்ளங்
கொண்ட ஒருவர்க் கிடம்போலும்
துத்தநல் லின்னிசை வண்டு
பாடுந் தோணி புரந்தானே. 3

வள்ள லிருந்த மலையத
னைவலஞ் செய்தல் வாய்மையென
உள்ளங் கொள்ளா துகொதித்
தெழுந்தன் றெடுத்தோன் உரநெரிய

---

2. கொங்கு இயல் - இயற்கை மணம் பொருந்திய. கொவ்வை - கோவைப்பழம். கோமளம் - அழகு. மாது உமையாள் - உமாதேவி யார். பால் வெள்ளை நீறு - மிக வெள்ளிய திருநீறு. சங்கியல் வெள் வளை - வெள்ளிய சங்கினாலாகிய வளையல். சோர - நெகிழ. சாயல் - உடல் அழகு.

3. மத்தம் - மதங்கொண்ட. பேதுறல் - அஞ்சுதல். சித்தம் - உமாதேவியின் திருவுளம். ஏறு ஊர் - இடபத்தில் ஏறிய. தீவண்ணர் - செம்மேனியர். படி - தலைவாசல். என் உளங்கொண்ட - எனது மனத்தைக் கவர்ந்து கொண்ட. துத்தம் - ஓர் இசை.

8. வள்ளல் இருந்த மலை அதனை - சிவபெருமான் எழுந்தருளிய கயிலை மலையை. வாய்மை என - (ஆட்சிக்கு) வலிமை என. எடுத்தோன் - எடுத்தவனாகிய இராவணன். உரம் - மார்பு. மேவும் - எழுந்தருளும். துள் ஒலி - துள்ளி ஒலிக்கும். வெள்ளம் - ஊழி வெள்ளம்.

மெள்ள விரல்வைத் தேனுள்ளங்
கொண்டார் மேவு மிடம்போலும்
துள்ளொலி வெள்ளத் தின்மேல்
மிதந்த தோணி புரந்தானே. 8

வெல்பற வைக்கொடி மாலும்
மற்றை விரைமலர் மேலயனும்
பல்பற வைப்படி யாயுயர்ந்தும்
பன்றிய தாய்ப்ப ணிந்துஞ்
செல்வற நீண்டெஞ் சிந்தை
கொண்ட செல்வ ரிடம்போலும்
தொல்பற வைசுமந் தோங்கு
செம்மைத் தோணி புரந்தானே. 9

குண்டிகை பீலிதட் டோடு
நின்று கோசரங் கொள்ளியரும்
மண்டைகை யேந்தி மனங்கொள்
கஞ்சி யூணரும் வாய்மடிய
இண்டைபு னைந்தெரு தேறிவந்தென்
எழில்க வர்ந்தா ரிடமாம்
தொண்டிசை பாட லறாத
தொன்மைத் தோணி புரந்தானே. 10

திருச்சிற்றம்பலம்

---

9. வெல் பறவை - வெற்றி பொருந்திய கருடன். மால் - திருமால். விரைமலர் - தாமரை. பல் - கூரிய அலகுடைய. பறவைப்படியாய் - அன்னப்பறவை வடிவாய். தொல்பறவை சுமந்தோங்கும் - இதனை அப்பர் சுவாமிகள் திருக்கழுமலத் திருப்பதிகத்தில் "நின்பாத மெல்லாம் நாலஞ்சு புள்ளின மேந்தின" என்பர்.

10. பீலி - மயில் தோகை. தட்டு - தட்டுடை. கோசாதகம் என்பது கோசரம் என நின்றது. கோசாதகம் - மயிர். மண்டை - தலையோடு. ஊண் - உணவு. இண்டை - மாலை. தொண்டு இசை - தொண்டர்கள் இசையுடன் கூடிய. தொன்மை - பழமை.

12. திருப்பரிதிநியமம் *

பண் - பழம்பஞ்சுரம் [3-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

விண்கொண்ட தூமதி சூடிநீடு
விரிபுன் சடைதாழப்
பெண்கொண்ட மார்பில்வெண் ணீறுபூசிப்
பேணார் பலிதேர்ந்து
கண்கொண்ட **சாயலோ டேர்கவர்ந்த**
கள்வர்க் கிடம்போலும்
பண்கொண்ட வண்டினம் பாடியாடும்
பரிதிந் நியமமே. 1

அரவொலி வில்லொலி அம்பினொலி
அடங்கார் புரமூன்றும்
நிரவவல்லார் நிமிர்புன் சடைமேல்
நிரம்பா மதிசூடி
இரவில் புகுந்தென் னெழில்கவர்ந்த
இறைவர்க் கிடம்போலும்
பரவவல் லார்வினை பாழ்படுக்கும்
பரிதிந் நியமமே. 2

வாண்முக வார்குழல் வாள்நெடுங்கண்
வளைத்தோள் மாதஞ்ச
நீண்முக மாகிய பைங்களிற்றின்
னுரிமேல் நிகழ்வித்து

---

* இத் திருப்பதிகம் நிறையழிந்த தலைவி தலைவனை நினைந்து அவன் இருப்பிடத்தைச் சுட்டி வருந்திக் கூறியதாக அமைந்துள்ளது.

1. விண் கொண்ட - வானில் உலாவும். புன் சடை - குஞ்சிச் சடை. பேணார் - விருப்பமில்லாத. சாயல் - உடல் நிறம். ஏர்கவர்தல் - இஃது உறுப்பு நலனழிதல். பரிதிநியமம் - சூரியன் பூசித்த தலம். (பரிதி - சூரியன். நியமம் - கோயில்.) இது பரிதியப்பர் கோயில் எனவும் வழங்குவதாகும்.

2. அரவு - வாசுகியாகிய பாம்பு. நிரவ வல்லார் - அழிக்கவல்லார். நிரம்பாமதி - இளம்பிறை. பரவ வல்லார் - துதிக்க வல்லவர்களின். வினை - தீவினைகளை. பாழ்படுக்கும் - போக்கும்

நாண்முகங் காட்டி நலங்கவர்ந்த
நாதர்க் கிடம்போலும்
பாண்முக வண்டினம் பாடியாடும்
பரிதிந் நியமமே. 3

வெஞ்சுரஞ் சேர்விளை யாடல்பேணி
விரிபுன் சடைதாழத்
துஞ்சிருள் மாலையும் நண்பகலுந்
துணையார் பலிதேர்ந்து
அஞ்சுரும் பார்குழல் சோரவுள்ளங்
கவர்ந்தார்க் கிடம்போலும்
பஞ்சுரம் பாடிவண் டியாழ்முரலும்
பரிதிந் நியமமே. 4

நீர்புல்கு புன்சடை நின்றிலங்க
நெடுவெண் மதிசூடித்
தார்புல்கு மார்பில்வெண் ணீறணிந்து
தலையார் பலிதேர்வார்
ஏர்புல்கு சாய லெழில்கவர்ந்த
இறைவர்க் கிடம்போலும்
பார்புல்கு தொல்புக ழால்விளங்கும்
பரிதிந் நியமமே. 5

---

3. வாண் - ஒளி. வாள் - வாள் போன்ற. வளைத்தோள் - கடகம் பொருந்திய தோளையுடைய. நீண் முகம் - நீண்ட முகம். நாண் முகம் - புதிய அருள் முகம்; நாணம் விளைக்கும் முகம். பாண் - பாடல்.

4. வெஞ்சுரம் - சுடலை. பேணி - விரும்பி. நண்பகல் - நடுப்பகல். அம் சுரும்பு – அழகிய வண்டு. குழல் சோர - கூந்தல் அவிழ. பஞ்சுரம்- பழம்பஞ்சுரம் என்னும் பண்ணை. யாழ் - யாழ் போல. முரலும் - ஒலிக்கின்ற.

5. நீர் புல்கு - கங்கை தங்கிய. தார் - மாலை. தலையார் - தலை யோட்டில். ஏர்புல்கு - அழகு ததும்பிய. இறைவர் - தலைவர். பார்புல்கு - உலகத்தில் பொருந்திய.

வெங்கடுங் காட்டகத் தாடல்பேணி
விரிபுன் சடைதாழத்
திங்கள் திருமுடிமேல் விளங்கத்
திசையார் பலிதேர்வார்
சங்கொடு சாய லெழில்கவர்ந்த
சைவர்க் கிடம்போலும்
பைங்கொடி முல்லை படர்புறவிற்
பரிதிந் நியமமே. 6

பிறைவளர் செஞ்சடை பின்தயங்கப்
பெரிய மழுவேந்தி
மறையொலி பாடிவெண் ணீறுபூசி
மனைகள் பலிதேர்வார்
இறைவளை சோர எழில்கவர்ந்த
இறைவர்க் கிடம்போலும்
பறையொலி சங்கொலி யால்விளங்கும்
பரிதிந் நியமமே. 7

ஆசடை வானவர் தானவரோ
டடியா ரமர்ந்தேத்த
மாசடை யாதவெண் ணீறுபூசி
மனைகள் பலிதேர்வார்

---

6. வெங் கடுங்காடு - கொடிய சுடுகாடு. திசையார் - திசைகள் எங்கும். சங்கொடு - சங்கு வளையலுடன். எழில் - அழகையும். படர்- படர்ந்துள்ள. புறவு - முல்லை நிலம்.

7. பின் தயங்க - பின்னே விளங்க. மறையொலி பாடி - வேத மந்திர வொலியுடன் கூறி. இறைவளை - இரேகையினையுடைய வளை யல்கள். இறை - கைச்சந்து. பறை - வாத்தியம்.

8. ஆசு அடை - கவசம் அணிந்த. தானவர் - அசுரர். மாசு - குற்றம். வெண்ணீறு - வெள்ளிய திருநீறு. காசு அடை - பொற்காசு கள் பொருந்திய. மேகலை - ஓர் ஆபரணம். பாசு அடை - பசுமை பொருந்திய. பொய்கை - தடாகம் சூழ்ந்த.

காசடை மேகலை சோரவுள்ளங்
கவர்ந்தார்க் கிடம்போலும்
பாசடைத் தாமரை வைகுபொய்கைப்
பரிதிந் நியமமே. 8

நாடினர் காண்கிலர் நான்முகனுந்
திருமால் நயந்தேத்தக்
கூடல ராடல ராகிநாளுங்
குழகர் பலிதேர்வார்
ஏடலர் சோர எழில்கவர்ந்த
இறையவர்க் கிடம்போலும்
பாடல ராடல ராய்வணங்கும்
பரிதிந் நியமமே. 9

கல்வள ராடையர் கையிலுண்ணுங்
கழுக்க ளிழுக்கான
சொல்வள மாகநினைக்க வேண்டா
சுடுநீ றதுவாடி
நல்வளை சோர நலங்கவர்ந்த
நாதர்க் கிடம்போலும்
பல்வளர் முல்லையங் கொல்லைவேலிப்
பரிதிந் நியமமே. 10

திருச்சிற்றம்பலம்

---

9. நாடினர் - விரும்பினவர். நயந்து - விரும்பி. நாளும் - நாடோறும். குழகர் - இளமையுடையவர். ஏடு அலர் - கண்ணிமை.

10. கல் - காவிக்கல். கல்வளர் ஆடை - காவியாடை. கழுக்கள் - சோம்பேறிகள். சொல் வளம் ஆக - பொருள் பொருந்திய சொல்லாக. சுடு நீறது - வெந்த வெண்ணீறு. அது - பகுதிப் பொருள் விகுதி. ஆடி - பூசி. பல் வளர் - பல் போன்ற வடிவுடன் வளரும். கொல்லை - முல்லை நிலம்.

௨

சிவ சிவ

செந்திலாண்டவன் துணை

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள்

தேவாரம்

1. திருக்கழிப்பாலை *

பண் - காந்தாரம் [4-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

வனபவள வாய்திறந்து வானவர்க்குந்
தானவனே என்கின் றாளால்
சினபவளத் திண்தோள்மேற் சேர்ந்திலங்கு
வெண்ணீற்றன் என்கின் றாளால்
அனபவள மேகலையோ டப்பாலைக்
கப்பாலான் என்கின் றாளால்
கனபவளஞ் சிந்துங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. 1

வண்டுலவு கொன்றை வளர்புன்
சடையானே என்கின் றாளால்
விண்டலர்ந்து நாறுவதோர் வெள்ளெருக்க
நாண்மலருண் டென்கின் றாளால்

---

* இத் திருப்பதிகம் தலைவனைப்பிரிந்து நின்ற தலைவியினது மெலிவு கண்டு செவிலித்தாய் வருந்திக் கூறியதாக அமைத்துப் பாடப் பெற்றுள்ளது. இதனுள் இறைவனாகிய தலைவனின் பிரிவுக்காகத் தலைவி வருந்திப் புலம்புகின்றமை குறித்துத் தாய் வருந்துதலை அறிக. இது நற்றாய் இரங்கல் என்னும் துறையின்பாற்படும் எனினுமாம்.

1. வன பவளம் - அழகிய பவளம் போன்ற. வாய் திறந்து - மனத்தினுள் வைக்கலாற்றாமல் வாய் திறந்து. என்கின்றாள் - என்று பிதற்றுகின்றாள். அன பவளம் - செம்பவளம். கழிப்பாலை - திருக் கழிப்பாலை. இது சிதம்பரத்திற்கு அருகில் உள்ள கொள்ளிடத்தின் வடகரையில் காரைமேடு என்னும் இடத்தில் இருந்தது; தற்போது சிவபுரியில் தனிக்கோயிலாக அமைத்து வைக்கப்பெற்றுள்ளது. கொல்லோ - இஃது ஐயப் பொருளில் வந்தது.

உண்டயலே தோன்றுவதோ ருத்தரியப்
பட்டுடையன் என்கின் றாளால்
கண்டயலே தோன்றுங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. 2

பிறந்திளைய திங்களெம் பெம்மான்
முடிமேல தென்கின் றாளால்
நிறங்கிளருங் குங்குமத்தின் மேனி
அவன்நிறமே என்கின் றாளால்
மறங்கிளர்வேற் கண்ணாள் மணிசேர்
மிடற்றவனே என்கின் றாளால்
கறங்கோத மல்குங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. 3

இரும்பார்ந்த சூலத்தன் ஏந்தியோர்
வெண்மழுவன் என்கின் றாளால்
சுரும்பார் மலர்க்கொன்றைச் சுண்ணவெண்
ணீற்றவனே என்கின் றாளால்
பெரும்பால னாகியோர் பிஞ்ஞகவே
டத்தன் என்கின் றாளால்
கரும்பானல் பூக்குங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. 4

பழியிலான் புகழுடையன் பால்நீற்றன்
ஆனேற்றன் என்கின் றாளால்
விழியுலாம் பெருந்தடங்கண் ணிரண்டல்ல
மூன்றுளவே என்கின் றாளால்

---

2. விண்டு அலர்ந்து - மிகமலர்ந்து. நாறுவது - மணம் வீசுவது. உத்தரியப் பட்டு - மேலாடை.

3. பிறந்து இளைய திங்கள் - மூன்றாம் பிறை. குங்குமத்தின் மேனி - செம்மேனி. மறம் - வீரம்; வலிமை. கறங்கு - ஒலி. ஓதம் - அலை.

4. இரும்பு ஆர்ந்த - எஃகினால் ஆகிய. சுண்ணம் - பொடி. பெரும்பாலன் - மிக்க இளமையுடையவன். பிஞ்ஞகன் - தலைக்கோல முடையவன். கரும்பானல் - கருங்குவளை மலர்.

சுழியுலாம் வருகங்கை தோய்ந்த
சடையவனே என்கின் றாளால்
கழியுலாஞ் சூழ்ந்த கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. 5

பண்ணார்ந்த வீணை பயின்ற
விரலவனே என்கின் றாளால்
எண்ணார் புரமெரித்த எந்தை
பெருமானே என்கின் றாளால்
பண்ணார் முழவதிரப் பாடலொ
டாடலனே என்கின் றாளால்
கண்ணார் பூஞ்சோலைக் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. 6

முதிருஞ் சடைமுடிமேல் மூழ்கும்
இளநாகம் என்கின் றாளால்
அதுகண் டதனருகே தோன்றும்
இளமதியம் என்கின் றாளால்
சதுர்வெண் பளிக்குக் குழைகாதின்
மின்னிடுமே என்கின் றாளால்
கதிர்முத்தஞ் சிந்துங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. 7

ஓரோத மோதி உலகம்
பலிதிரிவான் என்கின் றாளால்
நீரோத மேற நிமிர்புன்
சடையானே என்கின் றாளால்

---

5. பழியிலான் புகழுடையான் - இது "நன்றுடையான் தீய திலான்" போல. சுழி உலாம் - சுழன்று. கழி - உப்பங்கழி.

6. விரலவன் - விரலையுடையவன். எண்ணார் - பகைவர். முழவு - மத்தளம். கண் ஆர் - இடம் அகன்ற.

7. மூழ்கும் - மறையும். அதுகண்டு - அந்நாகத்தைக் கண்டு. பளிக்கு - பளிங்குக்கல். மின்னிடும் - ஒளிவிடும். கதிர் - ஒளி.

பாரோத மேனிப் பவளம்
    அவன்திறமே என்கின் றாளால்
காரோத மல்குங் கழிப்பாலைச்
    சேர்வானைக் கண்டாள் கொல்லோ. 8

வானுலாந் திங்கள் வளர்புன்
    சடையானே என்கின் றாளால்
ஊனுலாம் வெண்டலைகொண் டூரூர்
    பலிதிரிவான் என்கின் றாளால்
தேனுலாங் கோதை திளைக்குந்
    திருமார்பன் என்கின் றாளால்
கானுலாஞ் சூழ்ந்த கழிப்பாலைச்
    சேர்வானைக் கண்டாள் கொல்லோ. 9

அடர்ப்பரிய இராவணனை அருவரைக்கீழ்
    அடர்த்தவனே என்கின் றாளால்
சுடர்ப்பெரிய திருமேனிச் சுண்ணவெண்
    ணீற்றவனே என்கின் றாளால்
மடற்பெரிய ஆலின்கீழ் அறநால்வர்க்
    கன்றுரைத்தான் என்கின் றாளால்
கடற்கருவி சூழ்ந்த கழிப்பாலைச்
    சேர்வானைக் கண்டாள் கொல்லோ. 10

திருச்சிற்றம்பலம்

---

8. ஓரோதம்—வேதம் ; பிரணவம். நீரோதம் – கங்கை. பார்ஓதம்—உலகத்தவர் ஓதுகின்ற. காரோதம் – மேகங் கூட்டங்கள்.

9. ஊன் உலாம் – மாமிசம் பொருந்திய. கோதை – இங்கு உமாதேவியார். திளைக்கும் - அனுபவிக்கும். கான் – சோலை.

10. அடர்ப்பு அரிய - போர் புரிதற்கு அரிய. மடல்—இங்கு இலை. ஆல் – கல்லாலவிருட்சம். நால்வர்க்கு – சனகாதி முனிவர் நால்வர்க்கு.

2. திருப்பழனம் *

பண் - பழந்தக்கராகம் [4-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள்! சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பன்என் புதுநலமுண் டிகழ்வானோ. 1

கண்டகங்காள்! முண்டகங்காள்! கைதைகாள்! நெய்தல்காள்!
பண்டரங்க வேடத்தான் பாட்டோவாப் பழனத்தான்
வண்டுலாந் தடம்மூழ்கி மற்றவனென் தளிர்வண்ணம்
கொண்டநாள் தானறிவான் குறிக்கொள்ளா தொழிவானோ. 2

மனைக்காஞ்சி இளங்குருகே! மறந்தாயோ? மதமுகத்த
பனைக்கைம்மா வுரிபோர்த்தான் பலர்பாடும் பழனத்தான்
நினைக்கின்ற நினைப்பெல்லாம் உரையாயோ? நிகழ்வண்டே!
சுனைக்குவளை மலர்க்கண்ணாள் சொற்றூதாய்ச் சோர்வாளோ. 3

---

* இத் திருப்பதிகம் கூடிப்பிரிந்த தலைமகனை நினைந்து புலந்துரைத்த தலைவியின் கூற்றாக அமைந்துள்ளது. இங்கு முன்னை நாள் தம்மை ஆண்டு அனுபவித்த பழனத்தானாகிய தலைவன் இப்பொழுது தம்மைப்பிரிந்து இகழ்வானோ? கைவிடுத்தானோ? என ஊடற்குறிப்பும் இரங்கற்குறிப்புத் தோன்ற அமைந்துள்ளது.

குயில், பூந்தென்றல், நாரை, பூவை, அன்னம் முதலியன தலைவன் தலைவியர் கூடியிருந்தகாலத்து இன்பம் விளைவதற்குத் துணைபுரிந்தவையாதலின் அவை இங்கு விளக்கப்பெற்றன.

1. சொல்மாலை - இங்குக் கீதம். இனம் - கூட்டம். சொல்லீரே - (மார்பன் என் புது நலம் உண்டு இகழ்வானோ என்பதைச்) சொல்வீராக. பண் - பண்களை. முகிழ் - முகை. பொன்மாலை - பொன்னின் தன்மையுடைய. புது நலம் - புதுவதாகிய எனது அன்பின் நலத்தினை.

2. கண்டகம் - நீர் முள்ளி. முண்டகம் - தாமரை. கைதை - தாழை. நெய்தல் - ஆம்பல்மலர். பண்டரங்கம் - இது சிவன் கூத்தில் ஒன்று. ஓவா - ஒழியாத. என் தளிர் வண்ணம் கொண்ட - என் நலனை அனுபவித்த.

3. காஞ்சி - காஞ்சிமரம். மதமுகத்த - கன்னமதத்தையுடைய. நிகழ் - பறக்கின்ற. சொல் தூதாய் - தன் எண்ணத்தைச் சொல்லும் தூதுக்குப்பிறர் ஒருவரும் இன்றி. சோர்வாளோ - அயர்வாளோ.

புதியையாய் இனியையாம் பூந்தென்றல்! புறங்காடு
பதியாவ திதுவென்று பலர்பாடும் பழனத்தான்
மதியாதார் வேள்விதனை மதித்திட்ட மதிகங்கை
விதியாளன் என்னுயிர்மேல் விளையாடல் விடுத்தானே. 4

மண்பொருந்தி வாழ்பவர்க்கும் மாதீர்த்த வேதியர்க்கும்
விண்பொருந்து தேவர்க்கும் வீடுபேறாய் நின்றானைப்
பண்பொருந்த இசைபாடும் பழனஞ்சேர் அப்பனையென்
கண்பொருந்தும் போதத்துங் கைவிடநான் கடவேனே. 5

பொங்கோத மால்கடலிற் புறம்புறம்போய் இரைதேரும்
செங்கால்வெண் மடநாராய்! செயற்படுவ தறியேன்நான்
அங்கோல வளைகவர்ந்தான் அணிபொழில்சூழ் பழனத்தான்
தங்கோல நறுங்கொன்றைத் தாரருளா தொழிவானே. 6

துணையார முயங்கிப்போய்த் துறைசேரு மடநாராய்!
பணையார வாரத்தான் பாட்டோவாப் பழனத்தான்
கணையார இருவிசும்பிற் கடியரணம் பொடிசெய்த
இணையார மார்பனென் எழில்நலமுண் டிகழ்வானே. 7

கூவைவாய் மணிவரன்றிக் கொழித்தோடுங் காவிரிப்பூம்
பாவைவாய் முத்திலங்கப் பாய்ந்தாடும் பழனத்தான்

---

4. புதியை - புதுமை. பூந்தென்றல் - இனிய தென்றல் காற்றே. புறங்காடு - சுடலை. பதி - ஊர். மதி கங்கை விதியாளன் - சந்திரனுக்கும் கங்கைக்கும் ஏற்றபடி விரிவும் ஒடுக்கமும் விதித்தவன்.

5. மாதீர்த்தம் - மிகப் புனிதமுடைய. வீடுபேறு - சிவப்பேறு. அப்பனை - தலைவனை. கண் பொருந்தும் போதத்தும் - உறக்கத்தில் கனவு நிலையடையும்போதும்.

6. ஓதம் - அலை. இரை - உணவு. தேரும் - தேடும். செயற்படுவது - தொழிற்படுதல். அம் கோலம் வளை - அழகிய வளையல். கொன்றைத்தார் அருளல் - மயக்கம் தீர அருள் புரிதலின் செயல்.

7. துணை - தன் துணைப்பெடை. கணை ஆர - அம்பு எய்யாமல். கடி அரணம் - திரிபுரம். எழில் நலம் - உடல் அழகு. உண்டு - அனுபவித்து.

8. கூவைவாய்மணி - பூமியில் தோன்றும் மணிகளை. (கூ - பூமி.) காவிரிப்பூம்பாவை - காவிரியாகிய பாவை. கொல் ஏறு - இடபம். மழலைகாள் - இனியமொழி பேசும் கிளிகாள்.

கோவைவாய் மலைமகள்கோன் கொல்லேற்றின் கொடியாடைப்
பூவைகாள்! மழலைகாள்! போகாத பொழுதுளதே. 8

புள்ளிமான் பொறியரவம் புள்ளுயர்த்தான் மணிநாகப்
பள்ளியான் தொழுதேத்த இருக்கின்ற பழனத்தான்
உள்ளுவார் வினைதீர்க்கு மென்றுரைப்பர் உலகெல்லாம்
கள்ளியேன் நான்இவற்கென் களவனையுங் கடவேனே. 9

வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் **பரந்**தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய்! கோடியையே. 10

திருச்சிற்றம்பலம்

---

3. திருநல்லூர் *

திருவிருத்தம் [4-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

அட்டு மினில்பலி யென்றென் றகங்கடை தோறும்வந்து
மட்டவி ழுங்குழ லார்வளை கொள்ளும் வகையென்கொலோ?

---

9. பொறி - புள்ளி. புள்ளுயர்த்தான் - பிரமதேவன். நாகப்பள்ளியான் - திருமால். கள்ளியேன் - வஞ்சமுடையேன். கடவேனே-இழப்பேனே.

10. வஞ்சித்து - வஞ்சனை புரிந்து. பஞ்சிக்கால் - செம்பஞ்சின் நிறம் போன்ற காலும். அன்னம் - அன்னமே. கலிமெலிய - வறுமை நீங்க. அழல் ஓம்பும் - வைதீக அக்கினிகளை வளர்க்கும். அப்பூதி - அப்பூதியடிகளுயனார்: இவர் அந்தணர்; திருநாவுக்கரசு சுவாமிகளிடம் அன்புகொண்டு நற்பேறு பெற்றவர். குஞ்சிப்பூவாய் நின்ற - சிரசில் பூப்போலச் சூடிக்கொள்ளும். கோடியையே - ஏற்றுக்கொள்ளுவாயே.

* தலைவனைப் பல நாட்களாகப் பிரிந்துறைந்தாள் தலைவி; பின்னர் ஒருநாள் கனவினில் கண்டு மகிழ்ந்தாள். பின் அக் கனவும் இழந்து வருந்தித் தோழியிடம் தலைவி கூறுகின்றாள். இவ் வகத்துறை **கனவிழந் துரைத்தல்** என்பதாகும். அத்துறைக் குறிப்புடன் இத் திருப்பதிகம் அமைந்துள்ளது. நாயகனுகிய இறைவனைப் பிரிந்து நாயனார் பலநாளாயிற்று; பின்னர் திருநல்லூரில் திருவடி திட்சை பெற்றார். பிறகும் அவரைப் பிரிந்து வருந்திக் கூறுகின்றார்.

கொட்டிய பாணி யெடுத்திட்ட பாதமுங் கோளரவும்
நட்டநின் றாடிய நாதர்நல் லூரிடங் கொண்டவரே. 1

பெண்ணிட்டம் பண்டைய தன்றிவை பெய்பலிக் கென்றுழல்வார்
நண்ணிட்டு வந்து மனைபுகுந் தாருநல் லூரகத்தே
பண்ணிட்ட பாடலர் ஆடல ராய்ப்பற்றி நோக்கிநின்று
கண்ணிட்டுப் போயிற்றுக் காரண முண்டு கறைக்கண்டரே. 2

படவேர் அரவல்குற் பாவைநல் லீர்!பக லேயொருவர்
இடுவா ரிடைப்பலி கொள்பவர் போலவந் தில்புகுந்து
நடவார் அடிகள் நடம்பயின் றாடிய கூத்தர்கொலோ
வடபாற் கயிலையுந் தென்பால்நல் லூருந்தம் வாழ்பதியே. 3

செஞ்சுடர்ச் சோதிப் பவளத் திரள்திகழ் முத்தனைய
நஞ்சணி கண்டன்நல் லூருறை நம்பனை நானொருகால்
துஞ்சிடைக் கண்டு கனவின் தலைத்தொழு தேற்கவன்றன்
நெஞ்சிடை நின்றக லான்பல காலமும் நின்றனனே. 4

வெண்மதி சூடி விளங்கநின் றானைவிண் ணோர்கள்தொழ
நண்ணில யத்தொடு பாடல றாதநல் லூரகத்தே
திண்ணில யங்கொண்டு நின்றான் திரிபுர மூன்றெரித்தான்
கண்ணுளும் நெஞ்சத் தகத்தும் உளகழற் சேவடியே. 5

---

1. இல் பலி அட்டுமின் - வீடுகள் தோறும் பலி இடுங்கள். மட்டு அவிழும் - மணம் வீசும். பாணி - பாடல் நட்டம் - கூத்து. நல்லூர்- இஃது ஆண்டான் கோயில் எனவும் பெயர் பெறும்.

2. இட்டம் - விருப்பம். நண்ணிட்டு - கருதி. கண்ணிட்டு-கண் காட்டிவிட்டு. கறைக்கண்டர் - நீலகண்டர்.

3. படம் ஏர் - அழகிய படமுடைய. இல் புகுந்து - வீட்டினுள் நுழைந்து. வடபால் கயிலையும் தென்பால் நல்லூரும் தம் வாழ்பதி - இது தலைவன் எழுந்தருளிய இடத்தைத் தெரிவிப்பதாகும்.

4. நம்பன் - மேலானவன். துஞ்சிடை கனவின் தலை கண்டு- தூங் கும்போது கனவின்கண் கண்டு. நெஞ்சிடை - என் மனத்தின்கண்.

5. நண் இலயத்தொடு - பொருந்திய இலயத்துடன். திண் - வலிமை. உன் கழல் சேவடி - உன்னுடைய வீரக்கழல் அணிந்த திரு வடிகள்.

தேற்றப் படத்திரு நல்லூ ரகத்தே சிவனிருந்தால்
தோற்றப் படச்சென்று கண்டுகொள் வார்தொண்டர் துன்மதியால்
ஆற்றிற் கெடுத்துக் குளத்தினில் தேடிய ஆதரைப்போல்
காற்றிற் கடுத்துலகெல்லாம் திரிதர்வர் காண்பதற்கே. 6

அறைமல்கு பைங்கழல் ஆர்ப்பநின் றுனணி யார்சடைமேல்
நறைமல்கு கொன்றையந் தாருடை யானும்நல் லூரகத்தே
பறைமல்கு பாடலன் ஆடல னாகிப் **பரிசழித்தான்**
பிறைமல்கு செஞ்சடை தாழநின் றாடிய பிஞ்ஞகனே. 8

மன்னிய மாமறை யோர்மகிழ்ந் தேத்த மருவியெங்கும்
துன்னிய தொண்டர்கள் இன்னிசை பாடித் தொழுதுநல்லூர்க்
கன்னியர் தாமுங் கனவிடை யுன்னிய காதலரை
அன்னியர் அற்றவர் அங்கண னேயருள் நல்கென்பரே. 9

திருஅமர் தாமரை சீர்வளர் செங்கழு நீர்கொள்நெய்தல்
குருஅமர் கோங்கங் குராமகிழ் சண்பகங் கொன்றைவன்னி
மருஅமர் நீள்கொடி மாட மலிமறை யோர்கள்நல்லூர்
உருஅமர் பாகத் துமையவள் பாகனை **உள்குதுமே.** 10

திருச்சிற்றம்பலம்

---

6. தேற்றப்பட - தெளிவுபட. துன்மதியால் - அறிவின்மையால் ஆற்றிற் கெடுத்துக் குளத்தினில் தேடிய ஆதரைப்போல - இஃது ஒரு பழமொழி. ஆதர் - அறிவில்லாதவர்; குருடருமாம். காற்றிற் கடுத்து - காற்றிலும் வேகமாக. திரிதர்வர் - திரிவர்.

8. அறைமல்கு - ஓசையெழும். நறை - தேன். பறை-வாத்தியம். பரிசு அழித்தான் - பண்பைப் போக்கினன். "பார்ப்பாரைப் பரிசழிப் பார் போல்கின்றார் தாம்" என்பது திருஆமாத்தூர்த் திருத்தாண்டக அடி.

9. மன்னிய - நிலைபெற்ற. துன்னிய - நெருங்கிய. கனவிடை - கனவின்கண். உன்னி - நினைத்து. அன்னியர் அற்றவர் - ஆதரவு இல்லாதவர். அங்கணன் - அழகிய நெற்றிக்கண்ணை யுடையவனே.

10. திரு - இலக்குமி. திரு அமர் தாமரை - 'திருவளர் தாமரை'. குரு - நிறம். மரு - வாசனை. உள்குதும் - இடைவிடாது நினைக்கின்றேன்.

4. திருவாரூர் *

திருக்குறுந்தொகை [5-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

எம்மை யாரிலை யானு முளேனலேன்
எம்மை யாரும் இதுசெய வல்லரே
அம்மை யாரெனக் கென்றென் றரற்றினேற்(கு)
அம்மை யாரைத்தந் தார்ஆரூர் ஐயரே. 6

தண்ட வாளியைத் தக்கன்றன் வேள்வியைச்
செண்ட தாடிய தேவர கண்டனைக்
கண்டு கண்டிவள் காதலித் தன்பதாய்க்
கொண்டி யாயின வாறென்றன் கோதையே. 7

† இவண மைப்பல பேசத் தொடங்கினாள்
அவண மன்றெனில் ஆரூர் அரனெனும்
பவனி வீதி விடங்கனைக் கண்டிவள்
தவனி யாயின வாறென்றன் தையலே. 8

திருச்சிற்றம்பலம்

---

* இத் திருப்பாடல்கள் தலைவனிடத்து மனமிழந்த தலைவியைக் கண்டு தாய் வருந்திக் கூறியதாக அமைந்துள்ளதாகும்.

† இப்பாடல் பவனி[உலா]வரும் தலைவனைக் கண்டு பருவமங்கையர் காதல் மீக்கூர வசமிழத்தல் என்ற துறை ஆகும். இதனுள்ளும் தலைவியின் நிலைகண்டு தாய் வருந்திக் கூறுதல் காண்க.

6. எம்மையார் - முன்னது எமக்கு இன்பம் அளிப்பவர்; பின்னது எவ்வகையார். அம்மையார் - தாய்போல் தண்ணளி புரிபவர். அரற்றல் - வாய்விட்டழுதல். அம்மையாரை - தாய்போன்ற தம்மையே. ஐயர் - தலைவர்.

7. தண்ட ஆளி - தண்டாயுதத்தை ஆளுபவன். செண்டு அது ஆடிய - அழித்தல் செய்த. அகண்டன் - வியாபகமானவன். என்றன் - என்னுடைய: இங்குத் தாயைக் குறிக்கும். கோதை - இங்குப் பெண். இப்பாடலில் ஆரூர் குறிப்பிடவில்லை.

8. இவண் - இவ்விடம். நமை - நம்மை. அவணம் - நிந்தை; பழி. பவனி - உலா; வீதிவிடங்கன் - தியாகராசப் பெருமான். தவனி - (காதலால்) உடற்கொதிப்புடையவள்.

5. திருக்கடம்பந்துறை *

திருக்குறுந்தொகை [5-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

முற்றி லாமுலை யாளிவ ளாகிலும்
அற்றந் தீர்க்கும் அறிவில ளாகிலும்
கற்றைச் செஞ்சடை யான்கடம் பந்துறைப்
பெற்றம் ஊர்தியென் றாளெங்கள் பேதையே. 1

திருச்சிற்றம்பலம்

---

6. திருவாவடுதுறை **

திருக்குறுந்தொகை [5-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

நிறைக்க வாலியள் அல்லளிந் நேரிழை
மறைக்க வாலியள் அல்லளிம் மாதராள்
பிறைக்க வாலப்பெ ரும்புன லாவடு
துறைக்க வாலியோ டாடிய சுண்ணமே. 1

---

* இத் திருப்பாடல், தலைவி நற்பருவம் அடையப்பெறாத முன்னரே தலைவனது பெருமையை உணர்ந்து அவன்பால் மையல் கொண்டதைக் கண்டு, தோழியானவள் வியந்து கூறிய வகையில் அமைந்துள்ளது.

1. முற்றிலா - முதிர்ச்சி அடையாத. முற்றிலா முலையாள் - நற்பருவம் அடையப்பெறாத தலைவி. அற்றம் தீர்க்கும் அறிவிலள் - மறைக்கத்தக்க உடலுறுப்புக்களை மறைக்கவறியாத அத்துணை இளம் பருவத்தினள். கடம்பந்துறை - கடம்பர்கோயில். பெற்றம் - இடபம். பேதை - பெண் ; பேதைப் பருவத்தினளுமாவள்.

** இத் திருப்பதிகம் தலைவனைக் கண்டு காதல்கொண்டு தன் வசமிழந்த தலைவியைக் கண்டு தாய் இரங்கிக் கூறும் கூற்றாக அமைந்துள்ளது.

1. வாலியள் - வலியள் ; நீட்டல் விகாரம். பிறைக்கவாலம் - கோரைப் புற்களைச் சாய்த்து வருகின்ற. பெரும் புனல் - காவிரி நதி. ஆவடுதுறை — இங்கு உமாதேவியார் பசு வடிவம் எய்திப் பூசித்தனர். அதனால் இப்பெயர் பெற்றது. ஆ - அடு - பசுத் தன்மையைப் போக்குகின்ற என்ற குறிப்புமாம்.

தவள மாமதிச் சாயலோர் சந்திரன்
பிளவு சூடிய பிஞ்ஞகன் எம்மிறை
அளவு கண்டிலள் ஆவடு தண்டுறைக்
களவு கண்டனள் ஒத்தனள் கன்னியே. 2

பாதிப் பெண்ணொரு பாகத்தன் பன்மறை
ஓதி யென்னுளங் கொண்டவன் ஒண்பொருள்
ஆதி ஆவடு தண்டுறை மேவிய
சோதி யே!சுட ரே!என்று சொல்லுமே. 3

கார்க்கொண் மாமுகில் போல்வதோர் கண்டத்தன்
வார்க்கொண் மென்முலை சேர்ந்திறு மாந்திவள்
ஆர்க்கொள் கொன்றையன் ஆவடு தண்டுறைத்
தார்க்கு நின்றிவள் தாழுமா காண்மினே. 4

கருகு கண்டத்தன் காய்கதிர்ச் சோதியன்
பருகு பாலமு தேயெனும் பண்பினன்
அருகு சென்றிலள் ஆவடு தண்டுறை
ஒருவன் என்னை யுடையகோ வென்னுமே. 5

குழலுங் கொன்றையுங் கூவிள மத்தமும்
தழலுங் கையலோர் பாகமாத் தாங்கினன்

---

2. தவளம் - வெண்மை. அளவு – தன்மையின் அளவு. களவு கண்டனள் - களவொழுக்கத்தைப் பெற்றனள். ஒத்தனள் - தலைவனின் தன்மையை அடைந்தனள்.

3. பன்மறை - பல வேதங்கள். என் உளம் கொண்டவன்-என் உள்ளத்தைக் கைக்கொண்டவன். என்று சொல்லுமே-என்று சொல்லுவாள்.

4. கார் - கருமை. வார் - கச்சு. இறுமாந்து - விம்மி. ஆர் - ஆத்தி மலர். தார்க்கு - மாலை பெறுதற்கு. தாழுமா - விரும்புமாறு.

5. கருகு - கருநிறமுள்ள. காய் கதிர் - சூரியனைப் போன்ற. என்னை உடைய கோ என்னும் - என்னை ஆட்கொண்ட தலைவனே என்று கூறுவாள்.

6. குழல் - இசைப்பாட்டு; அதனைப் பாடும் கந்தருவன். கூவிளம்- வில்வம். மத்தம் - ஊமத்தை. அழகன் - அழகினையுடையவன். என - என்று கூற. கை வளை கழலும் - கையின்கண் உள்ள வளையல்கள் கழன்று விழும்: இது காதலினால் உடல் இளைத்து நிகழும் செயல். காரிகையாள் - பெண்.

அழகன் ஆவடு தண்டுறை யாவெனக்
கழலுங் கைவளை காரிகை யாளுக்கே. 6

பஞ்சின் மெல்லடிப் பாவையோர் பங்கனைத்
தஞ்ச மென்றிறு மாந்திவ ளாரையும்
அஞ்சு வாளல்லள் ஆவடு தண்டுறை
மஞ்ச னோடிவள் ஆடிய மையலே. 7

பிறையுஞ் சூடிநற் பெண்ணோடா ணாகிய
நிறையு நெஞ்சமும் நீர்மையுங் கொண்டவன்
அறையும் பூம்பொழில் ஆவடு தண்டுறை
இறைவன் என்னை யுடையவன் என்னுமே. 8

வையந் தானளந் தானும் அயனுமாய்
மெய்யைக் காணலுற் றார்க்கழ லாயினான்
ஐயன் ஆவடு தண்டுறை யாவெனக்
கையில் வெள்வளை யுங்கழல் கின்றதே. 9

பக்கம் பூதங்கள் பாடப் பலிகொள்வான்
மிக்க வாளரக் கன்வலி வீட்டினான்
அக்க ணிந்தவன் ஆவடு தண்டுறை
நக்க னென்னுமிந் நாணிலி காண்மினே. 10

திருச்சிற்றம்பலம்

---

7. பஞ்சின் - பஞ்சைப்போல. பாவை - உமாதேவியார். தஞ்சம்- அடைக்கலம், ஆரையும் - எவரையும். மஞ்சனோடு - தலைவனோடு. ஆடிய மையலே - மையலில் மூழ்கிய விதந்தான் என்னே!

8. நிறை - கற்பு, நீர்மை - தன்மை; பண்பு. அறையும் - (வண்டுகள்) ஒலிக்கின்ற. என்னுமே - என்று சொல்லுவாள்.

9. வையந்தான் அளந்தான் - திருமால். அயன் - பிரமன். என - என்று கூற. கையில் - கையிலுள்ள. வளையும் என்றதனால் மேகலை முதலியனவும் கொள்க.

10. பூதங்கள் - சிவபூத கணங்கள். வாள் அரக்கன் - இராவணன். அக்கு - என்பு: சங்குமணியுமாம். நக்கன் - உடைநீத்த வடிவினன்: பிட்சாடனமூர்த்தி. நாணிலி - நாணமில்லாதவன். இந் நாணிலி நக்கன் என மாற்றுக.

7. திருக்கழிப்பாலை *

திருக்குறுந்தொகை [5-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

வண்ண மும்வடி வுஞ்சென்று கண்டிலள்
எண்ணி நாமங்கள் ஏத்தி நிறைந்திலள்
கண்ணு லாம்பொழில் சூழ்கழிப் பாலையெம்
அண்ண லேயறி வானிவள் தன்மையே. 1

மருந்து வானவர் உய்யநஞ் சுண்டுகந்
திருந்த வன்கழிப் பாலையுள் எம்பிரான்
திருந்து சேவடி சிந்தையுள் வைத்திவள்
பரிந்து ரைக்கிலும் என்சொற் பழிக்குமே. 2

மழலை தான்வரச் சொல்தெரி கின்றிலள்
குழலின் நேர்மொழி கூறிய கேண்மின்னோ
அழக னே!கழிப் பாலைஎம் அண்ணலே!
இகழ்வ தோஎனை ஏன்றுகொள் என்னுமே. 3

செய்ய மேனிவெண் ணீறணி வான்றனை
மைய லாகி மதிக்கில ளாரையும்
கைகொள் வெண்மழு வன்கழிப் பாலைஎம்
ஐய னேஅறி வானிவள் தன்மையே. 4

---

* இத்தலத் திருப்பதிகம் தலைவன் பிரிவு குறித்து வருந்தும் தலைவியினது மெலிவு கண்டு செவிலி கூறும் கூற்றாக அமைந்துள்ளது. இது நற்றாய் கூற்றுமாம்.

1. வண்ணம் - அழகு. கண் உலாம் - இடமகன்ற. அண்ணலே - தலைவனே. இவள் தன்மை - இப்பெண்ணின் இயல்பு.

2. மருந்து - தேவாமிர்தம் (உண்ண). உகந்திருந்தவன்-விரும்பி இருந்தவன். பரிந்து - விரும்பி. என் சொல் - என்னுடைய சொல்லை.

3. மழலை - மழலைச்சொல். மொழி - மொழியையுடையவள். கூறிய - கூறியவற்றை. ஏன்று கொள் - ஏற்றுக்கொள்வாய். என்னும் - என்று சொல்லுவாள்.

4. மையல் - காம மயக்கம். ஆரையும் மதிக்கிலள் - தன் தலைவனை அன்றிப் பிறர் ஒருவரையும் மதிக்கிலள். எம் ஐயனே-எம் ஐயன்தான்; இஃது அன்பு பற்றிய சொல்.

கருத்த னைக்கழிப் பாலையுள் மேவிய
ஒருத்த னைஉமை யாளொரு பங்கனை
அருத்தி யாற்சென்று கண்டிட வேண்டுமென்
றொருத்தி யாருளம் ஊசல தாடுமே. 5

கங்கை யைச்சடை வைத்து மலைமகள்
நங்கை யையுட னேவைத்த நாதனார்
திங்கள் சூடி திருக்கழிப் பாலையான்
இங்கு வந்திடு மென்றிறு மாக்குமே. 6

ஐய னே!அழ கே! அன லேந்திய
கைய னே! கறை சேர்தரு கண்டனே!
மையு லாம்பொழில் சூழ்கழிப் பாலையெம்
ஐய னே!விதி யேஅருள் என்னுமே. 7

பத்தர் கட்கமு தாய பரத்தினை
முத்த னைமுடி வொன்றிலா மூர்த்தியை
அத்த னைஅணி யார்கழிப் பாலையெம்
சித்த னைச்சென்று சேருமோ செப்புமே. 8, 9

பொன்செய் மாமுடி வாளரக் கன்தலை
அஞ்சு நான்குமொன் றும்மிறுத் தானவன்

---

5. கருத்தன் - மனத்தின்கண் திகழ்பவன். அருத்தியால் - மிக்க அன்பால். ஒருத்தி - இங்குத் தலைவி. ஊசலதாடும் - மனம் அங்குத் தலைவனைக் காணச் செல்ல இழுக்கவும், பிறர் அறியின் பழிப்பர் என்ற எண்ணம் இங்கு இழுக்கவும் ஊசலாடுதலாம்.

6. மலைமகள் நங்கை - உமாதேவியார். இங்கு - இவ்விடம்; தன்னிடம். இறுமாக்கும் - இறுமாப்புக் கொள்வாள். கங்கையையும் உமையையும் உடன் வைத்த அருளாளர் தன்னையும் உடன்வைப்பர் என்று தலைவி இறுமாப்புக் கொண்டாள் என்க.

7. கறை - விடம். மை - மேகம். விதி - ஊழ்வினை. அருள் என்னும் - அருள் புரிவாய் என்று கூறுவாள்.

9. பரம் - மேலானவன். முத்தன் - முத்தியளிப்பவன். சித்தனை - சிந்தையில் இருப்பவனை. செப்பும் — சொல்லுவாள்.

10. அஞ்சு நான்கும் ஒன்றும் - பத்தும். துஞ்சும்போதும் - பிரிவினால் உயிர் நீங்குகின்ற நிலையின் போதும். துணை எனல் - ஆதரவு என்று கூறுதல்.

என்செ யான்கழிப் பாலையுள் எம்பிரான்
துஞ்சும் போதும் துணையென லாகுமே. 10

திருச்சிற்றம்பலம்

---

8. திருத்தோணிபுரம் *

திருக்குறுந்தொகை [5-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

மாதி யன்று மனைக்கிரு வென்றக்கால்
நீதி தான்சொல நீயெனக் காரெனும்
சோதி யார்தரு தோணி புரவர்க்குத்
தாதி யாவன்நா னென்னுமென் தையலே. 1

நக்கம் வந்து பலியிடென் றூர்க்கிட்ட
மிக்க தையலை வெள்வளை கொள்வது
தொக்க நீர்வயல் தோணி புரவர்க்குத்
தக்க தன்று தமது பெருமைக்கே. 2

கெண்டை போல்நய னத்திம வான்மகள்
வண்டு வார்குழ லாளுட னாகவே
துண்ட வான்பிறைத் தோணி புரவரைக்
கண்டு காமுறு கின்றனள் கன்னியே. 3

பாலை யாழ்மொழி யாளவள் தாழ்சடை
மேல வாவது கண்டனள் விண்ணுறச்

---

* இத் திருப்பதிகம் தலைவியின் மெலிவு கண்டு செவிலி கூறும் கூற்றாக அமைந்துள்ளதாகும்; இது நற்றாய் கூற்று எனினுமாம்.

1. மாதியன்று - பெண் தன்மையன்று. இ - சாரியை. மனைக்கு இரு - மனையின்கண் இருப்பாய். ஆர்எனும் - யார் என்று சொல்லுவாள்.

2. நக்கம் - நிருவாணத்துடன். மிக்க-மிக்க அன்புள்ள. தையலை - என் பெண்ணை. தமது - தம்முடைய.

3. கெண்டை - கயல்மீன். வண்டுவார் - வண்டுகள் மொய்க்கின்ற. தோணிபுரவரை - தோணிபுரத்துத் தலைவரை. கன்னி - எம் தலைவி.

4. பாலை யாழ் - பாலை நிலத்திற்குரிய யாழ். சால - மிகவும். நல்லள் ஆகின்றனள் - இனியவளாகின்றனள்.

சோலை யார்தரு தோணி புரவர்க்குச்
சால நல்லளா கின்றனள் தையலே. 4

பண்ணி னேர்மொழி யாள்பலி யிட்டஇப்
பெண்ணை மால்கொடு பெய்வளை கொள்வது
சுண்ண மாடிய தோணி புரத்துறை
அண்ண லாருக்குச் சால அழகிதே. 5

முல்லை வெண்நகை மொய்குழ லாய்உனக்
கல்ல துவ தறிந்திலை நீகனித்
தொல்லை யார்பொழில் தோணி புரவர்க்கே
நல்லை யாயிடு கின்றனை நங்கையே. 6

ஒன்று தானறி யாருல கத்தவர்
நின்று சொல்லி நிகழ்ந்த நினைப்பிலர்
துன்று வார்பொழில் தோணி புரவர்தம்
கொன்றை சூடுங் குறிப்பது வாகுமே. 7

உறவு பேய்க்கணம் உண்பது வெண்டலை
உறைவ தீமம் உடலிலோர் பெண்கொடி
துறைக ளார்கடல் தோணி புரத்துறை
இறைவ னூர்க்கிவள் என்கண்டன் பாவதே. 8

மாக யானை மருப்பேர் முலையினர்
போக யானும் அவள்புக்க தேபுகத்

---

5. பண்ணின்நேர் - பண்ணையொத்த. மால் கொடு - விரக மயக்கம் அளித்து. அழகிதே - அழகாகுமா?

6. முல்லை - முல்லையரும்பை ஒத்த. கனி - பழம். தொல்லை - பழமை, நல்லையாயிடுகின்றனை - நல்லவளாகின்றனை,

7. ஒன்றுதான் - ஒப்பற்ற உண்மைப் பொருளை. துன்று - நெருங்கிய. சூடும் - தான் வாங்கிச் சூடிக்கொள்ளும்.

8. கணம் - கூட்டம். ஈமம் - சுடலை, கடல் துறைகள் ஆர்-கடற்கரையின் துறைகள் பொருந்திய. என் கண்டு அன்பு ஆவதே - எந்த விதத்தில் அன்புகொண்டது.

9. மாக யானை - பெரிய யானையின், தோகை சேர் தரு - மயில்கள் ஆடுதல் பொருந்திய. அவர்க்கு - அத்தலைவர்க்கு. ஆளதே - அடிமை யானதே.

தோகை சேர்தரு தோணி புரவர்க்கே
ஆக யானும் அவர்க்கினி யாளதே. 9

இட்ட மாயின செய்வாளென் பெண்கொடி
கட்டம் பேசிய காரரக் கன்றனைத்
துட்ட டக்கிய தோணி புரத்துறை
அட்ட மூர்த்திக்கு அன்பது வாகியே. 10

திருச்சிற்றம்பலம்

---

9. திருப்புகலூர் *

திருக்குறுந்தொகை [5-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

துன்னக் கோவணச் சுண்ணவெண் ணீறணி
பொன்னக் கன்ன சடைப்புக லூரரோ
மின்னக் கன்னவெண் திங்களைப் பாம்புடன்
என்னுக் கோவுடன் வைத்திட் டிருப்பதே. 1

இரைக்கும் பாம்பும் எறிதரு திங்களும்
நுரைக்குங் கங்கையும் நுண்ணிய செஞ்சடைப்
புரைப்பி லாத பொழிற்புக லூரரை
உரைக்கு மாசொல்லி ஒள்வளை சோருமே. 2

ஊச லாம்அர வல்குலென் சோர்குழல்
ஏச லாம்பழி தந்தெழில் கொண்டனர்

---

10. இட்டம் - விருப்பம். கட்டம் - துன்பத்தை. துட்டு அடக்கிய - வலிமையை அடக்கிய. அட்டமூர்த்தி - மண், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்னும் எட்டுங்கொண்டு மூர்த்தி ; இறைவன்.

* இத் திருப்பதிகத்தில் முதல் மூன்று பாடல்கள் தலைவி நிலை கண்டு வருந்தி நற்றாய் கூறிய கூற்றாகும். பின் இரண்டு பாடல்கள் தலைவனை நினைந்து தலைவி இரங்கிக் கூறுவதாகும்.

1. துன்னம் - கிழிந்த. சுண்ணம் - பொடி. பொன் நக்கு அன்ன - பொன் நகைத்தது போன்ற. மின் - மின்னல். என்னுக்கோ-எதற்கோ.

2. இரைக்கும் - சீறும். நுண்ணிய - நுட்பமான. உரைக்குமா - சொல்லுமாறு. ஒள் வளை - ஒள்ளிய வளையல். சோரும் - கழலும்.

ஓசொ லாய்மக ளேமுறை யோவென்று
பூசல் நாமிடு தும்புக லூரர்க்கே. 3

மின்னி னேரிடை யாளுமை பங்கனைத்
தன்னை நேரொப் பிலாத இலைவனைப்
புன்னைக் கானற் பொழிற்புக லூரனை
என்னு ளாகவைத் தின்புற் றிருப்பனே. 4

விண்ணி னார்மதி சூடிய வேந்தனை
எண்ணி நாமங்கள் ஓதி எழுத்தஞ்சுங்
கண்ணி னாற்கழல் காண்பிட மேதெனில்
புண்ணி யன்புக லூருமென் நெஞ்சுமே. 5

திருச்சிற்றம்பலம்

---

10. திருஅதிகைவீரட்டம் *

திருக்குறுந்தொகை [5-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

கோணன் மாமதி சூடியோர் கோவணம்
நாணில் வாழ்க்கை நய்ந்தும் பயனிலை

---

3. என் சோர் குழல் - எனது பெண்ணுக்கு. ஏசலாம் பழி - பிறர் இகழ்ந்து கூறும் பழிச்சொல். எழில் - அழகை. முறையோ - இது முறையா. பூசல் - ஆரவாரம். இடுதும் - செய்வோம்.

4. மின்னின் ஏர் - மின்னலை ஒத்த. புன்னைக் கானல் பொழில் - புன்னை மரங்கள் அடர்ந்த கடற்கரைச் சோலை. என் உளாக - என்னுடைய உள்ளத்தில் வீற்றிருக்கும்படி.

5. எண்ணி - நினைத்து. நாமங்கள் - திருப்பெயர்களையும். எழுத்து அஞ்சும் - திருவைந்தெழுத்தையும். கண்ணினால் - (மனத்தின் கண்) கருதினால்.

* இத் திருப்பதிகம் தலைவனைப் பிரிந்த தலைவி ஆற்றாளாய்க் கண் துயில் பெறாது கங்குல் நோதல் என்ற துறையுள் அமைந்ததாகும். இங்கு வீரட்டனைக் கண்டால் அல்லது கண் துயில் பெறாது என்றமை காண்க.

1. கோணல் மாமதி - பிறைச் சந்திரன். பாணில் - பண்ணினால்: பாணர்களால் வாசிக்கின்ற. வீணை பயின்றவன்-வீணா தட்சிணாமூர்த்தி.

பாணில் வீணை பயின்றவன் **வீரட்டம்**
காணில் அல்லதென் கண்துயில் கொள்ளுமே. 1

பண்ணி னைப்பவ ளத்திரள் மாமணி
அண்ண லைஅம ரர்தொழும் ஆதியைச்
சுண்ண வெண்பொடி யான்திரு **வீரட்டம்**
நண்ணில் அல்லதென் கண்துயில் கொள்ளுமே. 2

உற்ற வர்தம் உறுநோய் களைபவர்
பெற்றம் ஏறும் பிறங்கு சடையினர்
சுற்றும் பாய்புனல் சூழ்திரு **வீரட்டம்**
கற்கில் அல்லதென் கண்துயில் கொள்ளுமே. 3

முற்று வெண்மதி சூடும் முதல்வனுர்
செற்றூர் வாழுந் திரிபுரந் தீயெழ
விற்றான் கொண்டெயில் எய்தவர் **வீரட்டம்**
கற்றூல் அல்லதென் கண்துயில் கொள்ளுமே. 4

பல்லா ரும்பல தேவர் பணிபவர்
நல்லா ருந்நயந் தேத்தப் படுபவன்
வில்லால் மூவெயில் எய்தவன் **வீரட்டம்**
கல்லே னாகிலென் கண்துயில் கொள்ளுமே. 5

வண்டார் கொன்றையும் மத்தம் வளர்சடைக்
கொண்டான் கோல மதியோ டரவமும்

வீரட்டம் காணில் அல்லது - இறைவனின் வீரட்டத்தினைக் கண்டால் அல்லது. கொள்ளுமே - கொள்ளுமோ.

2. பண்ணினை - இசை வடிவாக இருப்பவனை. ஆதியை - முதல்வனை. நண்ணில் அல்லது - அடைந்தால் அல்லது.

3. உற்றவர் தம் - தம்மை வந்தடைந்தவரின். உறு நோய்-மனக் கவலை. பிறங்கு - விளங்குகின்ற. கற்கில் அல்லது - கற்றூல் அல்லது.

4. முற்று - முதிராத. செற்றூர் - பகைவர். கற்றூல் அல்லது - கற்கில் அல்லது.

5. பல்லாரும் - பலரும். வில்லால் - மேரு வில்லால். மூவெயில் - மும்மதில்; திரிபுரம். கல்லேன் ஆகில் - கற்றுப் பழகாவிட்டால்.

6. மத்தம் - ஊமத்தம். கோலம் - அழகு. விண்டார் - பகைவர்; திரிபுரர். கண்டால் அல்லது - காணில் அல்லாமல்.

விண்டார் மும்மதி லெய்தவன் வீரட்டம்
கண்டால் அல்லதென் கண்துயில் கொள்ளுமே. 6

அரையார் கோவண ஆடையன் ஆறெலாந்
திரையார் ஒண்புனல் பாய்கெடி லக்கரை
விரையார் நீற்றன் விளங்குவீ ரட்டன்பால்
கரையே னாகிலென் கண்துயில் கொள்ளுமே. 7

நீறு டைத்தடந் தோளுடை நின்மலன்
ஆறு டைப்புனல் பாய்கெடி லக்கரை
ஏறு டைக்கொடி யான்திரு வீரட்டம்
கூறில் அல்லதென் கண்துயில் கொள்ளுமே. 8

செங்கண் மால்விடை யேறிய செல்வனார்
பைங்க ணானையின் ஈருரி போர்த்தவர்
அங்கண் ஞாலம தாகிய வீரட்டம்
கங்கு லாகஎன் கண்துயில் கொள்ளுமே. 9

பூணா னாரம் பொருந்த வுடையவர்
நாணா கவ்வரை வில்லிடை யம்பினால்
பேணார் மும்மதி லெய்தவன் வீரட்டம்
காணே னாகிலென் கண்துயில் கொள்ளுமே. 10

வரையார்ந் தவயி ரத்திரள் மாணிக்கம்
திரையார்ந் தபுனல் பாய்கெடி லக்கரை

---

7. அரையார் - இடையிலே பொருந்திய. கெடிலக்கரை - கெடில நதிக் கரையில். கரையேன் ஆகில் - மனங்கரைந்து உருகாவிட்டால்.

8. நின்மலன் - பரிசுத்தன். ஏறுடைக் கொடியான் - இடபக் கொடியை யுடையவன். கூறில் அல்லது - பேசினால் அல்லது.

9. செங்கண் - சிவந்த கண்களையுடைய. பைங்கண் - பசிய கண்களையுடைய. ஆனையின் - யானையின். உரி - தோல். அங்கண் - இடம் அகன்ற. கங்குலாக - இருளினால் மறைக்கப்பட்ட.

10. பூண் - ஆபரணமாக. நாரம் - பாசி மணியை. நாண் நாகம் - வாசுகி என்னும் பாம்பைக் கயிறாக. பேணார் - பகைவர். காணேன் ஆகில் - காணாவிட்டால்.

11. வரை ஆர்ந்த - மலைகளில் பொருந்திய. உரையேனாகில் - சொல்லேனாகில். விரை ஆர் - வாசனை பொருந்திய.

விரையார் நீற்றன் விளங்கிய வீரட்டம்
உரையே னாகிலென் கண்துயில் கொள்ளுமே. 11

உலந்தார் வெண்டலை உண்கல னாகவே
வலந்தான் மிக்கவிவ் வாளரக் கன்றனைச்
சிலம்பார் சேவடி யூன்றினான் வீரட்டம்
புலம்பே னாகிலென் கண்துயில் கொள்ளுமே. 12

திருச்சிற்றம்பலம்

---

11. திருமருகல் *

திருக்குறுந்தொகை [5-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

ஓது பைங்கிளிக் கொண்பா லமுதூட்டிப்
பாது காத்துப் பலபல கற்பித்து
மாது தான்மரு கற்பெரு மானுக்குத்
தூது சொல்ல விடத்தான் தொடங்குமே. 4

இன்ன வாறென்ப துண்டறி யேனின்று
துன்னு கைவளை சோரக்கண் ணீர்மல்கும்
மன்னு தென்மரு கற்பெரு மான்திறம்
உன்னி யொண்கொடி யுள்ளம் உருகுமே. 5

சங்கு சோரக் கலையுஞ் சரியவே
மங்கை தான்மரு கற்பெரு மான்வரும்

---

12. உலந்தார் - அழிந்த பிரம விஷ்ணு முதலியோர். வலம்-பலம். சிலம்பு - கயிலைமலை. புலம்பேன் ஆகில் - பன்னிப் பன்னிப் பேசேனாகில்.

* இத்திருத்தலப் பாடல்கள் தலைவனைப் பிரிந்த தலைவி வருந்தும் நிலை கண்டு நற்றாய் இரங்கிக் கூறும் கூற்றாக அமைந்துள்ளனவாகும்.

4. ஓது-சொல்லியதைக் கேட்டுச் சொல்கின்ற. பைங்கிளிக்கு-பசிய கிளிக்கு. மாதுதான் - தலைவிதான். தூது - தன்னிலையைக் குறிப்பிட்டு அவரிடம் சென்று தெரிவித்து அழைத்து வருமாறு அனுப்புவது.

5. துன்னு - பொருந்திய. கைவளை - கையில் அணிந்திருந்த வளையல். திறம் - திறமை. உன்னி - நினைந்து. ஒண்கொடி - தலைவி. உருகும் - கரைவாள்.

அங்க வீதி யருகணை யாநிற்கும்
நங்கை மீரிதற் கென்செய்கேன் நாளுமே. 6

காட்சி பெற்றில ளாகிலுங் காதலே
மீட்சி யொன்றறி யாது மிகுவதே
மாட்சி யார்மரு கற்பெரு மானுக்குத்
தாட்சி சாலவுண் டாகுமென் தையலே. 7

நீடு நெஞ்சுள் நினைந்துகண் நீர்மல்கும்
ஓடு மாலினோ டொண்கொடி மாதரான்
மாட நீள்மரு கற்பெரு மான்வரில்
கூடு நீயென்று கூடல் இழைக்குமே. 8

கந்த வார்குழல் கட்டிலள் காரிகை
அந்தி மால்விடை யோடும்அன் பாய்மிக
வந்தி டாய்மரு கற்பெரு மானென்று
சிந்தை செய்து திகைத்திடுங் காண்மினே. 9

திருச்சிற்றம்பலம்

---

6. சங்கு - சங்க வளையல், கலை - ஆடை, அங்க வீதி - அலங்கார வீதி; உலா வரும் வீதி. நிற்கும் - நிற்பாள். நங்கைமீர் - தோழிமார்களே. செய்கேன் - செய்வேன்.

7. காட்சி - காணுதல். மீட்சி - மீளுதல். தாட்சி - விருப்பம் என் தையல் - எனது பெண்ணிடம்.

8. மாலினோடு ஓடும் - விரகதாபத்துடன் ஓடுவாள். கூடல் இழைத்தல் - தரையில் தொடர்ந்து சுழிகள் கீறிக்கொண்டே வந்து பின் தொடங்கிய இடத்திலே வரும்போது கூடுதல்; இது காரியம் கைகூடுமா என்று பார்க்கும் ஒரு வழக்கு. இழைக்கும் - இழைப்பாள்.

9. கந்தம் - வாசனை, காரிகை - பெண். வந்திடாய் - வருவாய். திகைத்திடும் - திகைப்பாள். குழல் கட்டிலள் - கூந்தலை ஒப்பனை செய்து கொள்ளவில்லை; இது பிரிந்து வருந்தும் பெண்ணின் நிலை.

12. திருஆமாத்தூர் *

திருத்தாண்டகம் [6-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

வண்ணங்கள் தாம்பாடி வந்து நின்று
வலிசெய்து வளைகவர்ந்தார் வகையால் நம்மைக்
கண்ணம்பால் நின்றெய்து கனலப் பேசிக்
கடியதோர் விடையேறிக் காபா லியார்
சுண்ணங்கள் தாங்கொண்டு துதையப் பூசித்
தோலுடுத்து நூல்பூண்டு தொன்றத் தோன்ற
அண்ணலார் போகின்றார் வந்து காணீர்
அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே. 1

வெந்தார்வெண் பொடிப்பூசி வெள்ளை மாலை
விரிசடைமேற் றாஞ்சூடி வீணை யேந்திக்
கந்தாரந் தாம்முரலாப் போகா நிற்கக்
கறைசேர் மணிமிடற்றீ ரூரே தென்றேன்
நொந்தார்போல் வந்தென தில்லே புக்கு
நுடங்கே ரிடைமடவாய் நம்மூர் கேட்கில்
அந்தா மரைமலர்மேல் அளிவண் டியாழ்செய்
ஆமாத்தூர் என்றடிகள் போயி னாரே. 2

---

* இத்திருப்பதிகம் தலைவனது காட்சியில் ஈடுபட்ட தலைவியின் கூற்றாக அமைந்துள்ளது; இது கனவில் தலைவனைக் கண்டு மனமிழந்து மையல் கொண்ட தலைவி, களவிழந்து வருந்தல் என்ற துறையின் பாற்படும்.

1. வண்ணம் - ஒரு பாவின்கண் நிகழும் ஓசைவேறுபாடு; சந்தப் பாட்டு. வலி செய்து - மையல் புரிந்து உடல் இளைக்கச் செய்து. கண் அம்பு - கண்ணாகிய அம்பு. கனலப்பேசி - விரகநோய் மிகும்படி பேசி. கடியதோர் - கடு நடையுடையதொரு. சுண்ணங்கள் - வெண்ணீறு, சந்தனம் முதலியன. அழகியரே - பெயரால்மட்டும் அன்றி குணத்தாலும் மிக அழகியவர். ஐயனார் - தலைவர்.

2. வெள்ளை மாலை - வெள்ளெலும்பு மாலை. கந்தாரம் - காந்தாரம் என்ற பண். கறை - விடம். ஊர் - உமது ஊர். நொந்தார்போல் - வருந்தியவரைப்போல. நுடங்கு - அசைகின்ற. ஏர் இடை - அழகிய இடை. அளி - வண்டின் ஒருவகை.

கட்டங்கந் தாமொன்று கையி லேந்திக்
கடிய விடையேறிக் காபா லியார்
இட்டங்கள் தாம்பேசி யில்லே புக்கு
இடும்பலியும் இடக்கொள்ளார் போவா ரல்லர்
பட்டிமையும் படிறுமே பேசா நின்றார்
பார்ப்பாரைப் பரிசழிப்பார் போல்கின் றார்தாம்
அட்டிய சில்பலியுங் கொள்ளார் விள்ளார்
அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே. 3

பசைந்தபல பூதத்தர் பாட லாடல்
படநாகக் கச்சையர் பிச்சைக் கென்றங்
கிசைந்ததோ ரியல்பினர் எரியின் மேனி
இமையாமுக் கண்ணினர் நால்வே தத்தர்
பிசைந்ததிரு நீற்றினர் பெண்ணோர் பாகம்
பிரிவறியாப் பிஞ்ஞகனார் தெண்ணீர்க் கங்கை
அசைந்த திருமுடியர் அங்கைத் தீயர்
அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே. 4

உருளுடைய தேர்புரவி யோடும் யானை
யொன்றாலுங் குறைவில்லை யூர்தி வெள்ளே(று)
இருளுடைய கண்டத்தர் செந்தீ வண்ணர்
இமையவர்கள் தொழுதேத்தும் இறைவ னார்தாம்

---

3. கட்டங்கம் - மழுவாயுதம். கடிய - விரைய. இட்டங்கள் - விருப்பங்கள் உண்டாகும் வார்த்தைகள். கொள்ளார் - கொள்ள மாட்டார். போவார் அல்லர் - போகமாட்டார். பட்டிமை - வஞ்சனை. படிறு - பொய். பார்ப்பாரை - நோக்குகின்றவர்களை. பரிசு - கற்பு முதலிய தன்மைகளை. அட்டிய - சமைத்த. விள்ளார் - பலி கொள்ளாமைக்குக்காரணம் கூறார்.

4. பசைந்த - அன்பு கொண்ட. கச்சை - இடைக்கட்டு. பிச்சை - பலி. நால்வேதத்தர் - இருக்கு முதலிய நான்கு வேதங்களையும் மொழிந்தவர். பிசைந்த - வடித்தெடுத்த. பிரிவு அறியா - என்றும் பிரிதல் அறியாத.

5. உருள் - சக்கரம். குறைவில்லை என்றாலும் ஊர்தி வெள்ளேறு என்க. இருள் - இங்கு விஷம். பொருள் - உடைமை. இலருமல்லர் - இல்லாதவரும் அல்லர். அம் கோதை மாலை - மிக அழகிய பூமாலை.

பொருளுடைய ரல்லர் இலரு மல்லர்
புலித்தோ லுடையாகப் பூதஞ் சூழ
அருளுடைய அங்கோதை மாலை மார்பர்
அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே. 5

வீறுடைய ஏறேறி நீறு பூசி
வெண்தோடு பெய்திடங்கை வீணை யேந்திக்
கூறுடைய மடவாளோர் பாகங் கொண்டு
குழையாடக் கொடுகொட்டி கொட்டா வந்து
பாறுடைய படுதலையோர் கையில் ஏந்திப்
பலிகொள்வார் அல்லர் **படிறே பேசி**
ஆறுடைய சடைமுடியெம் மடிகள் போலும்
அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே. 6

கையோர் கபாலத்தர் மானின் தோலர்
கருத்துடையர் நிருத்தராய்க் காண்பார் முன்னே
செய்ய திருமேனி வெண்ணீ றாடித்
திகழ்புன் சடைமுடிமேல் திங்கள் சூடி
மெய்யொரு பாகத் துமையை வைத்து
மேவார் திரிபுரங்கள் வேவச் செய்து
ஐயனார் போகின்றார் வந்து காணீர்!
அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே. 7

ஒன்றாலுங் குறைவில்லை ஊர்தி வெள்ளே(று)
ஒற்றியூர் உம்மூரே உணரக் கூறீர்!
நின்றுதான் என்செய்வீர்! போவீராகில்
நெற்றிமேற் கண்காட்டி **நிறையுங் கொண்டீர்**

---

6. வீறு - பெருமை; வேகம், தோடு - குண்டலம், கொடு கொட்டி - ஒரு கூத்து, கொட்டா - கொட்டி. பாறு - பருந்து. ஆறு - கங்கை.

7. கபாலத்தர் - பலி பாத்திரம் ஏந்தியவர், மெய் - உடல், ஒரு பாகம் - இடது பாகம், மேவார் - பகைவர், வந்து காணீர் - (தோழி மார்களே) வந்து பார்ப்பீர்களாக.

8. ஒற்றியூர் - திருவொற்றியூர்; ஒற்றி வைத்த ஊருமாம், கண் காட்டி - அருட் பார்வை செய்து: கண்ணால் சைகை செய்து.

என்றுந்தான் இவ்வகையே இடர்செய் கின்றீர்
இருக்குமூர் இனியறிந்தோம் ஏகம் பமோ
அன்றித்தான் போகின்றீர் அடிக ளெம்மோ(டு)
அழகியரே ஆமாத்தூர் ஐய னரே. 8

கல்லலகு தாங்கொண்டு கள்ளத் தியார்
கடிய விடையேறிக் காணக் காண
இல்லமே நாம்புகுதா இடுமின் பிச்சை
என்றருக் கெதிரெழுந்தேன் எங்குங் காணேன்
சொல்லாதே போகின்றீர் **உம்மூர் ஏது ?**
துருத்தி பழனமோ நெய்த்தா னமோ
அல்லலே செய்தடிகள் போகின் றூர்தாம்
அழகியரே ஆமாத்தூர் ஐய னரே. 9

மழுங்கலா நீறுடும் மார்பர் போலும்
மணிமிழலை மேய மணாளர் போலும்
கொழுங்குவளைக் கோதைக் கிறைவர் போலும்
கொடுகொட்டி தாள முடையார் போலும்
செழுங்கயி லாயத்தெஞ் செல்வர் போலும்
தென்னதிகை வீரட்டஞ் சேர்ந்தார் போலும்
அழுங்கினர் ஐயுறவு தீர்ப்பார் போலும்
அழகியரே ஆமாத்தூர் ஐய னரே. 10

திருச்சிற்றம்பலம்

நிறை - பெண்மை நலம்; கற்பு. என்றும்தான் இவ்வகையே இடர் செய்கின்றீர் – நாடோறும் இவ்வாறே இடர் புரிகின்றீர்; இஃது உமது தொழிலாகும். ஏகம்பம் - கச்சியேகம்பம்; காஞ்சிபுரம்.

9. கல்லலகு – ஒருவகை வாத்தியம். எதிர் எழுந்தேன் எங்குங் காணேன் - இது கனவிழந்த நிலையைக் குறிப்பது. துருத்தி - திருத் துருத்தி; திருப்பூந்துருத்தி.

10. மழுங்கலா – என்றும் அழியாத. நீறு - திருவெண்ணீறு. மிழலை - திருவீழிமிழலை. அதிகை - திருவதிகை. அழுங்கினர் - இன்னலுற்றுத் தம்மை அடைந்தவர்.

13. திருப்புறம்பயம் *

திருத்தாண்டகம் [6-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

கொடிமாட நீடெருவு கூடல் கோட்டூர்
கொடுங்கோளூர் தண்வளவி கண்டி யூரும்
நடமாடு நன்மருகல் வைகி நாளும்
நலமாகும் ஒற்றியூர் ஒற்றி யாகப்
படுமாலை வண்டறையும் பழனம் பாசூர்
பழையாறும் பாற்குளமுங் கைவிட் டிந்நாள்
பொடியேறு மேனியராய்ப் பூதஞ் சூழப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. 1

முற்றொருவர் போல முழுநீ றாடி
முளைத்திங்கள் சூடிமுந் நூலும் பூண்டு
ஒற்றொருவர் போல **உறங்கு வேன்கை**
ஒளிவளையை ஒன்றொன்றா எண்ணு கின்றார்
மற்றொருவர் இல்லைத் துணை யெனக்கு
மால்கொண்டாற் போல மயங்கு வேற்குப்
புற்றரவக் கச்சார்த்துப் பூதஞ் சூழப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. 2

---

* இத் திருப்பதிகம் தலைமகள் தலைவனைக் கனவிற்கண்டு ஊர் கேட்டுத் தெரிந்துகொண்டதுபோன்று உரைக்கும் வகையில் அமைந்துள்ளது. இதனுள் புறம்பயம் கயிலையையே போல்வதாகும் என அத்தலத்தின் சிறப்பினையுரைக்குந்திறன் அறிதற்குரியது.

1. நீள் + தெருவு - நீடெருவு. கூடல் - மதுரை. படுமாலை - கட்டிய மாலை. பழனம் - திருப்பழனம். பாற்குளம் - இது வைப்புத் தலம். பொடி - திருநீறு. போயினார் - சொல்லிக்கொண்டே சென்றார்.

2. முற்று ஒருவர்போல - எல்லாம் அறிந்த ஒருவர்போல. முளைத் திங்கள் - இளம்பிறை. முந்நூல் - பூணூல். ஒற்று ஒருவர்போல - தூதர்போல. உறங்குவேன் - தூங்குகின்ற என்னுடைய. வளை-வளையல். ஒன்றொன்று - ஒவ்வொன்றை. மால் - மயக்கம்; காம மயக்கம்.

ஆகாத நஞ்சுண்ட அந்திவண்ணர் ஐந்தலைய
மாசுணங்கொண் டம்பொற் றேள்மேல்
ஏகாச மாவிட்டோ டொன்றேந் திவந்(து)
இடுதிருவே பலியென்றூர்க் கில்லே புக்கேன்
பாகேதுங் கொள்ளார் பலியுங் கொள்ளார்
பாவியேன் கண்ணுள்ளே பற்றி நோக்கிப்
போகாத வேடத்தர் பூதஞ் சூழப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. 3

பன்மலிந்த வெண்டலை கையி லேந்திப்
பனிமுகில்போல் மேனிப் பவந்த நாதர்
நென்மலிந்த நெய்த்தானஞ் சோற்றுத் துறை
நியமந் துருத்தியும் நீடூர் பாச்சில்
கன்மலிந் தோங்கு கழுநீர்க் குன்றங்
கடனாகைக் காரோணங் கைவிட் டிந்நாள்
பொன்மலிந்த கோதையருந் தாமு மெல்லாம்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. 4

செத்தவர்தந் தலைமாலை கையில் ஏந்திச்
சிரமாலை சூடிச் சிவந்த மேனி
மத்தகத்த யானை யுரிவை மூடி
மடவா ளவளோடு மானொன் றேந்தி

---

3. ஆகாத - துன்பஞ்செய்யும். மாசுணம் - பாம்பு. ஏகாசம் - உத்தரீயம். திருவே - இலக்குமிபோன்ற பெண்ணே. பாகு - பிச்சை. கண்ணுள்ளே பற்றி - கண்ணின்கண் நீங்காது நின்று. போகாத - நீங்காத.

4. பன் மலிந்த - பற்கள் நிறைந்த. பனிமுகில் - வெண்முகில்; திருநீற்று வெண்மை. மேனிப் பவந்த நாதர் - இடது பாகத்தை உமா தேவியாருக்குப் பகிர்ந்தளித்த இறைவர். நியமம் - பருதிநியமம். நாகை - நாகைப்பட்டினம். பொன் மலிந்த - பொன்னிறமான தேமல் நிறைந்த.

5. செத்தவர்தம் - இறந்த பிரம விஷ்ணுக்களின். உரிவை-தோல். மடவாள் அவள் - உமாதேவியார். ஆடல் - திருக்கூத்து. புத்தகம் - இங்குச் சிவஞானபோதம் என்னும் நூல்.

அத்தவத்த தேவர் அறுப தின்மர்
ஆறுநா ற்றுயிரவர்க் காடல் காட்டிப்
புத்தகங் கைக்கொண்டு புலித்தோல் வீக்கிப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. 5

நஞ்சடைந்த கண்டத்தர் வெண்ணீ றூடி
நல்லபுலி யதள்மேல் நாகங் கட்டிப்
பஞ்சடைந்த மெல்விரலாள் பாக மாகப்
பராய்த்துறையேன் என்றோர் பவள வண்ணர்
துஞ்சிடையே வந்து துடியுங் கொட்டத்
துண்ணென் றெழுந்திருந்தேன் சொல்ல மாட்டேன்
புன்சடையின் மேலோர் புனலுஞ் சூடிப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. 6

மறியிலங்கு கையர் மழுவொன் றேந்தி
மறைக்காட் டேன் என்றோர் **மழலை பேசிச்**
செறியிலங்கு திண்தோள்மேல் நீறு கொண்டு
திருமுண்ட மாஇட்ட திலக நெற்றி
நெறியிலங்கு **கூந்தலார் பின்பின் சென்று**
நெடுங்கண் பனிசோர நின்று நோக்கிப்
பொறியிலங்கு பாம்பார்த்துப் பூதஞ் சூழப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. 7

நில்லாதே பல்லூரும் பலிகள் வேண்டி
நிரைவளையார் பலிபெய்ய **நிறையுங்** கொண்டு
கொல்லேறுங் கொக்கரையுங் கொடுகொட் டியுங்
குடமூக்கில் அங்கொழியக் குளிர்தண் பொய்கை

---

6. பஞ்சு அடைந்த - செம்பஞ்சுக்குழம்பு பூசிய. துஞ்சிடையே வந்து - கனவின்கண் வந்து. துடி - உடுக்கை. கொட்ட - அடிக்க துண்ணென்று - திடுக்கென.

7. மறி - மான். மழலை பேசி - இனிய சொல்லைப் பேசி. திருமுண்டமா-அழகிய வட்டமாக. பனி சோர-நீர் துளிக்க. பொறி-புள்ளி.

8. பல்லூர் - பற்பல ஊர்கள். நிரை - ஒழுங்கு. நிறை - பெண்ணின் நலம். ஏறு - இடபம். கொக்கரை - ஒரு வாத்தியம். குடமூக்கு - கும்பகோணம். பொல்லாத - தகாத.

நல்லானை நல்லூரே தவிரேன் என்று
நறையூரிற் றாமுந் தவிர்வார் போலப்
பொல்லாத வேடத்தர் பூதஞ் சூழப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. 8

விரையேறு நீறணிந்தோ ராமை பூண்டு
வெண்டோடு பெய்திடங்கை வீணை ஏந்தித்
திரையேறு சென்னிமேல் திங்கள் தன்னைத்
திசைவிளங்க வைத்துகந்த செந்தீ வண்ணர்
அரையேறு மேகலையாள் பாக மாக
ஆரிடத்தி லாட லமர்ந்த ஐயன்
புரையேறு தாமேறிப் பூதஞ் சூழப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. 9

கோவாய இந்திரனுள் ளிட்டா ராகக்
குமரனும் விக்கின விநாய கன்னும்
பூவாய பீடத்து மேல யன்னும்
பூமி யளந்தானும் போற்றி சைப்பப்
பாவாய இன்னிசைகள் பாடி யாடிப்
பாரிடமுந் தாமும் பரந்து பற்றிப்
பூவார்ந்த கொன்றை பொறிவண் டார்க்கப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே. 10

திருச்சிற்றம்பலம்

---

9. விரை ஏறு - வாசனை நிறைந்த. திரை ஏறு - அலையையுடைய கங்கை பொருந்திய. அரை - இடை. மேகலையாள் - இங்கு உமா தேவியார். புரை ஏறு - வெள்ளிய இடபம்.

10. கோ - தலைவன். பூவாய பீடம் - வெண்டாமரைப் பீடம். பாரிடம் - பூதம். கொன்றை - கொன்றைப்பூவில்.

14. திருவாரூர் *

திருத்தாண்டகம் [6-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள் ;
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள் ;
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள் ;
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள் ;
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள் ;
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள் ;
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே. 7

திருச்சிற்றம்பலம்

---

* இத் திருத்தாண்டகச் செய்யுள், முதலில் தலைவனது பெயர் கேட்டுப் பின்னர் அவனது வண்ணங்கேட்டுப் பிறகு அவனுடைய ஊர் கேட்டு, அவன்பால் அன்புகொண்டு, பெற்றோரை மறந்து, பின் உலகப் பற்றையேவிட்டுத் தன் நிலையழிந்து, பேருங்கெட்டு அவனது அன்பின் நிறைவிலேயே ஈடுபட்டு அடங்கியுள்ளாள் என்ற தலைவியினது நிலையினை உணர்த்துகின்றது.

நங்கை முதலில் தலைவனை உத்தேச முறைபற்றி உணர்ந்தாள்; அதனால் அவனுக்குரிய இலக்கணம் இவை என இடையே உணர்ந்தாள்; பின்னர் அதனைப் பரீட்சித்து உணர்ந்தாள்; அதனால் உலகப்பற்று நீங்குதலால் அவன்கண் பேரன்பு உடையவள் ஆனாள்; அதனால் மாயையின் வசப்படாது, சீவத்துவம் நீங்கிச் சிவத்துவம் உடையவள் ஆனாள். அதனால் இனி அவள் அத்தலைவன் தாளை அடைதல் உறுதியாகும்.

இங்கு நாமம் கேட்டல் - உத்தேசம்; வண்ணங் கேட்டல் - இலக்கணம்; ஆரூர் கேட்டல் - பரீட்சை; பிச்சியாதல் - தெளிதல்; தன்னை மறத்தல் - நிட்டை கூடுதல்; நாமம் கெடுதல் - சீவன் சிவனாதல்; இரண்டு ஒன்றாதல். பிச்சி - பித்துடையவள்; அத்தன் — தந்தை: இங்கு அன்னை உடம்பையும், அத்தன் ஆணவ மலத்தையும் குறித்தலும் ஆகும். ஆசாரம் - ஒழுக்கம்; இறைபணி நிற்றல். அவனுக்கே - ஏகாரம்: பிரிநிலைக்கண் வந்தது. தாளே - ஏகாரம்: தெளிவு.

இதனுள் உயிர்கள் படிப்படியாய் இறைவனை அடைந்து சிவானந்தப் பெருவெள்ளத்தில் திளைத்துநிற்கும் தன்மை விளக்கப்பெறுகின்றது.

15. திருவெண்காடு *

திருத்தாண்டகம் [6-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

தூண்டு சுடர்மேனித் தூநீ றாடிச்
சூலங்கை யேந்தியோர் சுழல்வாய் நாகம்
பூண்டு பொறியரவங் காதிற் பெய்து
பொற்சடைக ளவைதாழப் புரிவெண் ணூலர்
நீண்டு கிடந்திலங்கு திங்கள் சூடி
நெடுந்தெருவே வந்தெனது நெஞ்சங் கொண்டார்
வேண்டு நடைநடக்கும் வெள்ளே றேறி
வெண்காடு மேவிய விகிர்த னாரே. 1

நென்னலையோர் ஓடேந்திப் பிச்சைக் கென்று
வந்தார்க்கு வந்தேனென்(று) இல்லே புக்கேன்
அந்நிலையே நிற்கின்றார் ஐயங் கொள்ளார்
அருகே வருவார்போல் நோக்கு கின்றார்
நுந்நிலைமை யேதோநும் மூர்தான் ஏதோ
என்றேனுக்(கு) ஒன்றாகச் சொல்ல மாட்டார்
மென்முலையார் கூடி விரும்பி யாடும்
வெண்காடு மேவிய விகிர்த னாரே. 3

---

* இத் தலத்திருத்தாண்டகங்கள் தலைவனைக் கனவில் கண்ட தலைவி அவனைப்பற்றிய வரலாறு ஒன்றும் அறிய இயலாது வருந்திக் கூறுவதாக அமைந்துள்ளன.

1. சுடர்மேனி - செம்மேனி. தூ - தூய்மை. நீறு - விபூதி. பொறி - புள்ளி. புரி வெண்ணூல் - முப்புரியாக அமைந்த வெள்ளிய பூணூல். நெடுந்தெரு - நீண்ட திருவீதியிலே; மாடவீதியிலே. வந்து - உலாவந்து. வேண்டும் - விரும்பிய. வெள் ஏறு - வெள்ளிய இடபம்.

3. நென்னல் - நேற்று. ஓடு - வெண்டலை. வந்தேன் - இதோ பிட்சை கொண்டு வந்தேன். ஐயம் - பிட்சை; நோக்குகின்றார் - காமக் குறிப்புத் தோன்றப் பார்க்கின்றார். நுந்நிலைமை - உன்னுடைய நிலைமை. விகிர்தர் - மேலானவர்.

ஆகத் துமையடக்கி யாறு சூடி
ஐவாய் அரவசைத்தங் கானே றேறிப்
போகம் பலவுடைத்தாய்ப் பூதஞ் சூழப்
புலித்தோ லுடையாப் புகுந்து நின்றார்
பாகிடுவான் சென்றேனைப் பற்றி நோக்கிப்
பரிசழித்தென் வளைகவர்ந்தார் பாவியேனை
மேக முகிலுரிஞ்சு சோலை சூழ்ந்த
வெண்காடு மேவிய விகிர்த னாரே. 4

கொள்ளைக் குழைக்காதிற் குண்டைப் பூதங்
கொடுகொட்டி கொட்டிக் குனித்துப் பாட
உள்ளங் கவர்ந்திட்டுப் போவார் போல
உழிதருவர் நான்தெரிய மாட்டேன் மீண்டேன்
கள்ள விழிவிழிப்பர் காணக் கண்ணாற்
கண்ணுளார் போலே கரந்து நிற்பர்
வெள்ளச் சடைமுடியர் வேத நாவர்
வெண்காடு மேவிய விகிர்த னாரே. 5

தொட்டிலங்கு சூலத்தர் மழுவாள் ஏந்திச்
சுடர்க்கொன்றைத் தாரணிந்து சுவைகள் பேசிப்
பட்டிவெள் ளேறேறிப் பலியுங் கொள்ளார்
பார்ப்பாரைப் பரிசழிப்பார் ஒக்கின் றாரால்

---

4. ஆகத்து - உடலில்; இடது பாகத்தில். உமை - உமாதேவியார். ஐவாய் - அழகிய வாயையுடைய. ஆன் - இடபம். பாகிடுவான் - பிட்சையிடும் பொருட்டு. மேக முகில் - வானில் உலவும் மேகங்கள். உரிஞ்சும் - தவழும்.

5. கொள்ளை - மிகுதி. குண்டைப் பூதம் - குள்ளமான பூதம். குனித்து - கூத்தாடி. உழிதருவர் - திரிகின்றவர். கள்ளவிழி - காமக் குறிப்புத்தோன்றும்படி விழிக்கின்ற. வேத நாவர் - வேதம் ஓதும் நாவினையுடையவர்.

6. தொட்டு இலங்கு - கூர்மையாக விளங்குகின்ற. சுவைகள் - காமக்குறிப்புத் தோன்றும்படியான இனிய சொற்கள். பட்டி - இளமையான்; பார்ப்பாரை - நோக்குவோரை. விட்டு இலங்கு - விட்டு விட்டு ஒளி விடுகின்ற.

சட்டிலங்கு வெண்ணீற்றர் கனலப் பேசிக்
கருத்தழித்து வஞ்சகவர்ந்தார் காலை மாலை
விட்டிலங்கு சடைமுடியர் வேத நாவர்
வெண்காடு மேவிய விகிர்த னரே. 6

பெண்பால் ஒருபாகம் பேணா வாழ்க்கைக்
கோள்நாகம் பூண்பனவும் நாணுஞ் சொல்லார்
உண்பார் உறங்குவார் ஒவ்வா நங்காய் !
உண்பதுவும் நஞ்சன்றே லோபி யுண்ணார்
பண்பால் விரிசடையர் பற்றி நோக்கிப்
பாலைப் பரிசழியப் பேசு கின்றார்
விண்பால் மதிசூடி வேதம் ஓதி
வெண்காடு மேவிய விகிர்த னரே. 7

திருச்சிற்றம்பலம்

---

16. திருவொற்றியூர் *

திருத்தாண்டகம் [6-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

வண்டோங்கு செங்கமலக் கழுநீர் மல்கும்
மதமத்தஞ் சேர்சடைமேல் மதியஞ் சூடித்
திண்டோள்கள் ஆயிரமும் வீசி நின்று
திசைசேர நடமாடிச் சிவலோ கனார்

---

7. பேணா - விரும்பாத. கோள் - விடத்தைக்கொண்ட. நங்காய் - தோழிமார்களே. பாலை - குழந்தை. பாலைப்பரிசழிய - பாலினும் இனிமையாக எனினுமாம்.

* இத் தலத் திருத்தாண்டகங்கள் தலைவனைப் பிரிந்து நின்ற தலைவி பிரிவிற்கு ஆற்றாது, வருந்திப் பின்னர், அவனைக் கனவிற்கண்டு, மையல் மிகக்கொண்டு, விழித்துப் பின் கனவும் இழந்து வருந்தும் நிலையில் அமைந்துள்ளன.

1. செங்கமலம், கழுநீர், மத்தம் - இவை இறைவன் தலையிற் சூடுபவை. (மத்தம் - ஊமத்தை) திண் தோள்கள் ஆயிரம் - இஃது இறைவர்க்கு எங்கும் நிறைந்த திருமேனியைக் காட்டும். (ஆயிரம் - அனேகம்.) கனவகம் - கனவு நிலை. கண்டேற்கு என்றன் - கண்டவளாகிய

உண்டார்நஞ் சுலகுக்கோ ருறுதி வேண்டி
ஒற்றியூர் மேய ஒளிவண் ணனுர்
கண்டேன்நான் கனவகத்திற் கண்டேற் கென்றன்
கடும்பிணியுஞ் கடுந்தொழிலுங் கைவிட் டவே. 1

வெள்ளத்தைச் செஞ்சடைமேல் விரும்பி வைத்தீர்
வெண்மதியும் பாம்பு முடனே வைத்தீர்
கள்ளத்தை மனத்தகத்தே கரந்து வைத்தீர்
கண்டார்க்குப் பொல்லாது கண்டீர் எல்லே
சொள்ளத்தான் இசைபாடிப் **பலியுங் கொள்ளீர்**
கோளரவுங் குளிர்மதியுங் கொடியுங் காட்டி
உள்ளத்தை நீர்கொண்டீர் ஓதல் ஓவா
ஒளிதிகழும் ஒற்றியூ ருடைய கோவே. 3

நரையார்ந்த விடையேறி நீறு பூசி
நாகங்கச் சரைக்கார்த்தோர் தலைகை யேந்தி
உரையாவந் தில்புகுந்து பலிதான் வேண்ட
எம்மடிக ளும்மூர்தான் ஏதோ என்ன
விரையாதே கேட்டியேல் வேற்கண் நல்லாய்!
விடுங்கலங்கள் நெடுங்கடலுள் நின்று தோன்றுந்
திரைமோதக் கரையேறிச் சங்க மூருந்
திருவொற்றி யூரென்றார் தீய வாறே. 4

எனக்கு. கடும்பிணி - காம மிக்கநிலை. கடுந்தொழில் - தலைவரைப் பிரிந்த நிலையில் தென்றல், சந்தனம், நிலா முதலிய தண்ணிய பொருள் உடலைச் சுடும் தொழில். கைவிட்ட - இல்லையாயின.

3. கள்ளம் - வஞ்சனை. எல்லே - பகலே உள்ளத்தை நீர் கொண்டீர் - என் மனத்தை நும் வசப்படுத்திக் கொண்டீர். ஓதல் - வேதம் ஓதுதல். ஓவா - இடை விடாத.

4. நாரையார்ந்த - வெண்ணிறம் பொருந்திய. நாகம் கச்சு - பாம்பாகிய இடைக்கட்டை. அரைக்கு - இடைக்கு. தலை - வெண்டலை. வேற்கண் - வேல்போன்ற கண்ணையுடைய. நல்லாய் - பெண்ணே. கலங்கள் - மரக்கலங்கள். சங்கம் - சங்குகள். தீயவாறே - இது காதல் நோய் மீதூர் தலைக் குறிப்பது.

மத்தமா களியானை யுரிவை போர்த்து
வானகத்தார் தானகத்தா ராகி நின்று
பித்தர்தாம் போலங்கோர் பெருமை பேசிப்
பேதையரை அச்சுறுத்திப் பெயரக் கண்டு
பத்தர்கள்தாம் பலருடனே கூடிப் பாடிப்
பயின்றிருக்கும் ஊரேதோ பணியீர் என்ன
ஒத்தமைந்த உத்திரநாள் தீர்த்த மாக
ஒளிதிகழும் ஒற்றியூர் என்கின் றாரே. 5

கடிய விடையேறிக் காள கண்டர்
கலையோடு மழுவாளோர் கையி லேந்தி
இடிய பலிகொள்ளார் போவார் அல்லர்
எல்லாந்தான் இவ்வடிகள் யாரென் பாரே
வடிவுடைய மங்கையுந் தாமு மெல்லாம்
வருவாரை எதிர்கண்டோம் மயிலாப் புள்ளே
செடிபடுவெண் டலையொன் றேந்தி வந்து
திருவொற்றி யூர்புக்கார் தீய வாறே. 6

வல்லராய் வானவர்க ளெல்லாங் கூடி
வணங்குவார் வாழ்த்துவார் வந்து நிற்பார்
எல்லேயெம் பெருமானைக் காணோ மென்ன
எவ்வாற்றால் எவ்வகையால் காண மாட்டார்

---

5. மா - பெரிய. களி - களிப்பினையுடைய. பித்தர்தாம் போல் - பித்துக்கொண்டவரைப்போல. பேதையரை - பெண்களை. பணியீர் - சொல்லீர். ஒத்து அமைந்த - பல நன்மைகளும் கூடி அமைந்த. உத்திர நாள் - பங்குனி உத்திரம். தீர்த்தம் - பெருவிழாவின் முடிவில் நடைபெறும் தீர்த்த வாரி ; இறுதி நாள்.

6. கடிய - வேகமான. காளம் - விஷம் பொருந்திய. கலை - கலைமான். இடிய - இடுகின்ற. வடிவுடைய மங்கை - இஃது இத்தலத்து இறைவியின் திருநாமம். மயிலாப்பு - திருமயிலாப்பூர். செடி - துன்பம்.

7. வல்லராய் - வல்லமையுடையவராய். எல்லே - பகலே. நேடி - தேடி. அடிகேள் - சுவாமீ. ஒல்லை - விரைவு. திரை - கடல் அலைகள். ஓதம் - (அந்த) அலைநீர்.

நல்லார்கள் நான்மறையோர் கூடி நேடி
நாமிருக்கு மூர்பணியீர் அடிகேள் என்ன
ஓல்லைதான் திரையேறி ஓதம் மீளும்
ஒளிதிகழும் ஒற்றியூர் என்கின் றாரே. 7

நிலைப்பாடே நான்கண்ட(து) ஏடீ! கேளாய்
நெருநலைநற் பகலிங்கோ ரடிகள் வந்து
கலைப்பாடுங் கண்மலருங் கலக்க நோக்கிக்
கலந்து பலியிடுவேன் எங்குங் காணேன்
சலப்பாடே இனியொருநாட் காண்பே னாகில்
தன்னாகத் தென்னாகம் ஒடுங்கும் வண்ணம்
உலைப்பாடே படத்தழுவிப் போக வொட்டேன்
ஒற்றியூர் உறைந்திங்கே திரிவா னையே. 8

மருவுற்ற மலர்க்குழலி மடவாள் அஞ்ச
மலைதுளங்கத் திசைநடுங்கச் செறுத்து நோக்கிச்
செருவுற்ற வாளரக்கன் வலிதான் மாளத்
திருவடியின் விரலொன்றால் அலற வூன்றி
உருவொற்றி யங்கிருவ ரோடிக் காண
ஓங்கினஅவ் வொள்ளழலார் இங்கே வந்து
திருவொற்றி யூர்நம்மூர் என்று போனார்
செறிவளைகள் ஒன்றொன்றாச் சென்ற வாறே. 10

திருச்சிற்றம்பலம்

---

8. ஏடி - தோழீ! கலைப்பாடும் கண் மலரும் கலக்க - இது நிலை கலங்குதலைக் குறிப்பது. (கலை - ஆடை) தன் ஆகத்து என் ஆகம் ஒடுங்கும் வண்ணம் - இஃது ஒருவரை ஒருவர் தழுவும் வகையினைக் குறிக்கும்; உயிர்கள் இறைவனிடம் ஒடுங்கும் தன்மையினைக் குறித்தலு மாகும்.

10. மலர்க்குழலிமடவாள் - உமாதேவியார். இருவர் - பிரம விஷ்ணுக்கள். ஒள் அழலார்-இலிங்கோற்பவமூர்த்தி. செறி-நிறைந்த. சென்றவாறு - கழன்றவிதம்.

17. திருவலம்புரம் *

திருத்தாண்டகம் [6-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

தீக்கூருந் திருமேனி யொருபால் மற்றை
யொருபாலும் அரியுருவந் திகழ்ந்த செல்வர்
ஆக்கூரில் தான்தோன்றி புகுவார் போல
அருவினையேன் செல்வதுமே அப்பால் எங்கும்
நோக்கார் ஒருவிடத்து நூலுந் தோலுந்
துதைந்திலங்குந் திருமேனி வெண்ணீ றாடி
வாக்கால் மறைவிரித்து **மாயம் பேசி**
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே. 3

மூவாத மூக்கப்பாம் பரையிற் சாத்தி
மூவர் உருவாய முதல்வர் இந்நாள்
கோவாத எரிகணையைச் சிலைமேற் கோத்த
குழகனார் குளிர்கொன்றை சூடி **இங்கே**
போவாரைக் கண்டடியேன் பின்பின் செல்லப்
புறக்கணித்துத் தம்முடைய பூதஞ் சூழ
வாவா வெனவுரைத்து மாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே. 4

அனலொருகை யதுவேந்தி அதளி னோடே
ஐந்தலைய மாநாகம் அரையிற் சாத்திப்
புனல்பொதிந்த சடைக்கற்றைப் பொன்போல் மேனிப்
புனிதனார் புரிந்தமரர் இறைஞ்சி ஏத்தச்

---

* இத்தலத் திருத்தாண்டகங்கள் தலைவன்பால் அன்புகொண்டு நிறை அழிந்து, அவனருளை வேண்டித் தலைவி இரங்கிக் கூறும் நிலையில் அமைந்துள்ளன.

3. தீக்கூரும் - செந்நிறம் பொருந்திய. அரி உருவம் - திருமால் வடிவம். முதல் அடி - கேசவார்த்தமூர்த்தியின் வடிவைக் குறிக்கும். தான்தோன்றி-ஆக்கூரின் திருக்கோயிலின் பெயர். மாயம் பேசி-வஞ்சகமாக வார்த்தையாடி. புக்கு - நுழைந்து. மன்னினார்-எழுந்தருளினார்.

4. மூவாத - முதிராத. மூக்கப் பாம்பு - சீறும் பாம்பு. மூவர் உருவாய முதல்வர் - இது திருமூர்த்தி வடிவைக் குறிக்கும். கோவாத - கோக்காத. சிலை - வில். புறக்கணித்தல் - விலக்குதல்.

சினவிடையை மேல்கொண்டு திருவா ரூருஞ்
சிரபுரமும் இடைமருதுஞ் சேர்வார் போல
மனமுருக வளைகழல மாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே. 5

கறுத்ததொரு கண்டத்தர் காலன் வீழக்
காலினாற் காய்ந்துகந்த காபா லியார்
முறித்ததொரு தோலுடுத்து முண்டஞ் சாத்தி
முனிகணங்கள் புடைசூழ முற்றந் தோறுந்
தெறித்ததொரு வீணையராய்ச் செல்வார் தம்வாய்ச்
சிறுமுறுவல் வந்தெனது சிந்தை வௌவ
மறித்தொருகால் நோக்காதே மாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே. 6

பட்டுடுத்துப் பவளம்போல் மேனி யெல்லாம்
பசுஞ்சாந்தங் கொண்டணிந்து பாதம் நோவ
இட்டெடுத்து நடமாடி இங்கே வந்தாக்(கு)
எவ்வூரீர் எம்பெருமான் என்றேன் ஆவி
விட்டிடுமா றதுசெய்து விரைந்து நோக்கி
வேறோர் பதிபுகப் போவார் போல
வட்டணைகள் படநடந்து மாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே. 7

திருச்சிற்றம்பலம்

---

5. அனல் - மழுவாயுதம். அதள் - புலித்தோல். மனம் உருக - காம மயக்கால் மனம் கசிய (அதனால் உடல் இளைக்க).

6. கறுத்த - கருநிறமான. கபாலியார் - கபாலத்தைக் கையிலுடையவர். முறித்த - கிழித்த. முண்டம் - சிரம். முற்றம் - வாசல். சிறுமுறுவல் - புன் சிரிப்பு.

7. பட்டு - பட்டாடை. பவளம்போல் மேனி - செம்மேனி. சாந்தம் - சந்தனம். வட்டணைகள் பட - தாளம் இடுவது போல; குலுக்கு நடை கொண்டு.

சிவ சிவ

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

தேவாரம்

1. திருவொற்றியூர் *

பண் – குறிஞ்சி [7-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

என்ன தெழிலும் நிறையுங் கவர்வான்
புன்னை மலரும் புறவில் திகழும்
தன்னை முன்னம் நினைக்கத் தருவான்
உன்னப் படுவான் ஒற்றி யூரே. 1

திருச்சிற்றம்பலம்

---

2. திருவாரூர் **

பண் - கொல்லி [7-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

குருகுபா யக்கொழுங் கரும்புகள் நெரிந்தசாறு
அருகுபா யும்வயல் அந்தண்ஆ ரூரரைப்
பருகுமா றும்பணிந் தேத்துமா றுந்நினைந்து
உருகுமா **றும்மிவை உணர்த்தவல் லீர்களே.** 1

---

* இத் திருப்பாடல் உறுப்புநலன் அழிதல், நிறையழிதல் என்ற துறைகளின் பாற்படும்.

1. என்னது - என்னுடைய. எழில் - அழகு. நிறை-உறுதிப்பாடு ; கற்பு. கவர்வான் - கொள்ளை கொள்பவன். புறவு - முல்லை நிலம். உன்னப்படுவான் - நினைக்கப்படுவான்.

** இத்தலத் திருப்பதிகம், தலைவன் பிரிவால் வருந்தும் தலைவி ஆற்றுமை மீக்கூரக் கிள்ளைகள், பூவைகள், வண்டுகள், மேகம் முதலான அஃறிணைப் பொருள்களை விளித்துக் கூறியதாகும்.

1. குருகு - பறவைகள். பாய - பாய்ந்து செல்வதனுல். பருகுமாறும் - அனுபவிக்கும் விதமும். அம் - அழகு. தண் - குளிர்ச்சி. உணர்த்தவல்லீர்களே—என் தலைவனுக்கு அறிவிக்க உங்களால் முடியுமா?

பறக்குமெங் கிள்ளைகாள்! பாடுமெம் பூவைகாள்!
அறக்கண்என் னத்தகும் அடிகளா ரூரரை
மறக்ககில் லாமையும் வளைகள்நில் லாமையும்
உறக்கமில் லாமையும் உணர்த்தவல் லீர்களே. 2

சூழுமோ டிச்சுழன் றுழலும்வெண் நாரைகாள்!
ஆளும்அம் பொற்கழல் அடிகளா ரூரர்க்கு
வாழுமா றும்வளை கழலுமா றும்மெனக்கு
ஊழுமா றும்இவை உணர்த்தவல் லீர்களே. 3

சக்ரவா ளத்திளம் பேடைகாள்! சேவல்காள்!
அக்ரமங் கள்செயும் அடிகளா ரூரர்க்கு
வக்ரமில் லாமையும் வளைகள்நில் லாமையும்
உக்ரமில் லாமையும் உணர்த்தவல் லீர்களே. 4

இலைகள்சோ லைத்தலை இருக்கும்வெண் நாரைகாள்!
அலைகொள்சூ லப்படை அடிகளா ரூரர்க்குக்
கலைகள்சோர் கின்றதும் கனவளை கழன்றதும்
முலைகள்பீர் கொண்டதும் மொழியவல் லீர்களே, 5

வண்டுகாள்! கொண்டல்காள்! வார்மணற் குருகுகாள்!
அண்டவா ணர்தொழும் அடிகளா ரூரரைக்

---

2. கிள்ளைகாள் - கிளிகளே! பூவைகாள் - நாகணவாய்ப்புட்களே! அறக் கண் என்னத் தகும் - அறக் கடவுளுக்குக் கண் என்று கூறத் தகுந்த. வளைகள் - வளையல்கள். உறக்கம் - தூக்கம்.

3. சூழும் ஓடி - சுற்றிலும் ஓடி. வாழுமாறும்-யான் (துன்புற்று) வாழும் விதமும். ஊழுமாறும் - ஊழ்வலியின் தன்மையும்.

4. சக்ரவாளத்து இளம் பேடைகாள் - சக்கிரவாளப் பறவையின் இளம் பேடைகளே! அக்ரமங்கள் - அநியாயம்: இங்கு விரைந்து அருள் செய்யாமையைக் குறிப்பது. வக்ரம் - கோணல்; பிணக்கு. உக்ரம் - கோபம்.

5. இலைகள் சோலைத்தலை - இலைகள் அடர்ந்த சோலைகளிடத்தில். அலைகொள் - வருத்துதலைக்கொண்ட. கலைகள் - ஆடைகள். சோர்தல் - அவிழ்தல். கனவளை - பெரிய வளையல்கள். பீர் - பசலை.

6. கொண்டல்காள் - மேகங்களே. வார்மணல் - நெடிய மணல் மேடுகள். அண்டவாணர் தேவர்கள். கனன்று - மூண்டு. மெய் உண்டவாறும் - உடலை எரித்த விதமும்.

கண்டவா றுங்காமத் தீக்கனன் றெரிந்துமெய்
உண்டவா றும்மிவை உணர்த்தவல் லீர்களே. 6

தேன்நலங் கொண்டதேன் வண்டுகாள்! கொண்டல்காள்!
ஆன்நலங் கொண்டஎம் அடிகளா ரூரர்க்குப்
பால்நலங் கொண்டஎம் பணைமுலை பயந்துபொன்
ஊன்நலங் கொண்டதும் உணர்த்தவல் லீர்களே. 7

சுற்றுமுற் றுஞ்சுழன் றுழலும்வெண் நாரைகாள்!
அற்றமுற் றப்பகர்ந் தடிகளா ரூரர்க்குப்
பற்றுமற் றின்மையும் பாடுமற் றின்மையும்
உற்றுமற் றின்மையும் உணர்த்தவல் லீர்களே. 8

குரவம்நா றக்குயில் வண்டினம் பாடநின்று
அரவமா டும்பொழில் அந்தணா ரூரரைப்
பரவிநா டும்மதும் பாடிநா டும்மதும்
உருகிநா டும்மதும் உணர்த்தவல் லீர்களே. 9

கூடும்அன் னப்பெடை காள்! குயில் வண்டுகாள்!
ஆடுமம் பொற்கழல் அடிகளா ரூரரைப்
பாடுமா றும்பணிந் தேத்துமா றுங்கூடி
ஊடுமா றும்மிவை உணர்த்தவல் லீர்களே. 10

திருச்சிற்றம்பலம்

---

7. தேன் நலம் கொண்ட - தேனின் இனிமையையுண்ட. ஆன் நலம் - பஞ்சகௌவியம். (ஆன் - பசு.) பணை - பருத்த. பொன் பயந்து - பொன்னிறம் பெற்று. ஊன் நலம் - உடலழகை. (ஊன் - உடலுக்கு ஆகுபெயர்).

8. அற்றமுற்றப் பகர்ந்து - சமயம் பார்த்துச் சொல்லி. பற்று மற்று - வேறு ஆதரவு. பாடு — பெருமை. உற்று மற்று - வேறு உறவினர்.

9. குரவம் - குரவமலர். அரவம் - பாம்பு. நாடும் மதும் - நினைப்பதையும்; விரும்புவதையும். உருகி - மனங்கரைந்து.

10. கூடும் - கூடியிருக்கும். குயில் - குயில்காள்! ஆடும் - நடிக்கின்ற. கூடுதல் - சேர்தல். ஊடுதல் — சிறு பிணக்குக் கொள்ளுதல்.

			ரூ.	அ.
28	கந்தர் கலிவெண்பா—மூலம் மட்டும்	...	0	1
29	நீதிநெறி விளக்கம்—ஆங்கிலமும், ஹிந்தியும்	...	0	8
30	சகலகலாவல்லி மாலை—ஆங்கிலமும், ஹிந்தியும் கூடியது ...	...	0	1
31	சிவஞான சித்தியார்—ஆங்கிலமும், ஹிந்தியும் கூடியது ...	...	5	0
32	ஷை ஹிந்தி மட்டும் ...	...	1	0
33	திருக்குறள்—அறத்துப்பால்—ஹிந்தி மொழி பெயர்ப்பு ...	...	1	8
34	ஷை பொருட்பால் ஷை ...	...	2	8
35	ஷை காமத்துப்பால் ஷை ...	...	1	0
	ஷை மூன்று புத்தகங்களும் சேர்ந்து	...	4	0
36	திருக்குறள்—கே. எம். வேங்கடராமையா M. A., B. O. L., அவர்கள் குறிப்புரையுடன்	...	0	12
37	முதுமொழிமேல் வைப்பு—ஸ்ரீ வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள்	...	0	7
38	திருவுசாத்தானக் கல்வெட்டுகள் ...	...	0	6
39	திருச்செந்தூர் கந்தர் கலிவெண்பா-மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்—மதுரைக் கலம்பகம்—நீதிநெறி விளக்கம்—மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை—மதுரை மீனாட்சியம்மை குறம்	...	2	12
40	திருவாரூர் நான்மணிமாலை—முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்	...	1	0
41	சிதம்பர மும்மணிக்கோவை—சிதம்பரச் செய்யுட்கோவை—தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை ...	...	1	0
42	பண்டார மும்மணிக்கோவை—காசிக் கலம்பகம்—சகலகலாவல்லி மாலை ...	...	0	8
43	தமிழிசைப் பாக்கள் ...	...	0	8

கிடைக்குமிடங்கள் :

1 ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்

2 தியாகராச விலாஸ், 53 பிள்ளையார் கோவில் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

குறிப்பு :— ஷை விற்பனைத்தொகை "குமரகுருபரன்" பத்திரிகையைச் சாரும்.

உ

"குமர குருபரன்"

[தமிழ்த் திங்கள் வெளியீடு]

ஸ்ரீவைகுண்டம்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடாலயத்திலிருந்து
விரோதி ஆண்டு தைத் திங்கள் முதல்
மாதந்தோறும் வெளிவருகிறது

★

இது
சைவசித்தாந்தம், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தம், பன்னிரு திருமுறை ஆராய்ச்சி, இலக்கியம், பிற மொழிகள், கலாசாரம் சம்பந்தமான கட்டுரைகள் கொண்டது

★

நிர்வாக ஆசிரியர் :
T. M. குமரகுருபரன் பிள்ளை, B. A., B. L.,
(நிரந்தரத் தலைவர், குமரகுருபரன் சங்கம்)
மானேஜிங் டிரஸ்டி, ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடம்
ஸ்ரீவைகுண்டம்

வருட சந்தா ரூ. 1—8—0 தனிப்பிரதி ரூ. 0—2—0

இம்பீரியல் அச்சகம், பெரியகம்மாளத்தெரு, திருச்சிராப்பள்ளி—55